Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
27.°c 26.°c

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 354 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 30. சனி 16.11.2013

## உதயன் அலுவலகத்தில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன்



உதயன் அலுவலகத்துக்கு நேற்றுப்பயணம் மேற்கொண்ட பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் உதயன் நிர்வாக இயக்குநரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், உதயன் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் ஆகியோரைச் சந்தித்து கலந்துரை யாடும் காட்சி இது. இந்தச் சந்திப்பில் உதயன் மீது கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறித்து நிர்வாக இயக்குநரும், பிரதம ஆசிரியரும் பிரிட்டன் பிரதமருக்கு விரிவாக எடுத்துரைத்தனர். கடந்த ஏப்ரல் மாதம் இனந்தெரியாதோரால் எரிக்கப்பட்ட உதயன் அச்சகத்தையும் அவர் பார்வையிட்டார். (த-21)

# ஊடகவியலாளர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு உதவுவேன்

### உதயனில் வைத்துத் தெரிவித்தார் பிரிட்டன் பிரதமர் கமரூன்

யாழ்ப்பாணம், நவம்பர் 16
''ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு என்னால் இயன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வேன்'' என்று 'உதயன்' அலுவலகத்தில் வைத்துத் தெரிவித்தார் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன்.

'உதயன்' மீதான தாக்குதல் சம்பவங்கள் குறித்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நேரில் பேசுவேன் என்றும் கமரூன் கூறினார்.

யாழ்ப்பாணத்துக்கு முதல் முறையாக வருகை தந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் பலாலி விமான நிலையத்திருலிருந்து காரிலேயே யாழ். பொது நூலகத்துக்கு வருகை தந்தார்.

யாழ்.பொதுநூலகத்துக்கு வருகை தந்த பிரிட்டன் பிரதமர், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனைச் சந்தித்தார். இந்தச்

21

### உதயன் ஊடகவியலாளர்களைச் சந்தித்தது பெருமையளிக்கிறது

David Cameron @David_Cameron
Proud to meet the brave journalists risking their lives to put out a daily paper in N Sri Lanka. pic.twitter.com/MkMU7MdMcz

*அச்சுறுத்தல்களை சந்தித்தபடி இலங்கையில் இருந்து வெளிவரும் பத்திரிகையான உதயனின் ஊடகவியலாளர்களைச் சந்தித்ததில் நான் பெருமையடைகிறேன். கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் புகைப்படங்களையும், குறித்த பத்திரிகை நிறுவனத்தில் ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டு அடையாளங்களையும் நான் நேரில் பார்த்தேன். இவ்வாறு தன்னுடைய ருவிற்றரில் உதயன் வருகை பற்றி பதிவிட்டுள்ளார் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன்.*

## காணாமற்போனோரின் உறவுகள் நேற்று கதறி அழுது ஆர்ப்பாட்டம்

### கமரூனின் கவனத்தை ஈர்க்க பொதுநூலக முன்றலில் பொலிஸாரின் அடாவடியால் மக்கள் கொந்தளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 16
காணாமற்போனவர்களின் உறவுகளின் போராட்டத்தால் யாழ். பொதுநூலக வளாகப் பகுதி நேற்றுக் கண்ணீர் மய

21



## வலி.வடக்கு மக்களின் வாழ்வுரிமைப்போர் இறுதிநாளில் ஏராளமானோர் திரண்டனர்

யாழ்ப்பாணம், நவ. 16
வலி.வடக்கு மக்களால் முன்னெடுக்கப்பட்ட வாழ்வுரிமைப் போராட்டத்தின் இறுதிநாளான நேற்று பெரும் எடுப்பில் மக்கள் அணி திரண்டனர்.

கடும் அச்சுறுத்தல்கள், கெடுபிடிகள் என்பவற்றுக்கு மத்தியிலும் அவர்கள் தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை நான்காவது நாளாகவும் வெற்றிகரமாக முன்னெடுத்தனர்.

வலி.வடக்கில் இராணுவத்தினரால் கையகப்படுத்தி வைக்கப்பட்டுள்ள 24 கிராம சேவையாளர் பிரிவுகளையும் விடுவிக்குமாறு கோரியும்

21

## மீளக்குடியமர இன்னுமா தடை?

### கேள்வி எழுப்பினார் கமரூன்

யாழ்ப்பாணம், நவ. 16
போர் முடிந்து நான்கு ஆண்டுகளாகியும் மக்கள் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படவில்லை. அவர்களை மீளக்குடியமர்த்துவதில் என்ன தடை இருக்கின்றது? இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்தராஜ பக்ஷவுடனும் நான் கலந்துரையாடவுள்ளேன் - என்று கேள்வியெழுப்பினார் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன்.

யாழ். மாவட்டத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கம

21

## வடக்குக்கு வழங்குக உரிய அதிகாரங்களை

### ஜனாதிபதிக்கு கமரூன் அழுத்தம்

கொழும்பு, நவ.16
வடமாகாண சபைக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்று நேரில் வலியுறுத்தினார் பிரிட்டன் பிரதமர் டேவிட்

21

## படை ஆக்கிரமிப்பை கட்டுப்படுத்த பிரிட்டன் உறுதியோடு செயற்படும்

### கூட்டமைப்பிடம் பிரிட்டன் பிரதமர்



யாழ்ப்பாணம், நவ.16
வடக்கில் இராணுவ ஆக்கிரமிப்புக்கள் உடன் நிறுத்தப்படவேண்டும் என்பதிலும், படைகளின் பிரசன்னம் குறைக்கப்படவேண்டும் என்பதிலும் பிரிட்டன்

21

# உதயனில் கமரூன்



உதயன் தாக்குதல் தொடர்பான பதிவுகளை பார்வையிடும் சர்வதேச ஊடகவியலாளர்கள்





சனல் 4 ஊடகவியலாளர், உதயன் ஊடகவியலாளர்களை சந்தித்து கலந்துரையாடியபோது...



உதயனுக்குள் நுழையும் கமரூன்

உதயன் அச்சிடுவதைப் பார்வையிடும் கமரூன்...





தாக்குதலுக்கு இலக்கான பிரதான அச்சுப் பகுதியைப் பார்வை யிடுகிறார்.



# நலன்புரி முகாமில் கமரூன்



நலன்புரிக் கூடாரத்துக்குள்...



மக்களை சந்தித்த மகிழ்வில்...

மூதாட்டியின் பொய்க்காலை அக்கறை யோடு கவனிக்கும் கமரூன்...





வணக்கம் தமிழ் மக்களே...



குறை கேட்டறிதல்...

# பௌத்த விகாரை அல்ல வெடியரசன் கோட்டை

## அதனைப் பார்வையிட வந்த தென்பகுதி மக்களிடம் விவசாய அமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,நவ.16

இது பௌத்த விகாரையல்ல; சரித்திரப் புகழ் கொண்ட மன்னன் வெடியரசனின் கோட்டை. இது உங்களுக்குஎன்று தனித்துவமானது என்று நினைக்க வேண்டாம். இந்த உண்மையை உங்கள் பகுதிகளில் உள்ள மக்களிடமும் எடுத்துக் கூறுங்கள் என்று வெடியரசன் கோட்டையைப் பார்வையிட வந்த தென்பகுதி மக்களிடம் தெரிவித்தார் மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

கடந்த புதன்கிழமை நெடுந்தீவுக்குப் பயணம் மேற்கொண்ட விவசாய அமைச்சரும் மாகாண சபை உறுப்பினர் ந.விந்தன் கனகரத்தினமும் கோட்டைக்காடு பகுதியில் உள்ள வெடியரசன் கோட்டையைப் பார்வையிட்டதுடன் சூழவுள்ள விவசாய நிலங்களையும் அவதானித்தனர். அப்போது அங்கு வந்திருந்த தென்பகுதியைச் சேர்ந்தவர்களும் வேறும் சிலரும் கோட்டையைப் பார்வையிட வந்தனர். அதன் போதே அமைச்சர் கோட்டையின் உண்மை வரலாற்றை அவர்களுக்கு எடுத் துக்கூறி இவ்வாறு விளக்கமளித்தார். (வ-7)

"_"

**சரித்திரப் புகழ் கொண்ட மன்னன் வெடியரசனின் கோட்டை. இது உங்களுக்கு தனித்துவ மானது என்று நினைக்க வேண்டாம்.**

## ஆயுள்வேத மருத்துவர்கள் ஆங்கில மருந்து பாவனை

வலி.வடக்கு. நவ.16

ஆயுள்வேத மருத்துவர்கள் பலர் சட்ட விரோதமான முறையில் ஆங்கில மருந்துகள் பயன்படுத்தும் பல சம்பவங்கள் உடுவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் இடம்பெற்ற சோதனை நடவடிக்கையின் போது தெரியவந்துள்ளது.

உடுவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் நான்கு பிரதேசங்களின் சுகாதார வைத்தியதிகாரிகள் இணைந்து ஆயுள்வேத மருத்துவர்களின் மருந்து நிலையங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை சோதனை நடவடிக் கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது நான்கு ஆயுள்வேத வைத்திய நிலையங்களில் ஆங்கில மருந்துகள் பயன்படுத்துவது இனங்காணப்பட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் சுகாதார வைத்திய திகாரியால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இணுவில் பகுதியில் உள்ள இரண்டு ஆயுள்வேத வைத்திய நிலையங்கள் சுன்னாகம் மற்றும் ஏழாலை மயிலங்காட்டுப் பகுதியிலும் உள்ள 4 வைத்திய நிலை யங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-86)



## சாரணர் சங்க பிரதிநிதிகள் கல்வி அமைச்சருடன் சந்திப்பு

தென்மராட்சி, நவ. 16

வடமாகாண சாரணர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் வட மாகாண கல்வி அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் கல்வி அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கை சாரணர் மாவட்ட ஆணையாளர் கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள், மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவைச் சந்தித்து சாரணர் அபிவிருத்தி குறித்தும் அடுத்த வருடம் சாரணர்கள் சாரண ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்புக்கள் நடத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 7 சாரணர் மாவட்டங்களின் ஆணையாளர்களும் உதவி ஆணையாளர்களும் கலந்துரையாடலில் பங்கு பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மாணவருக்கு சீருடைத் துணி

தென்மராட்சி, நவ.16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான 2014 ஆம் ஆண்டுக்குரிய சீருடைத் துணிகள் பாடசாலைகளுக்கு வலயக் கல்வி அலுவலகத்தால் வழங்கப்பட்டு வருகின்றன. (வ-9)

## கொடுப்பனவைப் பெறலாம்

சங்கானை பிரதேச செயலர் பிரிவின் தற்செயல் நிவாரணம் பெறுவதற்கு விண்ணப்பித்த 32 பேருக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவு பத்தாயிரம் ரூபா சமூகசேவைகள் திணைக்களத்தால் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் உடன் வந்து கொடுப்பனவைப் பெற்றுச் செல்லுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (வ-100)

## நீதிமன்றில் அலறிய கைபேசி நபருக்கு எச்சரிக்கை

நீதிமன்றச் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் பார்வையாளரின் கையடக்கத் தொலைபேசி அலறியது.

வரணி குடமியினை சேர்ந்த 53 வயதான குறித்த நபருக்கு எதிராக நீதிமன்றப் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றில் மன்னிப்புக் கோரியதையடுத்து எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது. (வ-9)

# கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சம்மேளனம் தெரிவு



அக்கராயன், நவ.16

கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சம்மேளனம் உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த 14ஆம் திகதி கிளிநொச்சி அரச செயலகத்தில் மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சம்மேளனத்தின் நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவராக தி.சிவமாறன், செயலாளராக பா.விஜயலக்சுமி, பொருளாளராக அ.தவச் சித்திரா, உப தலைவராக ம.வனிதா, உப செயலாளராக சோ.தாமோதரம்பிள்ளை, நிர்வாக சபை உறுப்பினர்களாக எஸ்.ரூபராஜா, அ.புஸ்பராஜா, மா.ஜெயராசா, திருமதி ரேணுகா ஜீவரத்தினம், வி.பிரேம்குமார், வணபிதா டி.எஸ்.யோசுவா அடிகளார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்மேளனத்தின் ஆலோசகர்களாக கிளிநொச்சி அரச அதிபர், மேலதிக அரச அதிபர் ஆகியோர் பொறுப்பு வகிப்பர். இந்தச் சம்மேளனத்தின் கணக் காய்வாளராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் வே.தபேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். (க-18)

# போட்டிப் பரீட்சையில் சித்திபெற்றும் நியமனம் கிடைக்காத சிற்றூழியர்கள்

## முதலமைச்சரைச் சந்தித்து விவரம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.16

வடக்கு மாகாண சபையில் கடமையாற்றும் மாகாண சேவையில் கனிஷ்ட ஊழியர்களை மாகாண முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இற்கு தரம் உயர்த்துவதற்காக கடந்த வருடம் நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தும் நியமனம் கிடைக்காத சிற்றூழியர்கள் கடந்த வாரம் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சரை சந்தித்து உரையாடியதாகப் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 1,500க்கும் மேற்பட்ட சிற்றூழியர்கள் தோற்றிய போதும் அந்தப் பரீட்சையில் 43பேரே சித்தியடைந்தனர் என்றும் வடக்கு மாகாணசபை அறிவித்திருந்தது. ஆனால் தற்போது 13பேரை மட்டுமே முகாமை உதவியாளர் சேவைக்கு நியமனம் செய்ய இருப்பதாக வடக்கு மாகாண அரச அதிகாரிகள் கூறி வருவதுடன் அதற்கானஏற்பாடுகளையும்மேற்கொண்டுள்ளனர்.

இது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட ஏனைய ஊழியர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நியாயம் கேட்ட போது இருக்கும் வெற் றிடங்களில் 70வீதத்தினரை திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தாம் எடுத்துள்ளதாகவும் மிகுதி 30வீதத்திலேயே சிற்றூழியர்களை நியமனம் செய்யவுள்ளோம் எனக் கூறிவருகின்றனர். ஆனால் திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் 240பேரைத் தெரிவு செய்துள்ள இந்த அதிகாரிகள் சிற்றூழியர்களில் 72பேரை தெரிவு செய்யவேண்டிய நேரத்தில் (பரீட்சையில்) குறைவாக சித்தியடைந்த 43பேரையும் நியமனம் செய்யவேண்டிய நேரத்தில் வெறும் 13பேரைத் தெரிவு செய் துள்ளமை பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் தமக்கு ஏற்படுத்தியுள்ளதாக பாதிக்கப்பட்டச் சிற்றூழியர்களால் கூறப்படுகின்றது.

இது சம்பந்தமாக வடக்கு மாகாணசபையில் அண்மையில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட க.வி.விக்னேஸ்வரனை அவரது அலுவலகம் சென்று சந்தித்த பாதிக்கப்பட்ட ஊழியர்களின் பிரதிநிதிகள் தமக்கு கிடைக்கும் ஒரே பதவியுயர்வு இந்த முகாமை உதவியாளர் சேவை மட்டுமே. பதவியுயர்வைத் தரவேண்டிய அரச அதிகாரிகளே அதைத் தராது பறித்தெடுக்கின் றார்கள். எனவே எமக்கான நியாயத்தை நீங்களே பெற்றுத்தரவேண்டும் எனக் கேட்டபோது தாம் உடனடியாக இந்த விடயத்தை கவனத்தில் எடுத்து உங்களுக்கான நியமனம் கிடைக்க விரைவில் நடவடிக்கை எடுப்பேன் எனவும் அவர் உறுதியளித்ததன் பேரில் தாம் இது வரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும் பாதிக்கப்பட்ட ஊழியர்களால் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-288)

# தண்டனை வழங்கும் அமைப்பாக பொதுநலவாயத்தைப் பாவிக்காதீர்

## மாநாட்டு உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ.16

"30 வருட கால போர் முடிவுக்குக் கொண்டுவந்து மனித உரிமையின் முக்கிய அம்சமான, வாழும் உரிமையை இலங்கை அரசு உறுதிப்படுத்தியுள்ளது" என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன், பொதுநலவாயத்தை தீர்ப்பு வழங்கும் அல்லது தண்டனை வழங்கும் அமைப்பாகப் பயன்படுத்தக் கூடாது என்றும் அவர் கூறினார்.

தாமரைத் தடாக கலையரங்கில் நேற்று இடம்பெற்ற பொதுநல வாய அரச தலைவர்களின் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு விசேட உரையாற்றிய போதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

30 வருடங்களாக நாட்டில் நிலவிய போர் 2009ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பயங்கர வாத நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. உரிமையின் முக்கிய அம்சமான வாழும் உரிமை இலங்கை அரசால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் பொது மக்கள் தான் எமது பெறுமதிமிக்க சொத்து என்பதை மறந்து விட முடியாது. 2007ஆம் ஆண்டு 15.2 வீதமாகக் காணப்பட்ட நாட்டின் வறுமைநிலை போர் முடிந்துள்ள நிலையில் இன்று 6.5 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளின் இடைக்கால இலக்கை கடந்து நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

போரின் பின்னர் நிலையான நல்லிணக்கம் மற்றும் சமரசத்தை நோக்கி நேர்மையான அணுகு முறையில் சென்று கொண்டிருக்கிறோம். நாட்டில் அனைத்து மதத்தை பின்பற்றுபவர்களுக்கும் உரிமை மதிப்பு இருக்கின்றது.

வறுமை பிரச்சினை குறித்து பொது நலவாய அமைப்பு கவனம் செலுத்த வேண்டும். உணவு, குடிதண்ணீர், சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளைக் குறைத்து மதித்து அரசியல் பிரச்சினைகளைப் பற்றிக் கவனம் செலுத்த முடியுமா? பொதுநலவாயத்தை தீர்ப்பு வழங்கும் அல்லது தண்டனை வழங்கும் அமைப்பாகப் பயன்படுத்தாது, மக்களின் நலன்புரி மற்றும் அபிவிருத் திக்கான அமைப்பாக கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து மதங்களையும் இலங்கை மதிக்கின்றது. ஏனையோர் செய்யாதவை தொடர்பில் தேடுவதை விடுத்து செய்தவை தொடர்பில் தேடிப் பார்ப்பதே எமது கடமையாக வேண்டும் என்று புத்த தர்ம போதனையிலுள்ள வசனமொன்றை எடுத்துரைத்து தனது உரையை முடித்துக் கொண்டார் ஜனாதிபதி.

**வயற்காணி விற்பனைக்கு**

நீலியம்பனைப் பிள்ளையார் கோயிலுக்குப் பின் புறமாகவுள்ள 36பரப்பு கிணற்றுடன் கூடிய வயற் காணி முழுமையாகவோ அல்லது பிரித்தோ விற்கப்படும்.

தொடர்பு : 077 7186233

**கார் விற்பனைக்கு**

வங்கி முகாமையாளரது பாவனையிலுள்ள WP KD xxxx 2005 இல் இறக்குமதி செய்யப்பட்ட Beige நிற Toyota Corolla Auto கார் உடன் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

தொடர்பு : 072 4108953

## மரண அறிவித்தல்

### கந்தன் ஸ்ரீஸ்கந்தராஜா

(HSKPG WORK DIRECTOR - சவுதி அரேபியா)



புலோலி தெற்கு, சிங்கை நகரைப் பிறப்பிடமாகவும், நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் ஸ்ரீஸ்கந்தராஜா 6.10.2013 அன்று சவுதி அரேபியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - இளையவள் தம்பதியரின் மூத்த புத்திரனும் தவமணியின் அன்புக் கணவரும், முருகர் - வள்ளி தம்பதியரின் அன்பு மருமகனும், புனிதவதி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதர னும், சுதாஸ்ராகினி, விஜிதாராகினி, சுகிர்தா ராகினி, சுரேகாராகினி, பிரசன்னா (சவுதி அரேபியா) நவநீதராஜ் (சவுதி அரேபியா), பிர பாகரன் (சவுதி அரேபியா) ஆகியோரின் அன் புத் தந்தையும் காலஞ்சென்ற நாகராசா, கௌரி ராசா (ராஜன்), பாஸ்கரன் (சவுதி அரேபியா), செபஸ்ரியான் (ரமேஸ்), தனோதினி ஆகியோரின் மாமனாரும், சுகுந்தா, சுஜீபன் (மலேசியா), சுபன்ராஜ், சுஜாந்தினி, தினேஸ் (மலேசியா), டெனிஷா, ரிஷாந், கோகுலன், விதுஷா, ரஜிகரன், கௌசிகன், ஹரிஸ்ராஜ், பபிஷானி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (17.11.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (சி/12292)(2.6)

சிங்கைநகர், புலோலி தெற்கு. தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மீனாட்சி முருகுப்பிள்ளை



மீசாலை வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சி முருகுப்பிள்ளை நேற்று (15.11 . 2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப் பிள்ளையின் அன்பு மனைவியும், குமாரவேலு, காலஞ்சென்ற பரமசாமி மற்றும் குணரத்தினம்,சரஸ்வதி (ஓய்வுபெற்ற ஆசிரியை-கண்டி), அமிர்தலிங்கம் (பிரான்ஸ்), இரத்தினபூபதி (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், அழகேஸ்வரி, மாசிலா, செல்வராசா, அருணாசலம் (ஓய்வு பெற்ற பேராசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகம்), கெமிலா, (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், குணவதனி (கனடா), குணராசா (லண்டன்), தமிழ்ப்பிரியா (ஆசிரியை யா/ கரம்பபை அ.மி.த.க பாடசாலை), அனுசா, பாலமயூரன் (சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்), கீதா, கெவின் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும், இரட்சிகா (கனடா), நீமா(கனடா), பரணிதன் (யா/மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி), நிருசனா (யாழ். மீசாலை, வீரசிங்கம் ஆரம்பப்பாடசாலை) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.11.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப் பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை வடக்கு, மீசாலை.
021 7914575

தகவல்:
குடும்பத்தினர்.

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி, நவ.16

கச்சாய் அ.த.க. பாடசாலை பரிசில் நாள் விழா நாளை மறுதினம் பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அதிபர் க.உதயகுமாரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்வார். (வ-9)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 5671111

## போராட்டத்தில் ஈடுபட்டோர் மீது நேற்றும் தாக்குதல்கள்



வலி.வடக்குப் போராட்டத்தில் கலந்துகொள்ள வந்த வாகனங்கள் மீது நேற்றைய தினமும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், போராட்டத்தில் ஈடுபட்ட சிலரது வீட்டுக் கண்ணாடிகளும் அடித்து நொருக் கப்பட்டுள்ளன.

வலி.வடக்கு மக்கள் கடந்த நான்கு தினங்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்தப் போராட்டத்தில் மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள இடங்களிலிருந்து வாகனங்களில் ஏற்றி வரப்படுகின்றனர்.

இவ்வாறு ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்ட வாகனங்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நேற்றைய தினம் வல்லை வெளிப்பகுதி யில் வைத்து வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு கண் ணாடிகளும் உடைக்கப்பட் டுள்ளன. அத்துடன் கழிவு ஒயிலும் ஊற்றப்பட்டுள்ளது.

இதேபோன்று தொண்டமா னாறுப் பகுதியில் மண் நிரப் பிய போத்தல்களால் எறிந்து வாகனத்தின் கண்ணாடியை உடைத்துள்ளனர்.

இதேவேளை, போராட்டத்தில் ஆதரவு தெரிவித்த மீனவ சங்கத் தலைவரின் வாகனத்தின் கண்ணாடியும் நேற்று அதிகாலை அடித்து நொருக்கப்பட்டுள்ளது. அதேபோன்று வியாபாரிமூலை, பருத்தித்துறை சாரையடிப் புகுதி யில் வலி.வடக்குப் போராட் டத்தில் பங்கெடுத்தவர்களின் வீட் டுக் யன்னல் கண்ணாடிகளும் இனந்தெரியாதோரால் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. (ங-500-86)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சிற்றம்பலம் கணேசலிங்கம்

(சட்டத்தரணி மனித உரிமைகள் இல்லம்)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் தெகிவளையில் வசித்தவரும் தற்போது ஆஸ்திரேலியாவில் வசித்து வந்த வருமான வேலுப்பிள்ளை சிற்றம்பலம் கணேசலிங்கம் நேற்று (15.11.2013) வெள்ளிக்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிற்றம்பலம் பாஸ்கரலிங்கம் (சகோதரன்)
077 3475061
த.தொலைபேசி: 0061286779221, 0061469148274

பாணாவெட்டி,
தொல்புரம் மேற்கு, சுழிபுரம்

**தேவை**

வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவை நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை.

16.11.2013 - 17.11.2013 ஆகிய திகதிகளில் நேரில் வரவும்

இல.01, பிறவுண் வீதி,
நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 222 6113

**NALTC**
**Australian Tamil Management Service**

ஆங்கில பேச்சு திறன் விருத்தி பயிற்சிப் பட்டறை

Workshop

Easy way English spoken Tips

இப் பயிற்சி பட்டறையின் 1st program 09.11.2013 (sat) அன்று Green Grass Hotel இல் நடைபெற்றது.

குறிப்பு: பதிவுகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். (Australian certificate வழங்கப்படும்)



இதன் 2nd program **17.11.2013** (Sunday) அன்று **Tilko Hotel** இல் காலை 9.00 - மாலை 5.00 மணிவரை நடைபெறவுள்ளது.

**Contact : 499/1, Point Pedro Road, Nallur, Jaffna.**
**116, Adiyapatham Road, Thirunelvely.**
**T.P : 0770569642, 0770166746**

# வீதி சேதம்

## பயணிப்போர் விசனம்

தென்மராட்சி, நவ.16

ஏ-9 வீதியிலிருந்து கைதடி-நுணாவில் வைரவர் கோயி லடியிலிருந்து மட்டுவில் தெற்கு முசுறி, சந்திரபுரம் ஊடாக மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயம் வரையான வீதி மிகச் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படு வதால் குறித்த வீதியைப் பயன்படுத்தும் ஆயிரக் கணக்கான மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர்.

வீதியின் பெரும்பாலான இடங்கள் குன்றும் குழியு மாகக் காணப்படுவதால் அவற்றில் மழை வெள்ளம் தேங்கி நிற்கின்றது. அந்தப் பகுதி மக்கள் தமது தேவைக் காக வேறு வீதியைப் பயன் படுத்தும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த வருடமும் இந்த வருடமும் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற மட்டுவில் பன்றித் தலைச்சி அம்பாள் ஆலய பொங்கல் திருவிழா தொடர் பான கூட்டத்தில், குறித்த வீதி திருத்தம் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது உரிய அதிகாரி களால் வீதியைப் புனர மைத்துத் தருவதாக வாக் குறுதி அளிக்கப்பட்ட போதி லும் இதுவரை எந்தவொரு பணிகளும் ஆரம்பிக்கப்பட வில்லை.

கைதடி- நுணாவில் தென்-மட்டுவில், சந்திரபுரம் மட்டு வில் வடக்கு, சரசாலை ஆகிய கிராம அலுவலர் பிரிவு களைச் சேர்ந்த 3 ஆயிரத் துக்கு மேற்பட்ட குடும்பங் கள் இந்த வீதியூடாகவே தமது தேவைகளுக்குச்சென்று வருவதாகவும் தெரிவிக்கப் பட்டது. (வ-9)

# நெடுந்தீவில்

# விவசாயம், மீன்பிடிக்கு ஒத்துழைப்பு கொடுப்போம்

## உறுதியளித்தார் வடமாகாணசபை விவசாய அமைச்சர்

யாழ்ப்பாணம், நவ. 16

நெடுந்தீவின் முக்கிய வாழ் வாதாரத் தொழில்களாக விளங்கும் விவசாயம், மீன்பிடி ஆகியவற்றை அபி விருத்தி செய்வதில் மாகாண சபை பேரிய ஒத்துழைப்பை வழங்கும். இவ்வாறு நெடுந் தீவுக்கு வருகை தந்த வட மாகாண சபை விவசாய அமைச்சர் பொ. ஐங்கர நேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்:

அந்நியர்களின் வருகையை ஏற்றுக் கொள்ளாது எவருக் கும் மண்டியிட மாட்டோம் என்று வாழ்ந்தவர்கள் நெடுந் தீவு மக்கள். 30 வருட போராட்டம் சர்வதேச நாடு களின் ஒத்துழைப்புடன் அடக்கப்பட்டது. தமிழரின் போராட்டம் தோல்விய டைந்தது என்று எவரும் எண்ணக்கூடாது. கடந்த தேர்தலிலும் நாம் அடக்கு முறைக்கு அடிபணிய மாட் டோம் என்பதை நெடுந்தீவு மக்கள் எடுத்துக் காட்டியுள் ளனர்.

பசுத்தீவு, பருத்தித்தீவு எனப் பல்வேறு பெயர்களைக் கொண்டு வளம் மிகுந்த பிரதேசமாக விளங்கிய இந்தத் தீவு வறட்சி நிறைந்த இடமாக இன்று மாற்றப்பட் டுள்ளது. புலம்பெயர்ந்த மக்களின் உதவியுடன் நெடுந் தீவை வளப்படுத்த வுள்ளோம். இங்கு சேதனப் பசளைகளை உற்பத்திசெய்வ தன் மூலமாக வேலை வாய்ப்புக்களைத் தரக் கூடியதான தொழில் நிலை யம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற நோக்கு டன் உங்கள் ஊரைச் சேர்ந்த எனது நண்பர் ஒருவரும் வந்துள்ளார். மக்கள் இதற்கு தமது ஒத் துழைப்புக்களை வழங்க வேண்டும். இங்கு விவ சாயத்தை முன்னெடுக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்ப டுத்த வேண்டும். தண் ணீர் பாதுகாக்கப்பட வேண் டும். இன்று இங்குள்ள நிலம் செழிப்பற்ற நிலையில் காணப்படுகின்றது. அதை செழிப்பாக்கவும் சூழல் மாச டையாது பாதுகாக்க வும் கூடியதான செயற்றிட்டங் களே இன்று தேவை யாகும்.

விவசாயம், மீன்பிடி இரண் டும் இந்தத் தீவின் முக்கிய தொழில்களாக உள்ளன. இவற்றை அபிவிருத்தி செய்வதில் மாகாண சபை தனது ஒத்துழைப்பை வழங்கும்.

புலம்பெயர்ந்த மக்களின் உதவியுடன் நெடுந் தீவை வளப்படுத்த வேண் டும் என்று விரும்புகின் றோம்- என்றார். (க-7)

"-"

**விவசாயம், மீன்பிடி இரண் டும் இந்தத் தீவின் முக்கிய தொழில்களாக உள் ளன. இவற்றை அபிவிருத்தி செய்வ தில் மாகாண சபை தனது ஒத்துழைப்பை வழங்கும்.**

# நாவற்குழி நூலகத்துக்கு புத்தகங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி, நவ.16

நாவற்குழி பொது நூலகத் துக்கு பெருமளவு புத்தகங் கள் ஊர் மக்களால் வழங் கப்பட்டுள்ளன.

நூலகத்தில் கடந்த தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளால் கவரப்பட்ட மக்கள் பாட சாலை மாணவர்களுக்குத் தேவையான பாடநூல்கள் உட்பட 50 ஆயிரம் ரூபா வுக்கு மேற்பட்ட பெறுமதி யான நூல்களை புதன் கிழமை நடைபெற்ற தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வில் வழங்கியுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.

வழங்கப்பட்ட நூல்களில் மாணவர்களின் கல்வியு டன் தொடர்புடைய அனைத்து நூல்களும் நேற்று முன் தினம் மாணவர்களின் தேவைக்கு வழங்கப்பட்ட தாக நூலகர் தெரிவித்தார்.

இதேவேளை நாவற்குழி சித்தி விநாயகர் அபிவி ருத்தி சபையினர் நூலக வாசகர் நலன்கருதி கணி னியை வழங்கியதுடன் இணைய வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

# நுணாவில்-கனகன்புளியடி வீதி

# பதினைந்து வருடங்களாக திருத்தப்படாத நிலையில்

தென்மராட்சி, நவ.16

தென்மராட்சி பிரதேசத்தின் பிரதான வீதிகளில் ஒன்றாக கருதப்படும் நுணாவில்-கனகன்புளியடி வீதி கடந்த 15 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாததால் இந்த வீதியைப் பயன்படுத்து வோர் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

ஏ-9 வீதியில் நுணாவில் சந்தியிலிருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தூரமான இந்த வீதி பருத்தித் துறை, புத்தூர், மீசாலை, சாவகச்சேரி ஆகிய இடங் களுக்குச் செல்லக்கூடிய குறுகிய வழி என்பதால் இலங்கை போக்குவரத்துச் சபையின் 765, 794 மார்க்க பஸ்களும், தனி யார் பஸ் கள், பார ஊர்திகள் மட்டு மன்றி தினமும் நூற்றுக்கு மேற்பட்ட வாகனங்களும் பயன்படுத்தி வருகின்றன.

குறித்த வீதி தென்மராட்சி பிரதேசத்தின் வரணி, வேம் பிராய், சரசாலை, மட்டு வில் வடக்கு, மட்டுவில் கிழக்கு, கல்வயல், நுணா வில் மேற்கு போன்ற இடங் களைச் சேர்ந்த மக்களுக் கும் வடமராட்சி தெற்குப் பிரதேச மக்களுக்கும் பிர தான வீதியாக காணப்படு வதுடன் தென்னிலங்கை யிலிருந்து வரும் வாக னங்கள் மீசாலை, புத்தூர் சந்தியூடாக பயணித்து இந்த வீதியூடாக ஏ-9 வீதியை அடைந்து பயணத்தைத் தொடர்கின்றன.

சாவகச்சேரி நகரசபை, சாவ கச்சேரி பிரதேச சபை ஆகி யவற்றின் எல்லை வீதி யாக காணப்படுகின்ற போதி லும் குறித்த வீதி, வீதி அபிவி ருத்தித் திணைக்களத்தின ரின் பராமரிப்பில் உள் ளது.

வீதியிலிருந்து பிரிந்து செல் லும் துணை வீதிகள் பல காப்பெற் வீதிகளாக மாறி யுள்ள. போதிலும் பெரு மளவு மக்கள் பயன்படுத் தும் இந்த வீதி தொடர்ந்தும் கவனிப்பாரற்று காணப் படு வது குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர். (வ-9)



# குறுகிய ஊடகப் பயிற்சி; பூர்த்தி செய்த 25 ஆசிரியர்கள்



யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஊடக வளங்கள் மற் றும் பயிற்சி நிலையத் தின் "ஊடகத்துறையின் அடிப் படைகள்" என்ற குறுங் கால பயிற்சி நெறியை பூர்த்தி செய்த 25 ஆசிரியர்கள் தமது கல்விப் புலம் மற்றும் சார்ந்த தேடல்களை அறிக்கை செய்ய வுள்ளனர்.

எதிர்வ ரும் 22 ஆம், 23 ஆம் திகதி களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடை பெறும் இந்த நிகழ்வில் சமூக ஆர்வலர்கள் கலந்து கொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-10)

# இளைப்பாறு மண்டபம் இல்லாமையால் அசௌகரியம்

## மானிப்பாய் மருத்துவமனையில்

வலி.தென்மேற்கு, நவ. 16

மானிப்பாய் பிரதேச மருத்து வமனையில் மாதாந்தம் நடைபெறும் வைத்திய பரிசோதனைக்காக வரும் கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோரின் வசதி கருதி இளைப்பாறு மண்டபம் அமைப்பதற்கு நிதியுதவி வழங்குமாறு குறித்த மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங் கம், பொதுமக்களையும், சமூகநலன் ஆர்வலர்க ளையும் கோரியுள்ளது.

ஆனைக்கோட்டையில் பொதுமக்களின் நிதியுதவி யுடன் வாங்கப்பட்ட காணி யில் பல மில்லியன் ரூபா செலவில் அரசால் அமைக் கப்பட்ட மானிப்பாய் பிர தேச வைத்தியசாலைக்கு யாழ். போதனா மருத்துவ மனையில் கடமையாற் றிய அனுபவம் வாய்ந்த மருத்துவர் ஒருவர் கடந்த மாதம் நிரந்தரமாக நியமிக் கப்பட்டார். அதைத் தொடர்ந்து மருத்துவ மனைக்கு வரும் நோயாளர்களின் தொகை தினமும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அதே போல் குறித்த மருத்து வ மனையில் மாதாந்தம் இடம் பெறும் பரிசோதனைக்காக அருகிலுள்ள கிராமங்களிலி ருந்து கூடுதலான கர்ப்பி ணிகள், பாலூட் டும் தாய் மார்கள், பெண் ணியல் நோயாளர்கள், குழந்தை கள் ஆகியோர் வருகின்றனர்.

அவர்கள் தகுந்த முறையில் அமர்ந்திருந்து சேவை யைப் பெறுவதற்கு இடமில் லா மல் பிரசவ விடுதி நடை பாதை யில் கால் கடுக்க நின்று அவஸ்தைப்படுகின் றனர்.

எனவே, அவர்களின் நலன் கருதி இளைப்பாறு மண்ட பம் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அதை அமைப்பதற்கு நிதி யுதவி வழங்குமாறு நலன் புரி சங்கம் நலன்விரும் பிகளையும் சமூக ஆர்வ லர்களையும் கோரியுள் ளது. (வ-115)

# ஆரம்ப பாடசாலைக்கு காணி கொள்வனவு

யாழ்ப்பாணம், நவ.16

சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாட சாலைக்கு 45 லட்சம் ரூபா செலவில் இன்று சனிக்கிழமை காணி கொள் வனவு செய் யப்படவுள்ளது.

இன்று மாலை 4 மணிக்கு சங்கானை சிவசம்பு மண் டபத்தில் இந்த நிகழ்வு இடம் பெறும்.

இதற்கான நடவடிக்கை களை சங்கானை சிவப் பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலை காணி கொள் வனவுக் குழுத் தலைவர் கு. குணசிறி மேற்கொள் வார்.

சங்கானை சிவப்பிர காச மகா வித்தியாலயம் 1000 பாடசாலை திட்டத்தில் உள்வாங்கப்பட்டதால், ஆரம்பப் பிரிவு பாடசாலை (1முதல்5) நீக்கப்பட்டது.

அதையடுத்து ஆரம்பப் பாட சாலை ஒன்றை உரு வாக்க அங்கு பொருத்த மான காணி ஒன்று வழங் கப்பட வேண்டும் என வலயக் கல்விப் பணி மனை அறிவித்தது.

இந்த அறிவிப்பை அடுத்து புலம்பெயர்ந்தவர்களின் உதவியுடன் 45 லட்சம் ரூபா நிதி சேகரிக்கப் பட்டு இன்று சனிக்கிழமை ஆரம்பப் பாடசாலைக்கான உத்தியோகபூர்வமாக காணி உறுதி எழுதப்பட்டு வழங்கப் படவுள்ளது. (ஓ-41)

# ராகுலை எச்சரித்தது தேர்தல் ஆணையம்

புதுடில்லி, நவ.16


தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் பேசும்போது மிகுந்த கவனத்துடன் பேச வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தியை இந்தியத் தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக ராகுல் காந்திக்கு கடந்த புதன்கிழமையன்று தேர்தல் ஆணையம் உத்தரவுக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. அதில், தேர்தல் விதிமுறைகளை மீறியதாக தேர்தல் ஆணையத்தால் அனுப்பப்பட்ட மனுவுக்கு ராகுல் காந்தி அளித்த பதிலில் திருப்தியில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் உண்மை நிலை மற்றும் சூழ்நிலைகளையும், ராகுல் காந்தி தமது பதிலில் மேற்கோள்காட்டி தெரிவித்துள்ள விளக்கங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தேர்தல் ஆணையத்திற்குதிருப்திஏற்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பேசும்போது, மிகுந்த கவனத்துடன் பேச வேண்டும் என்றும் ராகுல் காந்திக்கு தேர்தல் ஆணையம் அறிவுரை வழங்கியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் சுரு மற்றும் மத்தியப் பிரதேச மாநிலம் இந்தூரில் ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற பரப்புரைக் கூட்டங்களில் ராகுல் காந்தி பேசுகையில், முசாபர்நகர் கலவரத்தில் பாதிக்கப்பட்ட இஸ்லாமிய இளைஞர்களை பாகிஸ்தானின் உளவு அமைப்பு தொடர்பு கொண்டு பேசியதாக குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து ராகுல் காந்தி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தேர்தல் ஆணையத்திடம் பா.ஜ.க. தலைவர்கள் முறைப்பாடு அளித்தமை குறிப்பிடத்தக்கது. (ற)



இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் தண்டவாளத்தை கடக்க முயன்ற ஒரு யானைக் கூட்டத்தின் மீது ரயில் மோதியதில் 6 யானைகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளன. பல யானைகளுக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. சுமார் 40 யானைகளை கொண்ட கூட்டம் ஒன்றின் மீதே ரயில் மோதியுள்ளது. வனத்துறையினர் மருத்துவர்களோடு விரைந்து காயமடைந்த யானைகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

# சென்னையில் மழை கன பெய்யும்

சென்னை, நவ.16

தென்கிழக்கு வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் அதே இடத்தில் நீடிப்பதால் தமிழகம் முழுவதும் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் இருந்து 650 கிலோ மீற்றர் தொலைவில் நிலை கொண்டிருக்கும் இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், சென்னை-நாகை இடையே நாளை மாலை கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் மணிக்கு 65 கிலோ மீற்றர் வரை தரைக்காற்று வீசும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை செய்துள்ளது.. (ற)

# இந்தியாவின் முடிவு சரியான ஒன்றே

## பொதுநலவாய மாநாடு குறித்து ஞானதேசிகன் கருத்து

சென்னை, நவ.16

சல்மான் குர்ஷித் இலங்கை சென்றமை சரியானதே என்று தெரிவித்துள்ளார் தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் சுவர் இடிக்கப்பட்டுள்ளது. அந்த சுவர் ஆக்கிரமிப்பு இடத்தில் கட்டப்பட்டதால் இடிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பதற்காக வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கை பயணம்சென்றிருப்பது முதல் முறை அல்ல. ஏற்கனவே எஸ்.எம் கிருஷ்ணா வெளியுறவு அமைச்சராக இருந்த போது



இரு முறை இலங்கை சென்றுள்ளார். அங்குள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் ஜனாதிபதியைச் சந்தித்து பேசியுள்ளார்.

அதன் பயனாக இலங்கை வடக்கு மாகாண பகுதியில் தேர்தல் நடத்தப்பட்டு தமிழர் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த விக்னேஸ்வரன் வெற்றி பெற்று முதல்வர் ஆகியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு கிடைக்க 2 அரசுகளுக்கு இடையே இந்தியா துணை நிற்கிறது. எனவே சல்மான் குர்ஷித் இலங்கை சென்று பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்றிருப்பது சரியான முடிவு. தமிழக மீனவர் பிரச்சினையில் இந்தியாவும், இலங்கையும் சேர்ந்து பேசி ஒப்பந்தம் செய்து கொண்டால்தான் தீர்வு கிடைக்கும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# இராணுவப் புரட்சி இந்தியாவில் இல்லை

## வி.கே.சிங் கூறுகின்றார்



புதுடில்லி, நவ.16

இந்தியாவில் இராணுவப் புரட்சி ஏற்பட வாய்ப்பே இல்லை என்று தெரிவித்துள்ளார் இந்திய இராணுவ முன்னாள் தலைமைத் தளபதி வி.கே. சிங்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எனது வயது வரம்பு பிரச்சினை குறித்து தொடர்ந்து கேள்வி எழுந்ததன் காரணமாக, இராணுவப் புரட்சி நடத்த புதுடில்லியை நோக்கி இரண்டு படைகளை நகர்த்தினேன் என்று என் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தியாவில் இராணுவப் புரட்சி ஏற்பட வாய்ப்பே கிடையாது. அத்தோடு இரகசியப் புலனாய்வுப் பிரிவை நடத்தினேன் என்றும் என் மீது தவறான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

இதுபோன்று குற்றம் சுமத்துவது இன்னமும் நீடிக்கிறது. இதற்கு பிரதமர் அலுவலகத்தில் உள்ள சண்டீகரைச் சேர்ந்த மூத்த அதிகாரியும், மூத்த பத்திரிகையாளர்கள் இருவருமே காரணம்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# புத்தாண்டுக்குள் தெலுங்கானா

## காங்கிரஸ் கட்சி தீவிரம்

புதுடில்லி, நவ.16

தெலுங்கானா தனி மாநிலத்தை புத்தாண்டு பிறப்பதற்குள் உருவாக்கிவிட வேண்டுமென்பதில், மத்திய அரசு தீவிரமாக உள்ளது. அதையடுத்து ஆந்திராவைப் பிரித்து தெலுங்கானா தனி மாநிலம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் வேகம் பிடித்துள்ளன. தெலுங்கானா குறித்து ஆலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பதற்காக மத்திய அமைச்சர்கள் அடங்கிய, உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, தீவிரமாக பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆந்திர சட்டசபையில் தெலுங்கானா தனி மாநிலம் தொடர்பான தீர்மானத்தை கொண்டுவந்து நிறைவேற்றுவது அவசியம். அதுவிடயமாக ஆலோசனை நடத்துவதற்காக ஆந்திர முதலமைச்சர் கிரண்குமார் ரெட்டியை புதுடில்லிக்கு வரும்படி மத்திய அரசின் உயர் மட்டக்குழு அழைப்பு விடுத்திருந்தது.

கிரண்குமார் ரெட்டியிடம் ஆந்திர மாநில சட்டசபையை எப்போது கூட்டுவது என்றும் தெலுங்கானா மசோதாவை எப்படி நிறைவேற்றுவது என்பது குறித்தும், முக்கிய ஆலோசனை மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த நிலையில் கடந்த வாரம் கூடிய காங்கிரஸ் உயர்மட்டக்குழுவில் தெலுங்கானா குறித்து முக்கிய முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. அதன்படி, புத்தாண்டுபிறப்பதற்குள் தெலுங்கானா மாநிலம் உருவாக்கியே தீர வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு உள்ளதாக டில்லியில் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ற)

# தடம்புரண்டது ரயில்


## மகாராஷ்டிராவில் 5 பேர் சாவு

மும்பை, நவ.16

மகாராஷ்டிராவில் பயணிகள் ரயில் தடம் புரண்ட விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர். 50க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். கேரள மாநிலம் எர்ணாகுளத்திலிருந்து நிஜாமுதீன் நோக்கி பயணிகள் ரயில் சென்று கொண்டிருந்தது. அப்போது 14 பெட்டிகள் திடீரென தடம் புரண்டன. இந்த விபத்தில் ரயிலில் பயணம் செய்த 5 பேர் உயிரிழந்தனர், 50 பேர் படுகாயம் அடைந்தனர்.



காயம் அடைந்தவர்களின் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என்று அஞ்சப்படுகிறது. இந்த விபத்து காரணமாக மும்பை நாசிக் இடையே ரயில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்துள்ள பொறியியலாளர்கள் ரயில் பாதையை சீர் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ற)



போலந்தில் எரிபொருள் கொண்டு செல்லும் குழாய் வெடித்து ஏற்பட்ட விபத்தில் இருவர் உயிரிழந்தனர். மேற்கு போலந்தில் உள்ள ஜோன்கோவ் கிராமத்தில் ஏற்பட்ட இந்த விபத்தின் போது அருகில் இருந்த நூற்றுக்கணக்கான வீடுகள் தீப்பற்றி எரிந்தன. அதனால் 20 முதல் 30 மீற்றர் உயரத்துக்கு தீப்பற்றி எரிந்தது. இந்த தீ விபத்தில் காயமடைந்த 13 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## எகிப்தில் இராணுவ ஆட்சி அகற்றப்பட வேண்டும்

கெய்ரோ, நவ.16

இராணுவ ஆட்சி அகற்றப்படும் வரை எகிப்துக்கு விடிவு இல்லை என அந்த நாட்டின் முன்னாள் அதிபர் முகமது முர்சி தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரால் தான் கடத்தப்பட்டதாக குற்றம் சாட்டியுள்ள முர்சி, இராணுவத்தின் இந்த நடவடிக்கை எகிப்து மக்களுக்கு துரோகம் செய்ததற்கு ஈடானது என்றும் கூறியுள்ளார்.

இராணுவ ஆட்சி நீக்கப்பட்டு, அதற்கு காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்தால் மட்டுமே எகிப்தில் அமைதி திரும்பும் எனவும் முர்சி தெரிவித்துள்ளார்.

எகிப்தில் கடந்த ஜூலை மாதம் இராணுவத்தினரால் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி முர்சி, வன்முறைகளைத் தூண்டிய குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சிறையில் அவரைச் சென்று சந்தித்த சட்டத்தரணிகளிடம் எகிப்து மக்களுக்கு செய்தி என்ற பெயரில் அவர் அனுப்பிய அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

## தங்கப் பாவனை இந்தியாவைப் பின்தள்ளியது சீனா



பீஜிங், நவ.16

உலகத்திலேயே தங்கம் வாங்குவதில் இந்தியர்கள் தான் அதிக அளவில் ஆர்வம் காட்டுவதோடு முன்னிலை வகித்து வந்தனர்.

இந்த ஆண்டின் மூன்றாவது காலாண்டில் இந்தியாவுக்குப் பதிலாக சீனா உலகின் மிக பெரிய தங்க நுகர்வு நாடாக மாறியுள்ளது என்று உலக தங்கச் சங்கம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்த ஆண்டின் மூன்றாவது காலாண்டு சீனாவின் தங்க அலங்கார பொருள் தேவையின் அளவு சுமார் 30 சதவீதம் அதிகரித்து, 163.7 தொன்னை எட்டியது.

இந்தியாவின் தங்க அலங்கார பொருள் தேவையின் அளவு, 104.7 தொன்னாகும். அதனால் உலகளவில் மிக பெரிய தங்க அலங்காரச் சந்தையாக சீனா மாறியுள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# வடகொரியாவுடன் பேச்சுகள் இல்லை

## அமெரிக்கா கூறுகின்றது

**வடகொரியா அணு ஆயுத சர்ச்சை தொடர்பில் உறுதியான கொள்கை ஒன்றை ஏற்படுத்திக் கொண்ட பின்னரே பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படும்.**

நியூயோர்க், நவ.16

வடகொரியாவுடன் அணு ஆயுதப் பிரச்சினை தொடர்பாக தற்போது பேச்சுக்கள் நடத்துவதற்கான சாத்தியம் இல்லை என்று தெரிவித்துள்ளது அமெரிக்கா.

வட கொரியாவுக்கான அமெரிக்க சிறப்பு தூதர் க்ளைன் டேவிஸ் அடுத்த வாரம் சீனா, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ள உள்ளார். இதுகுறித்து அமெரிக்க அரசவையின் செய்தித் தொடர்பாளர் ஸ்டீஃபன்ய பாஸ்வொர்த் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"வடகொரியாவின் அணு ஆயுத சர்ச்சை குறித்த பேச்சுக்கள் தற்போது நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவு. வடகொரியா



அது தொடர்பில் உறுதியான கொள்கை ஒன்றை ஏற்படுத்திக் கொண்ட பின்னரே பேச்சுக்களின் முன்னேற்றம் ஏற்படும். வட கொரியா அணு ஆயுதங்களைத் தயாரிப்பில் முனைப்புக் காட்டுவதைத் தவிர்த்து பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண என்ன வேண்டும்." என்று தெரிவித்துள்ளார். (ற)

## 'ஹையான்' மீட்புப் பணிகள் பிலிப்பைன்ஸில் தீவிரம்



லண்டன், நவ.16

பிலிப்பைன்ஸில் ஹையான் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. மீட்புப் பணிகளை சுலபமாக்குவதற்காக அமெரிக்காவின் விமானம் தாங்கிக் கப்பல்கள் பிலிப்பைன்ஸ் வந்தடைந்துள்ளன. இதனால் மீட்புப் பணிகள் தீவிரமடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பிரிட்டனும் மருத்துவ குழுக்கள் மற்றும் விமானங்களை பிலிபைன்ஸுக்கு அனுப்பியுள்ளது. இதே போல ஜப்பான், தென் கொரியா உள்ளிட்ட நாடுகளும் நிவாரணப் பொருள்களை அனுப்பிய வண்ணம் உள்ளன.

உணவு மற்றும் குடிநீர் இன்றிப் பலர் தவித்து வரும் நிலையில், தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் பொதுமக்களைப் பாதுகாக்க அரசு முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஹையான் புயலினால் ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் நிலையில் 4 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (ற)

# 2 லட்சம் ஆவணங்களை வெளியிட்டார் ஸ்நோடன்

## அதிர்ச்சியில் அமெரிக்கா

மொஸ்கோ, நவ.16


அமெரிக்க உளவு நிறுவனத்தின் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான ஆவணங்களை ஸ்நோடென் வெளியிட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் உளவு நிறுவனமான தேசிய புலனாய்வு நிறுவனம் உலகின் பல நாட்டு இணையத்தளங்களுக்குள் ஊடுருவி பொதுமக்கள் மற்றும் அந்த நாட்டுத் தலைவர்களை உளவு பார்த்தது. இந்தத் தகவல்களை அதே நிறுவனத்தில் கணனி துறையில் பணியாற்றிய எட்வேர்டு ஸ்நோடன் அம்பலப்படுத்தினார். அதனையடுத்து அவரைக் கைது செய்ய அமெரிக்கா தீவிரம் காட்டவே ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் தஞ்சம் அடைந்தார்.

இந்நிலையில் இதுவரையில் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான தகவல்கள் ஸ்நோடென் வெளியிட்டுள்ளார் என்று தேசிய புலனாய்வு நிறுவனத்தின் தலைவர் கெய்த் அலெக்ஸாண்டர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

"ஏற்கனவே ஸ்நோடென் சுமார் 2 லட்சம் ஆவணங்களை வெளியிட்டு விட்டார், அந்த ஆவணங்களைத் தான் தற்போது ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன.





அவர் வெளியிட்டு வரும் தகவல்கள், தேசிய புலனாய்வு நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் அமெரிக்காவின் பெயருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளன. இனி மேலும் அவர் ரகசிய ஆவணங்களை வெளியிடக் கூடும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.16
இணுவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் இடம்பெறும் இந்த நிக்ழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், ச.சுகிர்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (400)

♦♦♦

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய நிறுவுநர் நினைவு தினமும் மெய்யொளி நூல் வெளியீடு மற்றும் பாடசாலை மாணவர்களின் 2012 ஆம் ஆண்டுக்கான பாசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை கால்லை 9 மணிக்கு அதிபர் அ.அரங்கநாதன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜாவும் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கல்விக்கோட்ட கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுருகுமாரும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.
நிறுவுநர் நினைவுப் பேருரையை தெல்லிப்பழை யுனியன் கல்லூரி ஆசிரியர் ச.முகுந்தன் நிகழ்த்துவதுடன் ஆய்வுரையை வவுனியா மேழிக்குமரன் க.அருந்தவராஜா நிகழ்த்தவுள்ளார். மற்றும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ந-86)

♦♦♦

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியற் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் கலைத்தூது அழகியற் கல்லூரியின் அதிபர் திருமதி அஞ்சலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பியும் சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.யோன் குயின்ரஸூம் கலந்து கொள்ள உள்ளார்கள். சிறப்பு நிகழ்வாக கலைத்தூது அழகியற் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ந-51)

## மூன்றாம் நிலைக் கல்வி வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்த வேண்டும்

### கல்வியியல் துறைப் பேராசிரியர் சின்னத்தம்பி

கொழும்புத்துறை,நவ.16
மூன்றாம் நிலைக் கல்வியைப் புகட்டும் திட்டங்களை செயற்படுத்தி வரும் யாழ். மறைமாவட்டம் மேலும் பல திட்டங்களை முன்னெடுத்து கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும். இதுவே இன்றைய காலத்தின் தேவையாகும்.
முன்னாள் யாழ்.ஆயர் மேதகு வ.தியோகுப் பிள்ளை ஆண்டகையின் நினைவாக அறக் கொடைப் பேருரையை நிகழ்த்திய யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி இவ்வாறு தெரிவித்தார்.
அருட்திரு. இ.ஸ்ரலின் அடிகளாரின் தலைமையில் பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். மறை மாவட்ட மூன்றாம் நிலைக் கல்வி பற்றிய முன்னோக்குகள் வளர்ச்சிக்கான சிந்தனைகள் என்னும் தலைப்பில் நினைவுப் பேருரை இடம் பெற்றது. அதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்.மறைமாவட்டம் ஏற்கனவே மூன்றாம் நிலைக் கல்வி தொடர்பாக கொழும்புத்துறை குருத்துவக் கல்லூரி, மறையாசிரியர் பயிற்சி, பொதுநிலையினர், இறையியற் கல்லூரி, அகவொளி, திருமறைக் கலாமன்றம், திருச்சிலுவை மருத்துவ நிலையம், ஊடகக் கல்வி நிலையம், பத்திரிசியார் தொழில்நுட்பக் கல்லூரி போன்றவற்றின் ஊடாக மூன்றாம் நிலைக் கல்வியைச் சிறப்பாக போதித்து வருவது பாராட்டுக்குரியதாகும்.
மேலும் பல புதிய திட்டங்களை ஆரம்பிப்பது சிறந்ததாகும். தனியார் பல்கலைக்கழகம், தொழில் வாண்மை உயர் கல்வி நிறுவனம், அழகியல் ஆற்றுகை மையம், நலனோம்பு திறன் விருத்திக்கான பயிற்சி மையம் போன்ற செயலமைப்புப்பொறிமுறைகளை அமைத்து மூன்றாம் நிலைக் கல்வியை மென்மேலும்மேம்படுத்தவேண்டுமெனத் தெரிவித்தார்.
நிகழ்வில்யாழ்.ஆயர்மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, குரு முதல்வர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் அடிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ந-135)

## சமய சந்நிதிகளில்...

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத் திருக்கார்த்திகை குமராலயதீபம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 9.30 மணிக்கு ஷண்முகார்ச்சனையைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை, சுவாமி வெளி வீதி வலம் வருவதைத் தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம்பெறும்.
பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் பூசை களைத் தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை, சுவாமி வெளி வீதி வலம் வருதல், சொக்கப் பனை எரித்தல் இடம்பெறும். (ந)

♦♦♦

யாழ்.உரும்பிராய் ஐயப்பன் ஆலய வரு டாந்த அலங்காரத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடை பெறவுள்ளது.
ஐயப்பன் புனித மாலை குருசுவாமி அணி வித்தல் நடைபெறும். தொடர்ந்து பூசை, பஜனைகள் இடம்பெறும். மாலைப் பூசைகள் 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.
எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு கொடியேற்றத்துடன் பூசைகள் ஆரம்பமாகும். தொடர்ந்து 10 தினங்கள் அலங்காரத் திருவிழா நடை பெறும். (ந)

### மாணவர்கள் கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.16
மானிப்பாய்-லங்கா திறனபிவிருத்தி முன்பள்ளி சர்வதேசபாடசாலையின் மாணவர்கள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு விருதுகள்-சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.
லங்கா திறனபிவிருத்தி நிலைய பணிப்பாளர் எஸ்.செந்திலிங்கம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.
பாடசாலையின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு முன்பள்ளிகல்வித்தேவையைப் பூர்த்தி செய்த 30 மாணவர்களே விருதுகள்-சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.
இந்த விழாவில் சிறுவர்களின் இசை-நடன-நாடக நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஓ-50)

**பசுமாடு விற்பனைக்கு**
கறுப்பு நிற சிந்து, ஜேசி கலப்பு உடைய பசு மாடு விற்பனைக்கு உண்டு. (40085) (7.6.3)
தொடர்பு : 077 984 7813, 021 321 4927

**வேலை ஆள்கள் தேவை**
எமது ஸ்தாபனத்திற்கு கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு விற்பனையாளர் தேவை. தங்குமிடவசதியும் மூன்று நேர உணவும் வழங்கப்படும். ஆரம்ப வேதனம் ரூபா 10000/= விலிருந்து வழங்கப்படும். ஆண்கள் மட்டும். வயது 18 - 22 வரை.
தொடர்பு :11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 3857 (40134) (4.6.3)

**மணமக்கள் தேவை**
✱70 இல் பிறந்த 1இல் செவ்வாய் 46 பாவமுடைய அரச நிறுவனத்தில் காவலாளியாக பணிபுரியும் விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
✱82இல் பிறந்த 7 இல் செவ்வாய் 35½ பாவ முடைய BSc MSc முடித்து அரச நிறுவனத்தில் பணி புரியும் மணமகனுக்கு அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகள் தேவை.
✱85 இல் பிறந்த 12 இல் சூரியனும் செவ்வாயும் 17½ பாவமுடைய BA MA முடித்து அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
✱83 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவமுடையB.Sc. சிவில் இஞ்சினியருக்கு பட்டதாரி மண மகள் தேவை.
✱78 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 30½ பாவமுடையPhd விரிவுரையாளருக்கு டாக்டர், இஞ்சினியர், BSc மணமகள் தேவை.
✱78 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 10¾ பாவமுடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற விவா கரத்துப் பெற்ற மணமகளுக்கு கனடாவில் மணமகன் தேவை.
✱81 இல் பிறந்தசெவ்வாய் பாவமில்லாமல் 2 பாவமுடைய ஆஸ்திரேலியாவில் பிரஜாவுரிமைபெற்று சொப்வெயர் இஞ்சினியராகப் பணிபுரியும் மணமகளுக்கு ஆஸ்திரேலியாவில் மணமகன் தேவை.
தொடர்பு: நாலிக்கண்ணன் திருமணசேவை (40151) (4.6.3)
இல 435/3, கோயில் வீதி, நல்லூர்.
T.P:077 607 0862

**காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு**
பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 15.50 குழி விஸ்தீரணம் கொண்ட 5 அறைகள் உள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 711 1400 (40068) (4.6.3)

**இரண்டு கூலர் வாகனம் விற்பனைக்கு**
ஒன்று 14 அடியும், மற்றொன்று 10½ அடியும் ஐஸ் உடைக்கும் மிசினும் குளிர்சாதனப் பெட்டியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 869 6216 (40011) (7.6.3)

**வீடு வாடகைக்கு**
யாழ் பலாலி வீதியில் கோண்டாவில் சேவிஸ் ஸ்ரேசன் அருகில் 4 அறைகள், 2 விறாந்தை (Halls), சமையலறை இணைந்த குளியலறை, வாகன தரிப்பிடவசதி போன்ற சகல வசதிகளுடைய வீடு வாடகைக்குண்டு. (தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது).
தொடர்பு: 077 703 6933 (39872)(4.6.3)




"ஸ்ரீ கோபாலமாணிஜ ஐயப்ப பக்த சபை மதுரை இந்தியாவின் இலங்கைக்கான தலைமை காரியாலயத்தின் சபரிமலை யாத்திரை செல்லும் 'மாலை அணியும்' தெய்வீக நிகழ்வின்



**அறிவித்தல்**
விடயம்:- யாழ்ப்பாண திருவாபரண 18 ஆம் படி குருசுவாமி அமரர் அ.இந்துதாசன் யாத்திரை குழுவின் சபரிமலை மாலை அணியும் நிகழ்வு
காலம்:- 17.11.2013 (ஞாயிற்றுக்கிழமை) (கார்த்திகை முதலாம் திகதி)
நேரம்:- 1) குருபூஜை (குருவின் இல்லத்தில்) காலை 8.00 - 9.00 மணிவரை
2) ஆலயத்தில் மாலை அணிதல் காலை 9.00 - 11.00 மணிவரை
இடம்:- குருசுவாமி இல்லத்தில் தாவடி தெற்கு, மானிப்பாயில் குருபூஜை இடம்பெற்று மாலை அணியும் நிகழ்வு தாவடி தெற்கு, மானிப்பாயில் உள்ள வடபத்திரகாளி கோவிலில் இடம்பெறும். (40140) (6.2.3)
நோக்கம்:- எவ்விதமான வருமான நோக்கமுமின்றி வறுமைப்பட்ட ஒருவரும் கூட சபரிமலை சென்று தெய்வ அருள் பெற வேண்டி நிற்கின்றோம்.
தொடர்பு: - இ.பிரசன்னா குருசுவாமி,
18 ஆம் படி இந்துதாசன் யாத்திரைகுழு, தாவடி தெற்கு, மானிப்பாய்.
தொ.பே:-077 260 1472, 077 791 7753, 077 628 2671



Complete Set - 148,500/=
245w Solar Panal - 2
1500w Inverter - 1
86 A Battery - 2
Charger Controler - 1
7 Hours working
Tube light (40w)-5
Fan (75 w) - 2
**KINGS ELECTRONICS**
No.11-A, Stanley Road, Jaffna. (40108)(3/6)
T.P: 021 222 3857 / 072 7949 242

**வேலை வாய்ப்பு**
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள நவீன முறையிலான
ஒவ்செற் பிறின்டிங் மற்றும் டிஜிற்றல்
அச்சகத்திற்கு
இத்துறையில் குறைந்தது 2 வருடங்களாவது அனுபவமுள்ள
✱ கணினிவடிவமைப்பாளர்கள்,
✱ டிஜிற்றல் பிறிண்டர்ஸ்
✱ ஓவ் செற் பிறிண்டர்ஸ்
✱ புகைப்படப்பிரதியாக்க இயந்திர இயக்குநர்
✱ வரவேற்பாளர் தேவை
இத்துறையில் அனுபவமுள்ளவர்கள் இதில் குறிப்பிட்ட விலாசதாரருக்கு தங்களது அனுபவச் சான்றிதழ்களின் புகைப்படப்பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.(வயது 21 இற்கு மேல் இருக்கவேண்டும்) அனுபவமுள்ள திடகாத்திரமான உடற் தகுதியுள்ளவர்களுக்கு வயது எல்லை இல்லை.
விண்ணப்ப முடிவுதிகதி : 30.11.2013
தொடர்புகளுக்கு : தி.இராசநாயகம் (தலைவர்)
மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
(C21288) (4.6.3)
தொலைபேசி இல. 077 060 4950, 021 492 3118

# பொருளாதார அபிவிருத்தியுடன் கலாசார அபிவிருத்தியும் வேண்டும்

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ.16

பொருளாதார அபிவிருத்தியுடன் கலாசார அபிவிருத்தியும் ஏற்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன்.

கண்டாவளையில் இடம்பெற்ற கலாசார விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் நடப்பு ஆண்டுக்கான கலாசார விழா கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பரந்தன் திருச் சிலுவை முன்பள்ளி வளாகத்தில் கண்டாவளைப் பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவை வெளியிட்டுவைத்த வளை ஓசை-3 நூலுக்கான வாழ்த்துச் செய்தியை வழங்கிய மாவட்ட அரச அதிபர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:-

கண்டாவளைப் பிரதேசம் சிறப்பான பண்பாட்டு அடையாளத்தைக் கொண்டது.

தமிழர்களின் வாழ்வையும் அவர்களது கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் வெளிக்கொணரும் வகையில் ஆண்டுதோறும் இந்த வளைஓசை நூல் வெளியிட்டு வைக்கப்படுகின்றது.

எமது நாடு அபிவிருத்தியை நோக்கி வேகமாக முன்னேறி வருகின்ற இந்த வேளையிலே பொருளாதார அபிவிருத்தியை மட்டுமல்லாமல் கலாசார அபிவிருத்தியையும் ஒருங்கே எட்டுவதற்கு இத்தகைய முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும்.







தமிழர்களின் கலையையும், மொழியையும், பண்பாட்டையும் பறைசாற்றி நிற்கும் இந்த நூலானது கண்டாவளையின் சிறப்பு அடையாளமாகவும் திகழும் என்பதில் ஐயமில்லை- என்றார்.

தொடர்ந்து வளைஓசை நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதையடுத்து கண்டாவளைப் பிரதேசத்தில் கலைப் பணியை ஆற்றியதற்கான விருதை ஆவரஞ்சாட்டி கண்டாவளையைச் சேர்ந்த கா.முருகேசுவும், சமயப் பணிக்கான விருதை சேற்றுக்கண்டி முரசுமோட்டையைச் சேர்ந்த கா.நித்தியானந்தனும், பொதுப் பணிக்கான விருதை பெரியகுளம் பகுதியைச்சேர்ந்த க.மாணிக்கராசாவும் பெற்றுக் கொண்டனர். (க-6)

## வவுனியா கடை வீதியில் கிராமிய வங்கி

வவுனியா, நவ.16

வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கி வவுனியா கடை வீதிப் பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11மணிக்கு வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சி.சுப்பிரமணியம் தலைமையில் இடம் பெறும் நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வங்கி நடவடிக்கைகளை ஆரம்பித்து வைப்பார்.

வவுனியா பலநோக்குக் கூட்டுறவு சங்கம் மக்களுக்கான பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும் வேளையில் அதன் மற்றுமொரு கட்டமாக மக்களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாகவும் சுயதொழில் கடன் வழங்கல் போன்ற திட்டத்தினை அறிமுகம் செய்யும் வகையிலும் இந்தக் கிராமியவங்கி திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-421)

# மருத்துவ தாதியர் பணிப்புறக்கணிப்பு





மன்னார், நவ.16

மன்னார் பொது மருத்துவமனையில் கடமையாற்றி வரும் தாதிய உத்தியோகத்தர்கள் தமக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மு.ப. 10 மணிவரை மருத்துவமனை வளாகத்தினுள் அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை அடிப்படைச் சம்பளத்துக்கு ஏற்ற அளவிலேயே மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்தன. அதற்கு மேலதிகமாக உள்ள கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாகத் தாங்கள் பல தடவை உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தபோதிலும். இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையென தாதிய உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையிலேயே மன்னார் பொது மருத்துவமனையில் கடமையாற்றுகின்ற தாதிய உத்தியோகத்தர்கள் தமது கோரிக்கையினை முன்வைத்து ஒரு மணி நேர அடையாள பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர்.

இதன்போது தமது கோரிக்கை அடங்கிய மனுவை மன்னார் மருத்துவமனையின் வைத்திய அத்தியட்சகரிடம் கையளித்தனர்.

இதனைத் தொடர்ந்து வைத்தியசாலையின் பணிகள் வழமைக்குத்திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

(க-12)

## வன்னேரிக்குளம் கிராமத்தை உவராகும் ஆபத்திலிருந்து பாதுகாக்க கோரிக்கை

வடமாகாண விவசாய அமைச்சரிடம் விடுக்கப்பட்டது

அக்கராயன், நவ.16

வன்னேரிக்குளம் கிராமத்தை உவராகும் ஆபத்திலிருந்து பாதுகாக்குமாறு வன்னேரிக்குளம் மக்கள் வடமாகாண விவசாய அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். 1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வன்னேரிக்குளம் கிராமம் தற்போதுஉவராகும்ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. சுமார் 500 வரையான குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ள இந்தக் கிராமம் உவராகும் ஆபத்துக் காரணமாக முற்றும் முழுதாக அழிவடையும் நிலையில் உள்ளது.

பூநகரியிலுள்ள பல கிராமங்கள் உவராக மாறியதன் தொடர்ச்சியாக வன்னேரிக்குளம் கிராமமும் அதனை எதிர்கொண்டுள்ளது. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் வன்னேரிக்குளத்தில் இடம் பெற்ற உவராக மாற்றமடைதல் தொடர்பான கூட்டத்தில் வன்னேரிக் குளத்துக்கு உவர் நீர் வரும் பகுதிகளில் தடுப்பணைகளை அமைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இறுதியாக கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் வன்னேரிக்குளம், ஆனை விழுந்தான் ஆகிய கிராமங்களை உவர் ஆபத்திலிருந்து பாதுகாக்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் தீர்மானங்கள் மற்றும் திட்டங்களை வேகமாக நடைமுறைப்படுத்தாது விட்டால் பூநகரியிலுள்ள பல கிராமங்கள் அழிவடைந்தது போன்று வன்னேரிக்குளம், ஆனை விழுந்தான் ஆகிய கிரா மங்களும் உவரினால் அழிவடைந்து மக்கள் அங்கிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்படும். இதேவேளை- வன்னேரிக் குளத்தின் குஞ்சுக் குளம் கிராமமும் ஆனை விழுந்தானின் மேற்குப் பகுதியும் உவரடைந்து 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டக் காணியை ராணுவத்திடமிருந்து விடுவிக்க அமைச்சரிடம் வேண்டுகோள்

கிளிநொச்சி, நவ.16

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டக் காணியிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவதுடன் கரும்புச் செய்கையை மேற்கொள்ளவும், கரும்பு ஆலையை அமைக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு ஸ்கந்தபுரம் விவசாயிகள் வடமாகாண சபையின் விவசாய அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக இங்குள்ள விவசாயிகள் மேலும் தெரிவிக்கையில்;

கரும்புத் தோட்டக் காணியிலிருந்து இராணுவம் வெளியேறமாட்டாது என்றே அறிகின்றோம். இதனால் சுமார் 200 ஏக்கர் காணியை நாம் இழந்த நிலையில் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றோம். இந்தக் காணிகள் விடுவிக்கப்பட்டால் எமது வாழ்வாதாரத்தில் நாம் பெரும் மாற்றத்தை அடைய முடியும்.

எனவே வட மாகாண சபை அமைந்துள்ள நிலையில் இந்தக் கரும்புத் தோட்டக் காணியை இராணுவத் திடமிருந்து மீட்டுத் தருமாறு விவசாய அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்- என்றனர். (க-18)

# வவுனியா சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு அபிவிருத்திச் சங்கம் பாராட்டு

வவுனியா, நவ.16

வவுனியா சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் பாராட்டப்பட்டுள்ளனர்.

2013 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் இந்தப் பாடசாலையைச் சேர்ந்த 29 மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். இவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பு பாராட்டத்தக்கதாக உள்ளதாக அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு ஊக்கமளிக்கும் வகையில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் மதிய உணவு வழங்கப்படுவதால் வசதி குறைந்த மாணவர்கள் உட்பட ஏனைய மாணவர்களும் பசியின்றி கற்க முடிகின்றது. இங்கு மாணவர்கள் சுய கற்றலில் ஈடுபடுவதையும் அவதானிக்க முடிகிறது. வகுப்பறை மிகவும் சுத்தமாக இருப்பதுடன் அழகியல் பூர்வமாகவும் காட்சியளிக்கிறது. மேலும் பாடசாலையைச் சுற்றிவர அழகிய பூமரங்கள் நடப்பட்டுள்ளன.

இந்த ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்குள் ஏற்பட்ட வளர்ச்சியைக் கண்டு மாணவர்களின் பெற்றோர்கள் பாராட்டுகின்றனர். அத்துடன் இந்தப் பாடசாலைக்கு வரும் கல்வி அதிகாரிகள் உட்பட உலக உணவுத் திட்ட அதிகாரிகளும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். இங்குள்ள மாணவர்களின் சுய ஊக்கம் தான் எல்லாவற்றுக்கும் மேலான விடயம் என்பதாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மேலும் தெரிவித்தனர். (க-402)

# ஒளிராத மின்குமிழ் கடற்கரை வீதியில்

மட்டக்களப்பு,நவ.16

அட்டாளைச்சேனை, கடற்கரை வீதியில் உள்ள மின்கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்குமிழ்கள் ஒளிராமல் காணப்படுவதால் மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அட்டாளைச்சேனை,கோணாவத்தை கடற்கரைப் பிரதேசம் கிழக்கு மாகாண அமைச்சர் எம். எஸ். உதுமாலெப்பையால் புனரமைக்கப்பட்டுள்ளதால் இந்தப் பிரதேச மக்களின் பொழுது போக்குக்குரிய இடமாக அது மாறியுள்ளது.

இந்தக் கடற்கரைப் பிரதேசத்திலுள்ள மின்குமிழ்கள் அதிகளவில் பழுதடைந்து காணப்படுவதால், இரவு நேரங்களில் இந்தப் பிரதேசம் இருளாகக் காட்சியளிக்கின்றது என்று மக்கள் தெரிவித்தனர். (ச)

# கிழக்கின் ஆட்சி கை விட்டது

## பிரசாந்தன் கவலை



கிழக்கு மாகாண ஆட்சி எமது கரங்களைவிட்டுச் சென்று விட்டது என்று கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப் பினரும் தமிழ் மக்கள் விடுத லைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலருமான பூ.பிரசாந்தன் கவலை தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு ஆரையம்பத்தி இராம கிருஷ்ண மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் நடை பெற்றது.

இந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆலயங்கள் சமயத்துக்கு மாத்திரமல்லாது சமூகத்துக்கும் சேவை புரிய வேண்டும். தமிழர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க கைகளில் இருக்கின்ற ஆயுதம் கல்வி மாத்திரமே.

கிழக்கு மாகாண ஆட்சி உட்பட எல்லாமே எமது கரங்களை விட்டுச் சென்று விட்டது.

இன்று போட்டி போட்டு எமது அரச அதிகார இருப்பைத் தக்கவைக்க வேண்டும். அதற்கு அடிப்படையிலிருந்து மாணவர்கள் தமது கல்வியில் ஆர்வம் செலுத்த வேண்டும்.- என்றார். (ச)

# வெள்ள இடரை எதிர்கொள்ள மட்டக்களப்பு தயார் நிலையில்

மட்டக்களப்பு,நவ.16

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாரிகாலத்தில் கடும் மழை பெய்யவுள்ளதால் வெள்ளத்தால் சிக்குண்டு வெளியேற முடியாமல் தவிக்கும் பொதுமக்களை பாதுகாப்பாக மீட் பதற்கு மாவட்ட ரீதியில் 10 இயந்திரப் படகுகள் தற்போது தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை இடர் முகாமைத்துவப் பிரி வின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எஸ்.இன்பராஜன் தெரிவித்தார்.

எதிர்வரும் மாதங்களில் இடர் ஏற்படும் போது மக்கள் எவ்வாறு பாதுகாப்பாக வெளியேறுதல் என்பது குறித்த ஒத்திகை நிகழ்வு செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு, பண்டாரியாவெளி கிராத்தில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பூகோள ரீதியாகப் பார்த்தால் மட்டக்களப்பு, படுவான்கரைப் பிரதேசம் மிகவும் தாழ்வான பகுதியில் தான் அமைந்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு முகாம்களில் இருக்கும் பொதுமக்களுக்கு பிரதேச செயலகங்களினூடாக சமைத்த உணவு வழங்கப்படும்.



அதற்குரிய நிதி ஒதுக்கீடுகள் மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் சமையல் பாத்திரங்கள், பாதுகாப்பு அங்கிகள், குடிதண்ணீருக்கான தண்ணீர்த் தாங்கிகள், இடர் முன்னாயத்தக் கருவிகள் போன்றன வழங்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தில் சிக்குண்டு வெளியேற முடியாமல் தவிக்கும் பொதுமக்களை பாதுகாப்பாக மீட்பதற்கு மாவட்ட ரீதியில் 10 இயந்திரப் படகுகளும் தற்போது தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புப் படையினர், பொலிஸார், இலங்கை மின்சார சபையினர், பிரதேச சபையினர், நீர்ப்பாசனத் திணைக்களத்தினர், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், சுகாதாரத் திணைக்களத்தினர் போன்றோருக்கு இடர் குறித்த முறையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு தெளிவூட்டல்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

இவர்கள் வெள்ள இடர் ஏற்படும் காலங்களில் இடர் முகாமைத்துவப் பிரிவுடன் இணைந்து கடமையில் ஈடுபடுவர்.

மக்கள் வதந்திகளை நம்பக் கூடாது. வெள்ள இடர் ஏற்படும் செய்தியை மக்களுக்கு உத்தியோக பூர்வமாக வழங்குபவர் கிராம அலுவலர் மட்டும்தான். அவர் தெரிவிக்கும் செய்தியை மாத்திரம் தான் மக்கள் நம்ப வேண்டும். வேறு யாரும் தெரிவிக்கும் தகவல்களை நம்ப வேண்டாம்.



கிராம அலுவலருக்கு பிரதேச செயலர் தகவல் வழங்குவார். பிரதேச செயலர்களுக்கு மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினராகிய நாங்கள் தகவல் வழங்குவேம்.

மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவுக்கு கொழும்பு தலைமை அலுவலகம் தகவல் வழங்கும். இவ்வாறு தான் இந்தத் தகவல் பரிமாற்றம் கொண்டு செல்லப்படுகின்றது.

எனவே இடர் பற்றிய தகவல்களை வதந்தி யாகப் பரப்பவும் வேண்டாம்; வதந்தியை நம்பவும் வேண்டாம்.

எதிர்வரும் மாதங்களில் வெள்ள இடர் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறு வெள்ள இடர் வந்தால் அதில் எவரும் பாதிக்கப்படக் கூடாது என்பதுதான் எமது நோக்கமாகும்.-என்றார். (ச)



சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையும், மட்டக்களப்பு லயன்ஸ் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வு ஊர்வலம் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த ஊர்வலத்தில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு பீட மாணவர்கள், தாதியர்கள்,வைத்தியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் பௌர்ணமி கலைவிழா

மட்டக்களப்பு,நவ.16

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் நடத்தும் பௌர்ணமி கலை விழா எதிர்வரும் 17 ஆம்திகதி மாலை 6 மணிக்கு மட்டக் களப்பு நகரிலுள்ள காந்தி பூங்காவில் நடைபெறவுள்ளது.

மாதம் தோறும் பௌர்ணமி தினத்தில் நடைபெறும் வகையில் ஏற்பாடாகியுள்ள இந்தப் பௌர்ணமி கலைவிழாவை ஒவ்வொரு பிரதேச செயலகமும் கலை நிகழ்வுகளைப் பகிரும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மாவட்ட கலாசார இணைப்பாளர் த.மலர்ச்செல்வன் தெரிவித்தார். (ச)

# உள்ளூராட்சி ஆணையாளரை இடமாற்றம் செய்ய வேண்டாம்

## காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கோரிக்கை

அம்பாறை, நவ.16

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணை யாளரை இடமாற்றம் செய்யாது, தொடர்ந்தும் பணியாற்றுவதற்கு ஆவன செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் முக்கியஸ்தரும், காரைதீவுப் பிரதேச சபைத் தவிசாளருமான செல்லையா இராசையா கோரிக்கை விடுத் துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றிலேயே இவ்வாறு கேட்டுள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகமானது இன்று வினைத் திறனுடனும், விரைவுடனும் சேவையினைத் திறம்பட முன்னெடுத்து வருகின்றது.

இதற்குத் தற்பொழுது கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகக் கடமையாற்றும் எம். உதயகுமாரின் சிறந்த தலைமைத்துவமும், ஒருங்கிணைப்பான வழிநடத்தல்களும் காரணமாகும்.

“ _ ”

கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் எம்.உதயகுமாரை இடமாற்றம் செய் யாது தொடர்ந்தும் பணியாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு உள்ளூராட்சி சேவையின் சிறப்புக்கென அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.உதயகுமார், இந்தப் பதவியில் 5 வருடங்கள் பூர்த்தி அடையாமலும், போதிய நியாய பூர்வ காரணங்களின்றியும் இடமாற்றம் செய்யப்பட இருப்பது பெரும் கவலையளிப்பதாக உள்ளது.

கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் எம்.உதயகுமாரை இடமாற்றம் செய்யாது தொடர்ந்தும் பணியாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (ச-30)

# வாசுவுக்கு நவி கடிதம்





மக்களின் மொழி உரிமைகள் தொடர்பில் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் மனப்பூர்வமான ஈடுபாட்டைப் பாராட்டி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31 திகதியிட்ட கடிதத்தில் மும்மொழிகளிலும் தேசிய கீதத்தை பாடும் அமைச்சரின் முன்மொழிவுக்கான தனது ஆதரவை. நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

மொழி தொடர்பாக நல்லிணக்க ஆணைக்குழுவின் சில பரிந்துரைகளை செயற்படுத்துவதில் தங்கள் பிரத்தியேக முன்னெடுப்புகளையும் மனப்பூர்வமான செயல்களையும் நான் பாராட்டுகிறேன்.

மும்மொழிகளிலும் தேசிய கீதத்தைப் பாடும் தங்கள் முன்மொழிவை நாடாளுமன்ற தெரிவுக்குழு ஆதரிக்குமென நான் நம்புகின்றேன். இது நல்லெண்ணத்தின் அடையாளமாக இருக்குமென நான் நம்புகின்றேன் - என்று அந்தக் கடிதத்தில் நவநீதம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

காழ்ப்புணர்ச்சியை தூண்டுதல் தொடர்பில் சட்டங்கள் ஆக்கப்பட வேண்டுமெனும் அமைச்சரின் அறிவிப்பை அவர் வரவேற்றுள்ளார்.

சிறுபான்மையினர் விவகார ஐ.நாவின் சுயாதீன நிபுணர்கள் இலங்கைக்கு பயணம் செய்வதற்கு ஆணையாளர் தனது ஆதரவை உறுதியளித்துள்ளார்.

இது ஒரு நீண்டகால வேண்டுகோள் என அவர் கூறியுள்ளார்.

## 24 1/2 இலட்சம் ரூபாவை மோசடி செய்த மின்சாரசபை காசாளருக்கு விளக்கமறியல்

### கொள்ளைப் பணத்தில் ஏழு மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு

இலங்கை மின்சார சபையின் கொள்ளுப்பிட்டிக் கிளைக் காரியாலயத்தில் பணிபுரிந்த எச்.ஏ.துமிந்த எனும் காசாளர் ஒருவர் சபைக்குச் சொந்தமான 24 இலட்சத்து 55 ஆயிரத்து 807 ரூபா 37 சதத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது அவரை இன்று(16ஆம் திகதி) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் திலினி கமகே உத்தரவிட்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டி ஆர்.ஏ.டீ. மெல் மாவத்தையிலுள்ள இலங்கை மின்சாரசபையின் நகரக் கிளையின் பொறுப்பதிகாரி திருமதி திலகா நிரோஷினி ஜயசிங்க கடந்த மாதம் 31ஆம் திகதி இது தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து புலனாய்வுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபின் இந்தக் காசாளரைக் கைதுசெய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

பி.ப. 3 மணி தொடக்கம் 5 மணிவரை சேகரிக்கும் பணம் காரியாலய பெட்டகத்தில் வைக்கப்பட்டு மறுநாள் பி.ப.3 மணிவரை சேரும் பணத்துடன் வங்கியில் இடப்படும். பெட்டகத்தின் ஒரு திறப்பு நிலையப் பொறுப்பதிகாரி நிரோஷினி ஜயசிங்கவிடமும் மற்றொரு திறப்பு இந்தக் காசாளரிடமும் இருக்கும்.

கடந்த 28ஆம் திகதி பொறுப்பதிகாரி விடுமுறையில் சென்று 31ஆம் திகதி திரும்பியுள்ளார். வந்ததும் வங்கி இருப்பைப் பரிசோதித்தபோது மேற்படி தொகை குறைவாகக் காணப்பட்டதையடுத்து அவர் பொலிஸில் முறைப்பாடு செய்திருக்கிறார்.

கணக்கு பரிசோதிக்கப்பட்ட சமயம் இந்தக் காசாளர் வேலைக்கு வராமல் தலைமறைவாகிவிட்டார். பொலிஸார் அவரைத் தேடிப்பிடித்து விசாரித்தபோது களவாடிய பணத்தில் அவர் ஏழு புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்களை வாங்கித் தனது வீட்டில் நிறுத்தி வைத்திருந்தது தெரியவந் தது.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் பொறுப்பதிகாரி மங்கள தெஹிதெனியவின் தலைமையில் இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

## சனல் - 4 ஊடகரின் வருகையால் இலங்கையின் மானம் காற்றில்!

### தேசிய சுதந்திர முன்னணி குற்றச்சாட்டு

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையை இலங்கைக்கு வரவழைத்து கன்னத்தில் அறைந்து கொண்டது போன்று சனல்-4 ஊடகவியலாளர் ஜொனத்தன் மில்லர் இலங்கை வருவதற்கு அனுமதி வழங்கியதன் மூலம் சர்வதேசத்திற்கு முன்னால் இலங்கை தரம் தாழ்த்தப்பட்டுள்ளது என்று தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளர் மொஹமட் முஸ்ஸாமில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சனல் - 4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்களை இலங்கைக்கு அழைத்ததன் மூலம் அரசு மிகப் பெரிய தவறை செய்துள்ளது.

இலங்கைக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து திரைப்படத்தை தயாரித்த ஜொனத்தன் மில்லர் நேர்மையான நோக்கத்தில் இலங்கைக்கு வருகை தரவில்லை.



நாடு சர்வதேசத்திற்கு முன்னால் பிரதான இடத்திற்கு செல்லும் சந்தர்ப்பத்தில் அதனை இருளை நோக்கி இட்டுச் செல்லும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது - என்றார்.

## கைதியின் குதத்திலிருந்து 12 ஹெரோயின் சரைகளும் 5 சிம் காட்டுகளும் மீட்பு

பதுளை சிறைச்சாலையிலிருந்து அநுராதபுர சிறைக்குக் கொண்டுவரப்பட்ட கைதியொருவரின் குதப் பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 12 ஹெரோயின் சரைகளும், 5 சிம் கார்டுகளும் மீட்கப்பட்டுள்ளதாக அநுராதபுர சிறையதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மத்திய மாகாணசபை கல்வித் திணைக்களத்தில் பணிபுரிந்த கணக்காய்வு அதிகாரி லலித் அம்பன்வெல மீது அசிட் வீசி பாரதூரமான காயத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கண்டி மாவட்ட நீதிமன்றத்தால் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஓமார் லெப்பே மரிக்கார் நிலூபர் எனும் கைதியிடமிருந்தே இவை மீட்கப்பட்டுள்ளன.

பதுளை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த இந்தக் கைதி கடந்த வியாழக்கிழமை அநுராதபுர நீதிமன்றத்தில் நடந்த வேறொரு வழக்குக்காக அநுராதபுர சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டார். அங்கு வந்தசமயம் அவர் பதுளை சிறைச்சாலையிலிருந்து 25 ஆயிரம் ரூபாவை மறைத்தெடுத்துக்கொண்டு வந்துள்ளதாக அநுராதபுர சிறையின் தலைமையதிகாரி துஷித உடு வரைக்குத் தகவலொன்று வந்தது. அதையடுத்து, கைதி சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அவரது குதத்தில் எதையோ மறைத்து வைத்திருந்தமை புலனாகியது. உடனடியாக அவர் அநுராதபுரம் போதன வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர் மறைத்து வைத்திருந்த 12 ஹெரோயின் சரைகளும் 5 சிம் கார்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

## வாகன விபத்தில் 2 வயது குழந்தை பரிதாப மரணம்

அலவத்துகொட - ரத்து கொஹோதிகல பிரதேசத்தில் வாகனம் ஒன்றின் சில்லில் அகப்பட்டு இரண்டு வயது குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தை தள்ளி இயக்க முயற்சித்த போது அதன் சில்லுக்குள் சிக்கி குழந்தை படுகாயமடைந்தது.

பின் அக்குரணை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குழந்தை சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளது.

உயிரிழந்த மொஹமட் ஹூனேய்ப் என்ற இரண்டு வயது குழந்தையின் சடலம் உடற் கூற்றுப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின் 2 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். வழக்கு அடுத்த வருடம் ஜனவரி 29ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

## பாகிஸ்தான் பிரசையை தடுத்து வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

உரிய ஆவணங்கள் எதுவும் இன்றி இலங்கையில் தங்கியிருந்த பாகிஸ்தான் பிரசையை முகாமில் தடுத்து வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடவுச்சீட்டு, விசா இன்றி சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருந்த பாகிஸ்தான் பிரஜை நேற்றுமுன்தினம் காலை ஆனமடுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஆடிகம நகரில் வைத்து கைது செய்யப்பட்ட இவர், நேற்றுமுன்தினம் மாலை ஆனமடுவ நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அதன்போது குறித்த பாகிஸ்தான் பிரசையை எதிர்வரும் 28ஆம் திகதி வரை மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## சடலம் மீட்பு

பெந்தோட்டைப் பகுதியில் கடலில் மூழ்கி காணாமற் போன ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காணாமல்போன இவரது சடலம், நேற்று அதிகாலை கொஸ் கொட பொலிஸ் பிரிவிலுள்ள கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டது.

ரோபொல்கொட, பெந்தோட்டைப் பகுதியைச் சேர்ந்த 38 வயதான ஒருவரே இந்தச் சம்பவத்தில் பலியாகியுள்ளார்.

## ஹெரோயினுடன் பெண் கைது

கண்டி ஒகஸ்டாவத்த பிரதேசத்தில் ஹெரோயின் வைத்திருந்த பெண்ணொருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஓட்டோ ஒன்றை சோதனை செய்தபோது அதில் பயணித்த பெண்ணின் கைப்பையிலிருந்து 6 கிராம் 200 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட பெண் கண்டி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவரை எதிர் வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# போர்க்குற்றவாளிகளுக்குத் தண்டனையா? ஜனாதிபதியை ஒருபோதும் நம்பவே முடியாது

### கடுமையாகச் சாடுகின்றார் பிரபா எம்.பி.



போர்க்குற்றங்கள் புரிந்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் என்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கூற்றை நம்பமுடியாது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையே இந்த அரசு இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை. அப்படியிருக்கும் போது போர்க்குற்றங்கள் பின்னணியில் தெரிவித்திருக்கும் கருத்து ஒருபோதும் நடைபெறப்போவதில்லை.

இவ்வாறு அரசின் பங்காளிக் கட்சியான ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐந்து விடயங்களை முன்வைத்துள்ளார். முதலாவது புலம்பெயர்ந்த சமூகத்தின் கருத்துகளை தான் செவிமடுக்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார். இரண்டாவது தமது கருத்துக்களையும் புலம்பெயர்ந்த சமூகம் செவிமடுக்க வேண்டும் என்றார். மூன்றாவது புலம்பெயர் சமூகம் இலங்கைக்கு வந்து நிலைமையை தெரிந்துகொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்தார். நான்காவது நாட்டை ஒருபோதும் இரண்டாக பிரிப்பதற்கு இடங்கொடுக்க மாட்டேன் என்றார். ஐந்தாவது போர் குற்றங்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு யாராக இருந்தாலும் அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தார். இந்த ஐந்து விடயங்களையும் புலம் பெயர்ந்துள்ள சமூகம் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் மட்டுமின்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதனைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

எவ்வாறாயினும் நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கு நாட்டில் வாழும் தமிழர்களோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ விரும்பவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காணவே புலம்பெயர்ந்த சமூகம் விரும்புகின்றது என நினைக்கின்றேன்.

புலம்பெயர்ந்த தமிழர்களை ஒரு தரப்பினராக ஜனாதிபதி ஏற்றுக் கொண்டிருப்பது இதுவே முதல் முறையாகும். இது புலம் பெயர்ந்த சமூகத்தின் சக்தியை எடுத்துக் காட்டுகிறது. இதனை பிரயோகித்து புலம் பெயர்ந்த சமூகம் ஒரு கட்டமைப்புக்குள் வந்து இலங்கை அரசுடனான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தனது நிலைப்பாடுகளை அடிக்கடி இலங்கை அரசு மாற்றிக் கொள்வதை நாங்கள் பார்த்திருக்கின்றோம். அதற்காக அனைத்து சந்தர்ப்பங்களையும் நாம் உதறிவிட்டு நின்றால் இன்னும் பல தலைமுறைக்கு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது.

வெறுமனே போரில் வென்ற அரசை மாற்ற வேண்டும் என்ற குறிக்கோளில் மட்டும் நாம் செயற்படுவோமேயானால் ஒரு போதும் எமது மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது.

என்று பெரும்பான்மை மக்களுக்கு இந்த அரசு தேவையில்லை என தோன்றுகிறதோ அன்றுதான் அரசில் மாற்றம் ஏற்படப் போகின்றது. அதுவரை நாம் எமது பிரச்சினைக்குத் தீர்வு காணாமற் காத்திருப் போமானால் அது எமது எதிர்காலத்திற்கு உகந்ததல்ல. ஆகவே இன்றைய நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுக்க வேண்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் புலம்பெயர்ந்தவர்களும் சாணக்கியமான முறையில் செயற்படவேண்டும் - என்றார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அர்த்தபுஷ்டியான முன்னேற்றத்துக்கு உதவாத கருத்துகளால் பலனில்லை

பொதுநலவாய உச்சி மாநாடு நேற்று கொழும்பில் கோலாகலமாக ஆரம்பமாகியுள்ளது. உலக நாடுகளின் தலைவர்கள் ஒன்றுகூடுவதும், பேசுவதும், விடைபெறுவதும் மாநாட்டுச் சம்பிரதாயம். அத்துடன் அதன் செயற்பாடுகள் முடிவடைந்துவிடும்.

ஆனால் இம்முறை சற்று வித்தியாசம். ஜெனீவா மாநாடு போன்று மனித உரிமைகள் குறித்தும், போர்க்குற்றங்கள் குறித்தும் நிறையப் பேசப்படுகின்றது. மாநாடு தொடர்பான ஊடகவியலாளர் மாநாடுகளில் வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளில் மனித உரிமை மீறல்கள் குறித்தும் போர்க்குற்றங்கள் குறித்துமே முன்னுரிமை வழங்கப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இப்பத்தியில் ஏற்கனவே தொட்டுக்காட்டப்பட்டமை போன்று கனடா, இந்தியா, மொரீசியஸ் ஆகிய மூன்று நாடுகளின் பிரதமர்கள் மாநாட்டைப் பகிஷ்கரித்ததுக்கு மனித உரிமைகள் பிரச்சினைதான் காரணம். மாநாட்டுக்கு வந்துள்ள பிரிட்டிஷ் பிரதமர் கமரூனின் குற்றச்சாட்டும் இத்தகையதாகவே அமைந்தது.

பிரிட்டிஷ் பிரதமர் கொழும்பு வரமுன் புதுடில்லிக்கும் கல்கத்தாவுக்கும் பயணம் செய்தார். 'ரைம்ஸ் ஒவ் இந்தியாவுக்கு அவர் தெரிவிக்கை யில், 2009 இறுதிப் பகுதியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கூறியதுடன் நீதியான விசாரணை இடம்பெறாதவிடத்து சர்வதேச விசாரணை தேவை என்றும் வலியுறுத்தினார்.

"போர் முடிவடைந்து நான்கு வருடங்கள் கழிந்தும் இலங்கை தனது செயற்பாடுகளில் போதுமான் அளவு முன்னேற்றம் கொண்டிருக்கவில்லை. பேச்சுச் சுதந்திரம், ஊடக சுதந்திரம், சித்திரவதைக் குற்றச்சாட்டுகள், இராணுவ நெருக்குவாரம், இனங்களிடையே நல்லிணக்கம் குறித்து போதுமான முன்னேற்றம் இல்லை" - என்று அவர் தெரிவித்துள்ளார். இலங்கையில் ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் பயமுறுத்தப்படுகின்றனர் என்றும் தொட்டுக்காட்டினார்.

பொதுநலவாய மாநாட்டையொட்டி நடைபெறும் ஊடகவியலாளர்கள் மாநாடுகளிலும் பிரிட்டிஷ் பிரதமருடனான சந்திப்பின்போதும் ஜனாதிபதி இம்முறை இறுதிப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் பற்றியே முகம்கொடுக்க நேரிடும் என்பது வெளிச்சமாகிறது.

நேற்று முன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி கலந்துகொண்ட ஊடகவியலாளர் மாநாட்டில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு குறித்துப் பலரும் கேள்வி எழுப்பினர். குறிப்பிட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவும் கலந்துகொண்டார்.

வெளிநாட்டு ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு ஜனாதிபதி பதிலளிக்கையில், பிரிட்டிஷ் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸுடனான சந்திப்பின்போது, 2009 மட்டுமல்ல முழு 30 வருட போர் குறித்தும் விவாதிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருந்தார். போர்க் குற்ற மிழைத்தோர் இலங்கையின் சட்டத்தின் கீழ் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்றும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

போரின் இறுதிப் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து அரச படைகள் மீது மட்டும் ஐ.நா. குற்றம் சுமத்தவில்லை. விடுதலைப் புலிகள் மீதும் குற்றச்சாட்டு உண்டு. அதேபோன்று முழு 30 வருட காலப் போரிலும் இரு தரப்புகள் மீதும் குற்றச்சாட்டுகள் உள்ளன. ஆனால் ஐ.நாவால் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருப்பது 2009 இறுதிப் போரின்போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாகவே.

இறுதிப் போரின் போது அரச படைகளால் மனித உரிமைகள் மீறப்பட்டன. போர்க்குற்றம் இழைக்கப்பட்டது என்று பான் கீ - மூனின் ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையில் குற்றச்சாட்டு உண்டு.

ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையிலும், இறுதிப் போரில் படையினர் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து உள்நாட்டில் விசாரணை செய்யப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவுக்கு 2002 ஆம் ஆண்டு முதல் 2009 வரையிலான சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்கே ஆணை வழங்கப்பட்டது. 30 வருட காலச் சம்பவங்கள் குறித்து விசாரிக்க ஆணை வழங்கப்படவில்லை. தற்பொழுது 30 வருட காலச் சம்பவங்கள் குறித்துப் பேசத் தயார் என்கிறார் ஜனாதிபதி.

காலத்துக்கும் வேளைக்கும், அவ்வப்போது எதிர்கொள்ளும் அழுத்தங்களைக் குறைத்துவிடுவதற்கான "கெட்டித்தனமான" கருத்துக்களால் அல்லது பதில்களால் எதுவும் அர்த்தபுஷ்டியாக நடைபெறமாட்டாது. புதிது புதிதாகக் கருத்துக்களை மெருகூட்டிக் கூறுவதால் மட்டும், எதுவும் விளையும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. அவ்வளவே...!



# எத்தனை ராஜபக்ஷாக்கள்?

கொழும்பில் இவ்வாரம் பொதுநலவாயத்தின் உச்சி மாநாடு நடைபெறவுள்ள்தால் இலங்கையின் ஆளும் குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாக இணைந்துள்ளனர். இவர்களில் சிலர் மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையிலும் இவர்கள் பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டை நடத்துவதற்கு ஒன்றாக இணைந் துள்ளனர்.

ஆகவே இந்த ராஜபக்ஷக்கள் யார்? 2005இருந்து இலங்கையின் ஜனாதிபதியாக ராஜபக்ஷ உள்ளார். இவர் நாட்டில் வாழும் மக்களின் அரைவாசிப் பேரின் வாக்குகளை மட்டுமே பெற்று நாட்டின் ஜனாதிபதியானார். மஹிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்து நான்கு ஆண்டுகளில், இலங்கையில் தொடர்ந்துகொண்டிருந்த போரை நிறைவுக்குக் கொண்டு வந்ததுடன் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்ததன் மூலம் பிரபலமடைந்துள்ளார்.

2010இல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 58 சதவீதமான வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார். இதனைத் தொடர்ந்து இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி மூன்றாம் முறையாகவும் அதிபராகப் பதவியேற்க முடியும் என்கின்ற வரைபு அரசியல் யாப்பில் இணைக்கப்பட்டது. இதற்கு இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவை வழங்கியிருந்தனர். இவ்வாறான வரைவுகள் இலங்கையில் சர்வாதிகார ஆட்சி நிலவுவதற்கு வழி வகுப்பதாக ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் நவிப்பிள்ளை உட்படப் பலர் சுட்டிக்காட்டினர்.

### குடும்ப உறுப்பினர் 29 பேர் பிரபலம்

ராஜபக்ஷ என்கின்ற குடும்பப் பெயரில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த மட்டுமல்ல ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த 29 உறுப்பினர்கள் பிரபலமடைந்துள்ளனர். ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த 29 உறுப்பினர்கள் இலங்கை அரசின் சிவில் சேவை, ஊடகம் மற்றும் தொழிற்துறை போன்றவற்றில் மிக முக்கிய உயர் பதவிகளை வகிப்பதாக சமாதானம் மற்றும் நீதிக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதியின் இரண்டு சகோதரர்களான பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் மிக முக்கிய பதவிகளில் உள்ளனர். இவர்கள் இலங்கையின் பாதீட்டின் 45 சதவீதத்தைக் கட்டுப்படுத்துவதுடன், அரச அமைச்சுக்களையும் முகாமை செய்கிறார்கள்.

மஹிந்தவின் பிறிதொரு சகோதரரான சமல் ராஜபக்ஷ, இலங்கை நாடாளுமன்றின் சபாநாயகராக உள்ளார். இலங்கை ஜனாதிபதியின் குடும்பம் மட்டுமல்லாது, மஹிந்த பதவிக்கு வந்ததால் இவரது சொந்த இடமான அம்பாந்தோட்டையில் பொதுநலவாய அமைப்பின் இளையோர் அமைப்பின் மாநாடு இடம்பெற்றது.

### நகரமயமாகும் அம்பாந்தோட்டை

10,000 வரையான மக்கள் வாழ்கின்ற மிகச் சிறிய மீன்பிடிக் கிராமமான அம்பாந்தோட்டையில் அனைத்துலக கருத்தரங்கு மையம், 235 ஏக்கர் நிலப்பரப்பில் திரையரங்கம், 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் துறைமுகம் மற்றும் அனைத்துலக துடுப்பாட்ட அரங்கம் உட்பட பல பில்லியன்கள் பெறுமதியான முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை அபிவிருத்தி செய்யப்படுவதற்கு அரசியல் செல்வாக்கே காரணம் எனச் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும்,தென் இலங்கையில் ஆசியாவின் நுழைவாயில் ஒன்றை அமைத்து வருவதாக இலங்கை ஜனாதிபதி தெரிவித்துள்ளார். விடுதிகள், உணவு விடுதிகள், நிர்வாகக் கட்டடங்கள், வங்கிகள் போன்ற பல்வேறு வசதிகள் அம்பாந்தோட்டைக் கிராமத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மஹிந்தவைப் போலவே கோத்தபாய ராஜபக்ஷவும் பல்வேறு போர் மீறல்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டார். மஹிந்த ராஜபக்ஷ 2005இல் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலராக நியமிக்கப்பட்டார்.

### இறுதிக் கட்டளைகள் கோத்தாவிடம் இருந்தே கிடைத்தன

இலங்கையில் போர் முடிவடைந்து இரண்டு ஆண்டுகளின் பின்னர், இலங்கையில் நிலைகொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக, பல பத்தாயிரக்கணக்கான பொதுமக்கள் தமது உயிர்களை இழப்பதற்குக் காரணமாக இருந்த, இறுதிக் கட்டப் போரை நடத்துவதற்கான கட்டளைகள் கோத்தபாயவிடமிருந்தே கிடைக்கப் பெற்றதாக சாட்சியம் வழங்குகின்ற இரண்டு இலங்கை இராணுவ வீரர்களின் வாக்குமூலத்தை சனல் -4 தொலைக்காட்சிச் சேவை ஜூலை 2011 இல் வெளியிட்டது.

எந்த வழியிலாவது போரை முடிவுக்குக் கொண்டு வருமாறு இலங்கை இராணுவ வீரர்களுக்கு கோத்தபாய கட்டளை பிறப்பித்ததாக தமது வாக்குமூலங்களை வழங்கிய இராணுவ வீரர்களில் ஒருவர் தெரிவித்திருந்தார். போரின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்த இரண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களைப் படுகொலை செய்யுமாறு கோத்தபாய கட்டளை வழங்கியதாக மற்றைய இராணுவ வீரர் தெரிவித்திருந்தார்.


போர் மீறல்களைப் புரியுமாறு கோத்தபாயவே கட்டளை வழங்கியிருந்ததாக, தமிழீழ விடுதலைப் புலிகளைப் போரில் தோற்கடிப்பதில் பிரதான பங்கு வகித்த, வரும் போர்க் குற்றங்களுக்கு பொறுப்பளிக்க வேண்டியவர் எனக் குற்றஞ் சுமத்தப்பட்டவருமான இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார்.

### இலங்கை அரசே காரணம்

இலங்கையின் இறுதிக் கட்டப் போரின் போது 130,000 வரையான தமிழ் மக்கள் போர் வலயத்துக்குள் அகப்பட்டுத் தவித்தனர். இலங்கை இராணுவத்தால் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட இடத்தில் கூடிய மக்கள் மீது இலங்கை இராணுவத்தினர் எவ்வாறு திட்டமிட்டு தாக்குதல்களை மேற்கொண்டனர் என்பதை சனல் - 4 தொலைக்காட்சிச் சேவையால் வெளியிடப்பட்ட பாதுகாப்பு வலயம் என்கின்ற காணொலியில் சாட்சிப்படுத்தப்பட்டுள்ளது. வைத்தியசாலைகள் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இறுதிக்கட்டப் போரின் போது 40,000 வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாக ஐ.நா மதிப்பிட்டுள்ளது. இந்த இழப்புக்களுக்கு மஹிந்த மற்றும் கோத்தபாய ராஜபக்ஷவால் ஆளப்படும் இலங்கை அரசே காரணமாக உள்ளது. ஆனால்இலங்கையை ஆளும் ராஜபக்ஷாக்களும் இலங்கை அரசும் இந்தப் போர்க்குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளன. கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதன் மூலம் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் உட்பட உலகத் தலைவர்கள் , ஆளும் அரசுக்கு ஆதரவு வழங்குவதாக மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் குற்றஞ் சுமத்தியுள்ளனர். எதுஎவ்வாறிருப்பினும் ராஜபக்ஷ குடும்பத்தின் அதிகார ஆட்சி என்பது தற்போதும் இலங்கையில் நீடித்துள்ளது என்பது வெளிப்படை.

*(மூலம் -சனல் - 4 நன்றி புதினப் பலகை)*



அருவி

## இருமொழித் திறன் முதுமை
# மறதியை தள்ளிப்போடும்

ஒருவருக்கு உள்ள இருமொழித்திறன் அவருக்கு முதுமை மறதி தோனறுவதை ஐந்தாண்டுகள் தாமதப்படுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சியில், எழுதப் படிக்கத் தெரியாத, வெறும் இருமொழிகளை மட்டும் பேசுபவர்களிடையே முதுமை மறதியைத் தள்ளிப்போடுவதும் தெரிய வந்திருக்கிறது.

ஆய்வுக்குப் பெரும்பாலானோர் இருமொழிகளையோ, அல்லது அதற்கும் மேலாகவோ தினசரி வாழ்க்கையில் வீட்டிலும், அலுவலகத்திலும், பாடசாலைகளிலும் என ஒரே நாளில் பலமுறை மாற்றி மாற்றிப் பேசும் வகையில் அமைந்தது. ஒருமொழியில் இருந்து மறுமொழிக்கு மாற்றி மாற்றிப் பேசுவது மூளைக்குச் சிறந்த பயிற்சியாக அமைகிறது. இவ்வாறு செய்யும் பொழுது, மொழிகளின் ஒலி வடிவம், இலக்கணக் கட்டமைப்பு, கலாசாரப் பின்னணிக்கு ஏற்ப மொழியைப் பயன்படுத்தும் முறை எனப் பலவற்றையும் மூளை கவனிக்க வேண்டியிருக்கிறது. இத்தொடர் பயிற்சி முதுமை மறதியில் இருந்து மூளையைப் பாதுகாக்கிறது என்கிறார் ஆராய்ச்சியாளர்களில் ஒருவரான தாமஸ் பாக். இவர் ஸ்கொட்லாந்தில் உள்ள எடின்பர்க் பல்கலைக் கழகத்தின் நரம்பியல் ஆராய்ச்சியாளர். இந்த ஆராய்ச்சியில் உடன் ஈடுபட்ட மற்றொரு ஆராய்ச்சியாளர் ஹைதராபாத் நிஜாம் மருத்துவ நிலையத்தின் நரம்பியல் ஆராய்ச்சியாளர் சுவர்ணா ஆலடி என்பவர். இவர் அனைத்துத்தரப்பு இந்திய மக்கள் வாழ்விலும் இருமொழி பயன்பாடு இயல்பாக பரவி இருப்பது இந்த ஆராய்ச்சியினை மேற்கொள்ள உதவியாக இருந்தது என்கிறார்.

முதுமை மறதி தாக்கப்பட்டு சிகிச்சை பெறும் முதியவர்கள் 648 பேரில், பலமொழித் திறன் கொண்ட பிரிவினருக்கு 65 வயதில் தோன்றத் தொடங்கிய முதுமை மறதி, அத்திறன் இல்லாதவர்களை 61 வயதிலேயே ஆட்கொண்டிருப்பது இந்த ஆராய்ச்சியில் தெரிய வந்ததுள்ளது. அத்துடன் இருமொழி பேசும் திறன் உள்ளவர்களிடம் முதுமை மறதி நோய்களான மூளைக்கு இரத்த ஓட்டம் குறைவதால் வரும் மறதி, மூளையின் முன்கதுப்புகள் வளர்ச்சி குறைவதால் வரும் மறதி என்பன தாமதப் பட்டிருக்கிறது என்பதும் தெரிய வந்துள்ளது. இதற்கும் முன்னர் கனடாவில் புலம் பெயர்ந்து வந்த இருமொழி பேசும் திறன் உள்ளவர்களை அந்நாட்டு மக்களுடன்ஒப்பிட்டபொழுதும் இந்தஉண்மை தெரிய வந்துள் ளது. ஆனால் அந்த ஆராய்ச்சியில் புலம் பெயர்ந்தவர்களின் கலாசாரப் பின்னணி ஏதும் காரணமாக இருக் குமோ என்று தோன்றிய ஐயம் ஒரே நகரில் வசிக்கும் மக்களிடம் நடத்திய ஆய்வின் மூலம் நீங்கியுள்ளது.

### புதிர்கள் விடுவிப்பதில் சிறந்தவர்கள்

இத்துடன் இது போன்ற ஆராய்ச்சிகள் பலவும் முன்பு வெளி வந்துள்ளன. அவற்றில் இருமொழி பேசுபவர்கள் சிறந்த அறிவாளிகளாகவும் விளங்குவது கண்டறியப் பட்டுள்ளது. இருமொழி பேசுபவர்கள் புதிர்களை விடுவிப்பதில் விரைவாகச் செயல்படுவதை மழலையர் பள்ளி சிறார்களைக் கொண்டு கண்டறிந்துள்ளார்கள்.

மழலையர்கள் கணினித் திரையில் உள்ள நீல நிற வளையங்களையும், சிவப்புநிற சதுரங்களையும் தனித்தனியாகப் பிரிக்குமாறு சொல்லப்பட்டன. அவற்றைப் பிரித்துப் போடப்படவேண்டிய பெட்டியிலோ நீல நிற சதுரமும், சிவப்பு நிற வளையமும் என மாற்றிப் படம் எழுதியிருக்கும். நிறங்களை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கும் செயலைச் சிறார்கள் சுலபமாகச் செய்து முடித்தனர். பின்னர், மீண்டும் விளையாட்டை மாற்றி வடிவங்களைக் கொண்டு அவற்றைப் பிரித்து வளையம் மற்றும் சதுரம் வரைந்த பெட்டியிலே போடவேண்டும். ஆனால் நிறத்தைப் பற்றி கண்டு கொள்ளக்கூடாது என்ற விதிமுறை கொடுத்தனர். இது சவால் நிறைந்தது. வடிவங்களின் நிறம் கவனச் சிதறலைக் கொடுக்கும். ஆனால், இம்முறையில் வடிவங்களைப் பிரிப்பதில் இருமொழி பேசும் திறன் உள்ள மாணவர்கள் விரைவில் செய்து முடித்துவிட்டனர். இது போன்று இருமொழித் திறன் அடிப்படையில் நிகழ்த்தப் பட்ட பல ஆராய்ச்சிகளிலும் இது போன்ற முடிவே கிடைத்துள்ளது. இதனால் இருமொழி பேசும் திறன் உள்ளவர்களின் மூளை கட்டளைகளை நிறைவேற்றி செயல்களை முடிப்பதில் விரைந்து செயல்படுவது தெரிய வந்துள்ளது. ஒரு மொழியில் இருந்து அடுத்த மொழிக்கு மாறும் செய்கை, நாளடைவில் கவனச் சிதறல்களைக் குறைத்து விரைவில் செயல்பட உதவுவது ஆராய்சிகள் மூலம் தெரிய வந்துள்ளது. இதனால் திட்டமிடுதல், புதிர்களை விடுவித்தல் போன்ற சவால் நிறைந்த செயல்களை விரைவில் முடிப்பது இருமொழித் திறன் உள்ளவர்களுக்கு எளிதாக இருக்கிறது.

### குழந்தைகளிடம் ஆராய்ச்சி

மற்றொரு ஆராய்ச்சி ஆக்னெஸ் கோவக்ஸ் என்பவரால் குழந்தைகளை வைத்து இத்தாலியில் நிகழ்த்தப்பட்டுள்ளது. அதில் பிறந்ததில் இருந்து இருமொழிகள் புழங்கும் சூழ்நிலையில் வளரும் ஏழு மாதக் குழந்தைகளை ஒரு மொழி மட்டுமே பேசும் சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட குழந்தைகளுடன் ஒப்பிட்டனர். இரு பிரிவுக் குழந்தைகளுக்கும் ஒலி எழுப்பிய பின்னர், திரை ஒன்றில் ஒரு பக்கத்தில் இருந்து பொம்மை வருவதைக் காண்பித்தனர். சிலமுறை செய்த பிறகு ஒலி எழுப்பிய அடுத்து குழந்தைகள் பொம்மை வரும் திசையை நோக்கத் துவங்கின. பின்னர் ஒலி எழுப்பிய பின்னர் பொம்மையை எதிர் புறத்தில் இருந்து வரும்படி செய்தனர். இருமொழி சூழ்நிலைக் குழந்தைகள் உடனே மறு திசையைப் பார்க்கக் கற்றுக் கொண்டன. ஆனால் ஒரு மொழிச் சூழலில் வளர்ந்த குழந்தைகளுக்கு இந்த மாற்றம் புரியாது பழைய படியே முதலில் கற்ற திசையையே நோக்கின.

பெற்றோர்களை தங்களது பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்கு , இருமொழிப் பயிற்சியும் அறிவுத் திறனை மேம்படுத்தும் என்று விளங்க வைக்கவேண்டும். சிறுவயது மூளையின் பண்பான எதையும் உள்வாங்கும் திறனை இளமை யில் கல்வி என்ற வழக்கின் மூலமாகக் காலம் காலமாக அறிந்தவர் கள் நாம் என்பதை மறக்கத் தேவையில்லை.

---

# மனிதன் இருக்கின்றானா?

> 1998 பெப்ரவரி 17 அன்று இந்த வாயேஜர்-1, அதற்கு முன்னர் அனுப்பப் பட்ட பயனியர்-10' விண் கலனையும் கடந்துவிட்டது.

நமது சூரிய மண்டலத்திலேயே இன்று பூமி தவிர, செவ்வாய், வியாழன் கோளின் யூரோப்பா எனும் சந்திரன் மற்றும் சனிக் கிரகத்தின் டைட்டன் துணைக் கோள் போன்று ஒரு சில வான் பொருள்கள் முக்கியமானவை. அங்கு உயிரினம் வாழ்வதற்கு அல்லது உருவாக வாய்ப்பு உண்டு.

வியாழனை அணுகி ஆராயும் முயற்சியில் 1972, 1973 ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவால் இரண்டு விண்கலங்கள் அனுப்பப்பட்டன. இவை சூரியக் குடும்பத்தை விட்டே வெளியேறிப் பல்லாண்டுகள் ஆயின.

1977 செப்ரெம்பர் 5 அன்று அமெரிக்கா செலுத்திய வாயேஜர்-1 விண்கலம் மணிக்கு 44,000 கிலோமீற்றர் வேகத்தில் அண்டவெளிக்குள் பாய்ந்து செல்கின்றது. நம் சாலை வாகனங்களின் வேகத்தைவிட ஆயிரம் மடங்கு. என்ன தலைச்சுற்றுகிறதா? ஆனால் மனிதன் பூமியில் தயாரித்த ஒரு பொருள் இன்று சூரிய மண்டலம் தாண்டி 1300 கிலோமீற்றர் அண்டவெளிக்குள் புகுந்துவிட்டது.

பூமியும், சந்திரனும் இணையாகத் தோன்றும் காட்சியை 1977 செப்ரெம்பர் 18 அன்று முதன் முறையாக படம் பிடித்தது வாயேஜர். உலகின் முதல் வெளிப்புறக் காட்சிப் படம்.

தொடர்ந்து, 1979 மார்ச் 5 அன்று வியாழன் கோளினை ஏறத்தாழ 19,000 கிலோமீற்றர்கள் நெருங்கி ஆராய்ந்தது. சந்திரனையும் படம் பிடித்தது. வியாழன் கோள் குரு பார்வையில் மட்டும் அல்ல, உங்கள் பார்வையிலும் அதைப் பார்த்தால்ஐயோ என்றுதான்அலறத் தோன்றும். இன்றைக்கும் எரிமலைக் குழம்பும் புகையுமாகச் சீற்றமுடன் இருக்கும் கோள் அது.

ஏதாயினும், 1990 பெப்ரவரி 14 அன்று 600 கோடி கிலோமீற்றர் தூரத்தில் பறந்தபோது ஆகாய கங்கை ஆகிய நம் பால்வீதி அண்டத்தின் ஒரு புயத்தில் பூமி, இளம்நீலப்புள்ளி ஆகத்தென்பட்டதாம். காரல் சாகன் என்ற அறிவியல் புனைகதை எழுத்தாளர் இதே தலைப்பில் தனிப் புத்தகமே எழுதிவிட்டார். சனிக்கு இடப்பெயர்ச்சி செய்த அமெரிக்காவின் காசினி விண்கலமும் இந்தக் காட்சியைப் படம் பிடித்தது.

சூரிய மண்டலத்தின் எத்தனையோ சுவாரஸ்யமான சந்திரன்களைக் கண்டு அறிவித்த வாயேஜர் அண்டவெளியின் வெப்பப் பிளாஸ்மா மண்டலத்தில் நீந்திச் செல்கின்றது. அத்தனையும் புரோட்டான் சமுத்திரம். அதாவது ஹைடிரஜன் அணுகருக்களின் பிரவாகம்.

1998 பெப்ரவரி 17 அன்று இந்த வாயேஜர்-1, அதற்கு முன்னர் அனுப்பப்பட்ட பயனியர்-10' விண்கலனையும் கடந்துவிட்டது. பூமியைச் சுற்றிலும் அயன மண்டலம், வளிமண்டலம் ஆகியவற்றுக்கு அப்பால் 64000 கிலோமீட்டர் உயரக் காந்தமண்டலம் போர்த்து இருப்பது பலருக்கும் தெரியாது. சூரியனில் வெடித்துக் கிளம்பும் மின் அதிர்ச்சி அலை முகப்பில் இருந்து நம்மைக் காக்கும் கவசம். அந்தப் புதிய மண்டலத்தினுள் 2012 டிசம்பர் 28 அன்று நுழைந்தது வாயேஜர்-1.

நல்லவேளையாக 2025 வரை இந்த விண்கலம் புவியோடு தொடர்பு கொண்டு இருக்கும். பின்னர் ஆய்வு உபகரணங்கள் அணைத்து வைக்கப்படும். அடுத்த 10 ஆண்டுகள் வாயேஜரின் பயண விவரத் தகவல் பெறவே இந்த ஏற்பாடு.

இப்படியே, வாயேஜர்-1 விண்கலம், கி.பி.2053ஆம் ஆண்டு வாக்கில் ஊர்ட் மண்டலத்தினுள் குடியேறி வெளியேறும். வால் விண்மீன்களின் சரணாலயம் அது. இன்னும் ஆயிரம் தலைமுறைக்குப் பிறகு, கி.பி. 40,272ஆம் ஆண்டு வாக்கில் வடக்கே குறுங்கரடி உடுக்கணத்தின் ஒளி மங்கியதோர் விண்மீனுக்குப் பக்கத்தில் போய்விடும். அந்த விண்மீனுக்குப் பெயர் இல்லை

இத்தனையும் எதற்காக? வாயேஜர்-1 விண்கலனில் புவியோசைகள் என்கிற இசைத்தட்டு இடம் பெறுகிறது. செம்பினாலான அந்த இசைத்தட்டு கொலம்பியா ரெக்கார்ட்ஸ் தயாரிப்பு. அதில் இருந்து அமெரிக்க நாட்டின் அந்நாள் அதிபர் ஜிம்மி காட்டரின் குரலும், ஐ.நா.பொதுச் செயலர் டாக்டர் குர்ட் வால்ட்ஹீ மின் உரையும் ஒலிபரப்பாகி வருகின்றன. அத்துடன், மழைச் சாரல், கொல்லர் பட்டறை இரைச்சல், எரி மலைச் சீற்றம், டிராக்டர் ஓசை, ரயிலின் விசில் சத்தம், சாட்டர்ன் ராக்கெட் கிளம்பும் இடியோசை மட்டும் அன்றி, கப்பல், குதிரை வண்டி, மரம் அறுப்பு இயந்திரம், அழல் விடும் நெருப்பு போன்ற இயற்கை ஒலிகளும் அண்டவெளியில் அலை பரப்பாகி வருகின்றன.

வீட்டு நாய், காட்டு நாய், கழுதைப் புலி, யானை, திமிங்கிலம், மனிதக் குரங்கு, பறவைகள், வெட்டுக்கிளி, தவளை, மேச்சல் ஆடுகள் போன்ற விலங்குகளின் குரல் ஒலிகள், குழந்தையின் மழலை, முத்தம், மனிதச் சிரிப்பு, இதயத் துடிப்பு, காலடிச் சத்தம் - 36 விதப் புவி யோசைகள். அது மட்டுமா, 27 வகை இசைக் கச்சேரிகளுடன், உலகின் 60 மொழிகளில் வாழ்த்துச் செய்திகள் அலைபரப்பப்படுகின்றன. இந்த ஒலிகளைக் கேட்டு அண்டவெளியில் எங்கிருந்தேனும் வேற்று உலக மனிதர்கள் நமக்குச் செவிசாய்க்க மாட்டார்களா என்கிற நப்பாசை தான்.

# மன்னாரில் நீரிழிவு தின விழிப்புணர்வு ஊர்வலம்

மன்னார், நவ.16

உலக நீரிழிவு தினத்தையொட்டி மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வு ஊர் வலம் நேற்று முன்தினம் வியாழக் கிழமைகாலை இடம்பெற்றது. காலை 7 மணியளவில் மன்னார்-தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்பாக இந்த ஊர்வலம் ஆரம்பமானது.



மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்.பரீட் குறித்த விழிப்புணர்வு ஊர்வலத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த ஊர்வலத்தில் தொற்றாத நோய்களுக்கான மருத்துவர் ஏ.அன்ரன் சிசில் மற்றும் மருத்துவர்களான மதன்ராஜ், கே.சுதாகர், ஒஸ் மன்டெனி, வெற்றி நாதன், கில் றோய் பீரிஸ் மற்றும் பாடசாலை மாண வர்கள், வைத்தியசாலை பணியாளர்கள், சுகாதாரத் தொண்டர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்பாக ஆரம்பமாகி மன்னார் வைத்தியசாலை வீதியூடாக மன்னார் பொலிஸ் நிலைய வீதியைச் சென்றடைந்தது. அங்கிருந்து மன்னார் பஸார் பகுதியைச் சென்றடைந்து மீண்டும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையைச்சென்றடைந்தது. (க-12)

# தொடர்ந்து புறக்கணிக்கப்படும் கோணாவில் அ.த.க.பாடசாலை

கிளிநொச்சி, நவ. 16

கிளிநொச்சி கோணாவில் அ.த.க.பாடசாலை தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாக பெற்றோரும், நலன்விரும்பிகளும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றாக கோணாவில் கிராமம் காணப்படுகின்றது. இந்தக் கிராமத்தில் அமைந்துள்ள கோணாவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை 850க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டுள்ளது. ஆனால் வளப்பற்றாக்குறைகளுடனேயே இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் கோணாவில் அ.த.க.பாடசாலையும் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து ஆரம்பப் பிரிவை வேறாக்கித் தனியான தொரு பாடசாலையாக இயக்குவதற்கும் இடைநிலைப் பிரிவை வேறாக்கி அதனுடன் உயர்தரப்பிரிவுகளை ஆரம்பித்து இயக்கச் செய்வதற்கும் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் அனுமதிவழங்கப்பட்டது. ஆனால் இதுவரை எதுவுமே இடம்பெற வில்லை.

ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஏனைய பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகள் வேறாக்கப்பட்டுள்ளன. மேலும், இந்தப் பாடசாலையில் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படாமையால் இங்கு வசிக்கும் பெருமளவு மாணவர்கள் 10 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி நகரப் பாடசாலைகளுக்கே செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். இதனால் அதிக சிரமங்களை இவர்கள் எதிர் கொண்டு வருகின்றனர். இங்கு வசிக்கும் மக்கள் கூலித்தொழிலையும் விவசாயத்தையுமே மேற் கொண்டு வருகின்றனர்.

எனவே, கோணாவில் அ.த.க. பாடசாலையை ஆரம்பப் பிரிவு வேறாகவும் இடைநிலைப் பிரிவுக்குட்பட்ட உயர்தரப் பிரிவு வேறாகவும் இயங்கச் செய்வதற்கு ஆவனசெய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-426)

# தோட்டத்தில் திருட்டு இருவர் கைது

தென்மராட்சிப் பிரதேசத்தில் தோட்ட மற்றும் குடியிருப்பு கிணறுகளில் பொருத்தப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரங்களின் புட்வால்புகளைத் திருடிய இருவரைச் சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த ஒரு வருடமாக பிரதேசத்தின் பல இடங்களில் இடம்பெற்ற நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் கிணறுகளில் வைக்கப்பட்டிருந்த குழாய்களின் 'புட்வால்புகள்' திருட்டுக்களுக்கும்அவர்களுக்கும்தொடர்பு இருக்கலாம்எனத்தெரிவிக்கப்பட்டது.

மீசாலை வடக்கு வேம்பிராய் பகுதியில் உள்ள தோட்டக் கிணற்றில் புட்வால்ப் திருடிய வேளையில் பொதுமக்களால் துரத்தப்பட்ட போது சரசாலைப் பகுதிக்கு ஓடிய திருடர்களை பொதுமக்கள் கொடுத்த தகவலை அடுத்து பொலிஸார் சரசாலைப் பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

மீசாலை வடக்குப் பகுதியில் குடியிருப்பு ஒன்றில் அவர்களால் திருடப்பட்ட கத்தி இன்னொருவருக்கு விற்பனை செய்யப்பட்டது. அதனைப் பயன்படுத்திய போது உரிமையாளரால் இனங்காணப்பட்டு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. விசாரணையில் கைது செய்யப்பட்ட நபர்களில் ஒருவர் மேற்குறித்த சம்பவத்திலும் தொடர்புடையவர் என அடையாளம் காணப்பட்டுள் ளார்.

குறித்த இருவரும் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். (வ-9)

# பாடசாலைக்கு நிழல் பிரதி இயந்திரம் அன்பளிப்பு

தென்மராட்சி, நவ.16

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் கடந்த தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பாடசாலைக்கு ஒரு நிழல் பிரதி இயந்திரத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வில் மாணவர்களால் குறித்த இயந்திரம் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப் பட்டது. (வ-9)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உடலில் சோம்பல் நுழைவதால் வேலைச் சுமை யால் சோர்வாகக் காணப் படுவீர்கள். அடுத்தவர்கள் விவகாரத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது.

**இடபம்:** எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். ஒருவித படபடப்பு ஏற்படும். சொத்துப் பிரச்சினைக்கு சுமுகமாக தீர்வு காண்பது நல்லது. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.

**மிதுனம்:** திறம்பட செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். அரசு விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.

**கடகம்** : நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**சிங்கம்:** எதிலும் அவசரப்பட வேண்டாம். செலவுகளைக் குறைக்கத் திட்டமிடுவீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக் கும்.

**கன்னி:** சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக முடியும். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில்அதிகாரிகளிடம்அதிகஉரிமைஎடுக்கவேண்டாம்.

நாளை

ஐப்பசி-30 சனிக்கிழமை 16.11.2013
திதி: சதுர்த்தசி மு.இ.08.22 வரை
நட்சத்திரம்: அஷ்வினி மு.ப.11.24 வரை
சுபநேரம்: 03.07 - 04.37 வரை
இராகுகாலம்: 09.07 - 10.37 வரை

**துலாம்:** யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும்.

**விருச்சிகம்:** மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**தனுசு:** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். வாகனப் பழுது சீராகும்.

**மகரம்:** பிரியமானவர்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசியல்வாதிகளின் நட்பு கிடைக்கும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வேலையாள்களின் ஆதரவு கிட்டும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**மீனம்:** வீண் பதற்றம் வந்து செல்லும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | | 4 | 8 | | 7 | | 9 |
| | 7 | 2 | | 3 | | 8 | | 4 |
| | 4 | | | | | 1 | 6 | |
| | 3 | | | 5 | | | | 2 |
| | | | | 6 | | | | |
| 8 | | | | 4 | | | 7 | |
| | 5 | 9 | | | | | 3 | |
| 7 | | 6 | | 2 | | 5 | 9 | |
| 3 | | 4 | | 9 | 5 | | 8 | 7 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 4 | 6 | 7 | 1 | 9 | 5 | 8 |
| 9 | 7 | 5 | 2 | 8 | 4 | 1 | 6 | 3 |
| 1 | 8 | 6 | 3 | 5 | 9 | 7 | 4 | 2 |
| 6 | 9 | 7 | 8 | 4 | 3 | 2 | 1 | 5 |
| 4 | 3 | 1 | 5 | 6 | 2 | 8 | 7 | 9 |
| 2 | 5 | 8 | 9 | 1 | 7 | 6 | 3 | 4 |
| 5 | 4 | 9 | 1 | 2 | 6 | 3 | 8 | 7 |
| 8 | 1 | 2 | 7 | 3 | 5 | 4 | 9 | 6 |
| 7 | 6 | 3 | 4 | 9 | 8 | 5 | 2 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# முகாமைத்துவ உதவியாளர்களாக வடக்கில் 219 பேர் இணைக்கப்படுவர்

யாழ்ப்பாணம், நவ.16

வடக்கு மாகாண பொதுச் சேவைக்கு முகாமைத்துவ உதவியாளர் சேவையின் 11ஆம் வகுப்புக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கென 219 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று வட மாகாண பிரதிப் பிரதம செயலாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் ஒவ்வொரு மாவட்டத்துக்குமான வெட்டுப்புள்ளிகளும் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் நியமனம் வழங்கப்படும் திகதி தெரிவிக்கப்படவில்லை. காலக்கிரமத்தில் நியமனம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மாவட்ட வெட்டுப் புள்ளி யாழ்ப்பாணம் - 130, கிளிநொச்சி - 128, முல்லைத்தீவு - 107, வவுனியா - 133, மன்னார் - 109 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆள்சேர்ப்புக்கு என கடந்த ஜூன் மாதம் 16ஆம் திகதி திறந்த போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது.

மாவட்ட வெட்டுப்புள்ளி அடிப்படையில் கடந்த ஜூலை 10ஆம் திகதி யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டிருந்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## அரச செயலகங்களில் தேசியக் கொடி

யாழ்.குடா நாட்டில் உள்ள அரச தனியார் அலுவலகங்களில் நேற்றுமுன்தினம் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன.

பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டே இந்தத் தேசிய கொடிகள் அரச மற்றும் தனியார் அலுவலகங்களில் பறக்க விடப்பட்டுள்ளன.

தேசியக் கொடியை ஏற்றுமாறு அரசு சுற்றறிக்கை மூலம் அறிவித்ததை அடுத்தே அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் இவை ஏற்றப்பட்டிருந்தன. (த-17)


# தொழிலுக்கு சென்ற மீனவர்களை தாக்கி விரட்டினர் இராணுவத்தினர்

யாழ்ப்பாணம், நவ.16

முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதியில் சிறுகடல் தொழிலுக்கு செல்லும் மீனவர்களை இராணுவத்தினர் புதன்கிழமை மாலை கடுமையாகத் தாக்கி தொழில் செய்யவிடாது திருப்பி அனுப்பியுள்ளனர்.

முல்லைத்தீவு புதுமாத்தளன் முதல் அம்பலவன் பொக்கணை வரையான சிறுகடற்பகுதியில் மீன் பிடிக்க சென்ற 6 மீனவர்களையே இரும்பு சேரிக்கச் சென்றதாகக் குற்றஞ்சாட்டி இராணு வத்தினர் தாக்கியுள்ளனர்.

வழமையாக தாம் இந்தப் பகுதிகளில் தொழில் செய்து வருவ தாகவும் புதன்கிழமை தொழிலுக்கு சென்ற போது அப்பகுதிக்கு திடீரென வந்த இராணுவத்தினர் தம்மை அச்சுறுத்தி கயிற்றினால் கட்டி அடித்துத் துன்புறுத்தி விட்டு அவ்விடத்தில் இருந்து உடனடியாக வெளியேறுமாறும் அடித்து விரட்டினர் எனவும் தொழிலாளிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-6)



யாழ்.நாக விகாரையின் பெரஹரா நிகழ்வு நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது. சிங்கள கலாசார நடனங்களுடன் அலங்கரிக்கப்பட்ட ஊர்திகள், யானைகள் யாழ்.நகர வீதிகள் ஊடாக வலம் வந்தன. (த-17)

# ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து சமுர்த்தி ஊழியர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், நவ.16

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்திச் சங்கம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தச் சங்கம் யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை சமுர்த்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்திச் சங்கம் எதிர்வரும் 20ஆம் திகதி இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

- பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் கீழ் வல்வெட்டித்துறை சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் கடமையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் இடமாற்றம் சம்பந்தமாக 11.10.2013 இல் அரச அதிபருடன் கலந்துரையாடியதற்கமைய அவரது இடமாற்றத்தை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும்.
- சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில், அவரை விசாரிக்கும் போது ஒலிப்பதிவு செய்வதை நிறுத்த வேண்டும்.
- பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சமுர்த்தி ஊழியர் ஒருவரை விசாரணைக்கு உட்படுத்திய போது அவருக்குத் தெரியாது ஒலிப்பதிவு செய்த நபர் மீது உரிய ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப் பட வேண்டும்.
- சமுர்த்தி அதிகார சபையின் சுற்றறிக்கைகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப் பட வேண்டும் அத்துடன் இடமாற்றக் கொள்கைகளுக்கு அமைவாகவும் இடமாற்ற சபையின் ஒப்புதலுடனும் எதிர்காலத்தில் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- சமுர்த்தி உத்தியோகத்தர்களின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது சேவை மூப்புக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் - ஆகிய ஐந்து கொள்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ஐ-86)

# பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் இராணுவ சோதனைக் கெடுபிடி

## பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக பயணிகள் விசனம்

முல்லைத்தீவு ஏ 35 வீதியில் மீண்டும் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்ளவேண்டிஏற்பட்டுள்ளது.

புதன்கிழமை இரவு முதல் குறித்த வீதியின் மூன்று இடங்களில் வீதித் தடைகள் போடப்பட்டு சோதனை நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏ-35 வீதியின் கோரக்கன் கட்டு சந்திக்கும், வை.எம்.சி.ஏ சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் போடப்பட்ட வீதித் தடையில் இராணுவத்தினர் வீதியூடாக பயணிக்கும் மக்களை வழிமறித்து கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்துவதுடன் அடையாள அட்டைகளையும் பதிவு செய்த பின்னரே தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கின்றனர்.

இதே போன்று தேராவில், தேவிபுரம், ஆகிய பகுதிகளிலும் வீதி மறிப்புக்கள், தடைகள் போடப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கரைதுறைப்பற்று கருநாட்டுக் கேணியிலும் புதிய சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு தீவிரமாக சோதனைகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-6-400)

# நல்லொழுக்க தின போட்டி முடிவுகள்

வடமராட்சி,நவ.16

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்கள் இடையே நடத்திய போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டிகளின் விவரமும், வெற்றி பெற்ற மாணவர்களின் விவரங்களும் வருமாறு:

**மருதங்கேணிக் கோட்டம்**

**ஆரம்பப் பிரிவு - பேச்சு**

பா.தஸ்மியா-செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை, அ.அன்ரன் மௌசியன்-மணற்காடு றோ.க.த.க.பாடசாலை, பொ.தனுசியா-குடத்தனை அ.த.க.பாடசாலை.

**ஆரம்பப் பிரிவு - கட்டுரை**

எஅஜித்தா- மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, ச.சவுத்தி-குடத்தனை அ.த.க.பாடசாலை, அ.றெஜிராஜ்-செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை.

**கீழ்ப் பிரிவு - பேச்சு**

கு.டியூசா-மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, சி.துசியந்தன்-குடத்தனை கரையூர் அ.மி.த.க.பாடசாலை, ஜோ.மேரிகிருஸ்ரீன்- நாகர்கோவில் ம.வி.

**கீழ்ப் பிரிவு - கட்டுரை**

இ.சதுஜா-குடத்தனை அ.த.க.பாடசாலை, தோ.சுவகர்ணசீலி- மணற்காடு றோ.க.த.க.பாடசாலை ர.தனராஜ்-நாகர்கோவில் ம.வி.

**கீழ்ப் பிரிவு - கவிதை**

வி.யேசுதாஸ்-மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, அ.லெனின்ராஜன்-குடத்தனை கரையூர் அ.மி.த.க.பாடசாலை, ச.அஞ்சனா-செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை.

**மத்திய பிரிவு - பேச்சு**

இ.இதயரூபி-குடத்தனை அ.த.க.பாட சாலை, அ.லொறின்சன் வெஸ்லி-மணற்காடு றோ.க.த.க.பாடசாலை, த.கௌசிகா-குடத்தனை கரையூர் அ.மி.த.க.பாடசாலை.

**மத்திய பிரிவு - கட்டுரை**

ந.கௌசலியா-குடத்தனை அ.த.க. பாடசாலை, சு.சுரேஜானா-மணற்காடு றோ.க.த.க.பாடசாலை, டோ.மேரிபிரியா- செம்பியன் பற்று அ.த.க.பாடசாலை.

**மத்திய பிரிவு - கவிதை**

கு.டியூசா-மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, செ.நிதர்சனா-குடத்தனை அ.த.க. பாடசாலை, சி.சயந்தா-குடத்தனை கரையூர் அ.மி.த.க.பாடசாலை.

**கரவெட்டிக் கோட்டம்**

**ஆரம்பப் பிரிவு - பேச்சு**

ப.கிளனி-நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை, பா.நிலக்சன்-துன்னாலை காசிநாதர் வித்தி., ம.சோபிக்கா-வதிரிதிரு இருதயக் கல்லூரி.

**ஆரம்பப் பிரிவு - கட்டுரை**

அ.அபிசாயினி-வதிரி திரு இருதயக் கல்லூரி, செ.சுகன்யா-கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.பாடசாலை, கே.கேசிகா-நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை. (ந-8)

# ஆங்கில மொழியை சரிவரக் கற்க வேண்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் உரை

உலகிற்கான ஜன்னலைத் திறக்கும் ஒரு திறவுகோலே ஆங்கிலமொழிக் கற்கை. இம்மொழியை இளைய சமுதாயத்தினர் பிழையின்றிக் கற்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

பிரித்தானிய பேரவையின் கிளை அலுவலகம் புதன்கிழமை யாழ்.றக்கா வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரிட்டிஷ் கவுன்ஸில் நன்மைகளையே வழங்கும் என்பதில் ஐயமில்லை. எனது இளமைக் காலத்தில் நான் இவர்களுடைய நூலகத்திலிருந்து பல நூல்களைப் பெற்று வாசித்தேன். ஆங்கில அறிவை பரப்புவதில் முன்னிற்கும் இந்த நிறுவனம் தனது செயற்பாடுகளை விஸ்தரித்துள்ளது. உள்நாட்டு வெளிநாட்டு மாணவர்கள் இணையும் போது தொடர்பாடல் வலுவடைந்து செய்திப் பரிமாற்றம் கலாசார விழுமியங்களின் பரிமாற்றம் என்பன நிகழ்கின்றன.

> “ – ”
>
> பிரிட்டிஷ் கவுன்ஸில் நன்மைகளையே வழங்கும் என்பதில் ஐயமில்லை. எனது இளமைக் காலத்தில் நான் இவர்களு டைய நூலகத்திலிருந்து பல நூல்களைப் பெற்று வாசித்தேன்.

இத்தகைய சந்தர்ப்பத்தை வழங்கும் இந்த நிறுவனத்தின் மூலம் மாணவர்கள் உரிய பயனைப் பெற வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில் தெற்காசிய கல்வி நிறுவனத்தின் இயக்குநர் ஸ்டீபன் றோமன், பிரித்தானிய பேரவையின் இலங்கைக்கான இயக்குநர் கெய்த் டேவிஸ், வட மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-10)

# ஆசிரியர் பற்றாக்குறை கற்றல் பாதிப்பு

வலி.வடக்கு,நவ.16

அராலி இந்துக் கல்லூரியில் ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக அந்தப் பகுதியில் உள்ள பெற்றோர்களும் பாடசாலையின் பழைய மாணவர்களும் தெரிவிக்கின்றனர்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு கற்பிப்பதற்காக தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் இதனால் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் அடிப்படைக் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கும் நிலைமை ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கோட்டக் கல்வி அலுவலகத்துடன் இது தொடர்பில் தொடர்பு கொண்ட வேளையில் தாம் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவிக்கின்ற போதிலும் இது வரை எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க முன்வரவில்லை என்று கவலை தெரிவிக்கின்றனர். (வ-86)



## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 15.10.1952
விண்ணுலகில் 07.11.2003



அமரர்
**மகேஸ்வரி அருணாசலம்**

பத்து ஆண்டுகள் ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம் அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள் நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்.

கப்புதூ, கரவெட்டி.
குடும்பத்தினர்.

(40013) (7.6.3)

## ஈராண்டு நினைவலை



எமது உயிரில் கலந்த உறவு
அமரர்
**இராமலிங்கம் தளையசிங்கம்**

குழந்தையாய் மண்ணில் 20.04.1940
தெய்வமாய் விண்ணில் 08.12.2011

ஓயாது உழைத்து எம்மை
ஒற்றுமையாய் வளர்த்துவிட்டு
ஓய்வெடுத்துச் சென்றதேனோ?
ஈராண்டு கடந்தாலும், உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் நீங்காமல்
நிலைத்துள்ளன பண்போடு அவனிதனில்
வந்துதித்த நற்குண தந்தையாரே!
இறைவனின் திருப்பாதம் சென்றடைய
பிரார்த்திக்கின்றோம்!!!


மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

(29700) (12.3.6)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலியும் ஆப்திக சிரார்த்த அழைப்பும்

தோற்றம் 18 / 07 / 1930
மறைவு 28 / 10 / 2012



எமது குடும்பத் தலைவர்
அமரர்
சிவநெறிப்புரவலர் **தம்பியப்பா சண்முகலிங்கம்**
(ஸ்தாபகர் நோர்தேண் இண்டஸ்ரீஸ், யாழ்ப்பாணம்)

அவர்களின் ஆப்திக சிரார்த்தம் இன்று (16.11.2013)
மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

"குற்றாலம்"
43, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். (40070)(12.3.6) குடும்பத்தினர்.

### இலட்சார்ச்சனை

வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மஹாகணபதிப்பிள்ளையார் ஆலய இலட்சார்ச்சனை எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் டிசெம்பர் 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. தினமும் காலை 8 மணி முதல் 9.30 மணி வரை இலட்சார்ச்சனை கணபதி ஹோமம் என்பன நடைபெறவுள்ளன. (வ-10)

### சொற்பொழிவு

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருக்கார்த்திகை நாள் விசேட சொற்பொழிவு மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.
நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கயிலநாயகி பரந்தாமன் தலைமையில் இந்தச் சொற்பொழிவு இடம்பெறும்.
நிகழ்வில் சைவப் புலவர் எஸ்.பாலச்சந் திரனின் 'திருக் கார்த்திகை மகிமை' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். (ந)

◆◆◆

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருக் கார்த்திகைநாள் விசேட சொற் பொழிவு புன்னாலைக் கட்டுவன் நரசிங்க வைரவர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்ப்பணா சுதர்சன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் 'கந்தனுக்கு உகந்தது கார்த் திகை' எனும் தலைப்பில் கந்த.சத்தியதாசனின் சிறப்பு சொற்பொழிவு இடம்பெறும். (ந)

### பரிசில் நாள்

பருத்தித்துறை வட இந்து ஆரம்ப பாடசாலையின் முதலாவது பரிசில்நாள் விழா இன்று சனிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அதிபர் த.ரவீந்திரன் தலைமையில் பாடசாலை மண்டபத் தில் நடைபெறவுள் ளது.
இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும் சிறப்பு விருந்தின ராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-35-8)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
**சின்னப்பிள்ளை வேலாயுதம்**



அன்னை மடியில் 01.11.1927
ஆண்டவன் அடியில் 15.10.2013

எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து மாதம் ஒன்று சென்றதம்மா!
ஒன்றல்ல ஓராயிரம் யுகங்கள் சென்றாலும்
உங்கள் சிரித்த முகமும் அன்பான பேச்சும்
எங்களை விட்டு நீங்காதம்மா!
மெழுகுதிரியாய் உங்களை உருக்கி எங்களுக்கு
ஒளிகொடுத்த எங்கள் தாயே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய கலட்டிப் பிள்ளையாரை
தினம் வேண்டி நிற்கின்றோம்.

மீசாலை வடக்கு,
வயற்கரை,
மீசாலை.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## விண்ணக வாழ்வில் 2ஆம் ஆண்டு நினைவு நாள்

மண்ணில் 25.09.1945
விண்ணில் 16.11.2011



அமரர் **தம்பிராசா பீற்றர்சன் விஜயசிங்கம்**
(ஓய்வுபெற்ற வரி மேற்பார்வையாளர் - Shamrock Academy நிர்வாகி)

ஆண்டு இரண்டு ஆனதப்பா!
ஆயினும் ஆறவில்லை எம்துயரம்
சொந்தங்கள் நாம் உங்கள் நினைவில் துடிக்கிறோம்
உறவுகள் பல இருந்தும்
உங்கள் பாசத்துக்கு ஈடாகுமா?
கல்வி தந்து அன்பு தந்து உங்கள் செல்வமெல்லம் தந்து
எம்மை வாழ வைத்த அன்புத் தெய்வமே!
கார்த்திகை என்னும் இறந்தோரை நினைவு கூரும்
புனித மாதத்திலே உங்களுக்காகவும்
இறந்தோருக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

"ஆண்டவரோடு இணைந்த நிலையில்
இறப்போர் பேறு பெற்றோர்"


7/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(சி/12277) (7.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 13 ★ 04 ★ 1983
இறப்பு 28 ★ 10 ★ 2012



அமரர்
**செல்வநாயகம் சபேசன்**

ஆண்டு ஒன்று ஆனதுவோ
-ஆனாலும் ஆறவில்லை
எம் துயரம்
மாறாத நினைவுகளால்
மனம் வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்தமுகம்
என்றும் எம் நெஞ்சங்களில்
குடியிருக்க அன்புத்
தெய்வமே ஆண்டவன் அடியில்
சாந்தி பெறுங்கள்.

உங்கள் நினைவுகளோடு
என்றும் வாழும்
குடும்பத்தினர்.

49, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

# ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் திங்கட்கிழமை

மட்டக்களப்பு.நவ.16

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சருமான எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸின் வரவேற்புரையைத் தொடர்ந்து, மாவட்ட அமைச் சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒதுக்கீடுகள், வாழ்வின் எழுச்சி, தேசத்துக்கு மகுடம், விசேட திட்டங்கள், ஏனைய அமைச்சுகளின் நிதி ஒதுக்கீடுகள், 2013ஆம் ஆண்டுக்கான திட்ட முன்மொழிவு அனுமதி. உட்பட பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

இந்தக் கூட்டத்தில் உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தி ஊக்குவிப்பு அமைச்சர் பசீர் சேகுதாவுத், மீள்குடி யேற்ற பிரதி அமைச்சர் வி.முரளிதரன், மாகாண அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொள்வர். (ச)

# விறகுகளைத் திருடும் விநோத திருடர்கள்



திருகோணமலை, நவ.16

திருகோணமலையில் கடைகளில் உள்ள விறகுகளை திருடும் விநோத திருடர்கள் பிடிபட்டுள்ளனர்.

கடந்த சில நாள்களாக திரு மலையில் திருட்டு சம்ப வங்கள் அடிக்கடி நடந்து வருகின்றன.

பொலிஸாரின் கண்களில் மண்ணைத் தூவி திருட்டில் ஈடுபட்டு வந்த கும்பலில் சிலர் புதன்கிழமை பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டனர். புனித அந்தோனியார் கோவில் வீதியில் அமைந்துள்ள பலசரக்குக் கடையில் திருட வந்த குழுவினர் திருட முடியாத நிலையில் அங்கு குவித்து வைக்கப்பட்டிருந்த பெருந் தொகையான விறகுகளைத் தமது ஓட்டோவில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சிலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச-291)

# தே. அ.அட்டை பெற நடமாடும் சேவை

ஏறாவூர்.நவ.16

கிழக்கு மாகாணத்தில் தேசிய ஆள் அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்கும் நடமாடும் சேவை வியாழக்கிழமை மட்டக்களப்பு, செங்கலடியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

செங்கலடி பிரதேச செயலர் யு. உதயஶ்ரீதர், கபே மற்றும் மனித உரிமைகள் நிலைய அதிகாரிகள், ஆள் பதிவுத் திணைக்கள அதிகாரிகள், வாகரைப் பொலிஸ் அதிகாரிகள், கிராம சேவை அலுவலர்கள் உட்பட பலர் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண் டனர்.



யு. எஸ்.எயிட் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் மனித உரிமைகள் ஆய்வு நிலையம் மற்றும் கபே நிறுவனம் என்பன ஆள் அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்கும் நடமாடும் சேவையை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



புனித ஜோவான் படையணியினரின் தேசிய பாசறையில் வெற்றியீட்டிய திருகோணமலை மாவட்டப் படையணிக்கான பாராட்டு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் ஹி.விஜேந்திரன், கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணி, மாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்புக்கு வரவில்லை பொதுநலவாய தலைவர்கள்

## ஆயர் ஜோசப் பொன்னையா கவலை

மட்டக்களப்பு, நவ.16

பொதுநலவாய மாநாட்டுத் தலைவர்கள், மட்டக்களப்புக்கு வருகை தராதது கவலையளிக்கின்றது என்று மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் ஜோசப்பொன்னையா தெரிவித்தார்.



மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மட்டக் களப்பு சிவில் சமூக அமைப்பு நடத்திய ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித ததாவது:-

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பானது மாவட்டத்திலுள்ள அனைத்துச் சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி செயற்படுகின்ற ஓர் அமைப்பாகும்.

பொதுநலவாய மாநாட்டுக்கு வருகை தரும் பொதுநலவாய மாநாட்டு தலைவர்கள் மட்டக்களப்புக்கு கடந்த 13ஆம் திகதி வருகை தரவுள்ளார்கள். அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சிவில் சமூக அமைப்புக்கு வேண்டுகோள் விடப்பட்டது. ஜனாதிபதி செயலகத்தின் இதற்கான இணைப்பாளர் எழுத்து மூலம் எமக்கு அறிவித் திருந்தார்.

மட்டக்களப்புக்கு வருகை தரவுள்ள அந்தத் தலைவர்களை வரவேற்பதற்காக நாம் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மற்றும் இங்குள்ள அதிகாரிகள், விமானப்படை அதிகாரி ஆகியோருடன் இணைந்து ஏற்பாடுகளை மேற்கொண்டோம்.

தலைவர்கள் தங்குவதற்கான ஹோட்டல் வசதி, அவர்களுக்கான மட்டக்களப்பின் பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் அவர்களை வரவேற்பதற்கான கலாசார நிகழ்வுகள், அவர்கள் சுற்றுலா சென்று மட்டக்களப்பை பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் என விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த 12 ஆம் திகதி மாலை அவர்கள் மட்டக்களப்புக்கு வருகை தரமாட்டார்கள் என்னும் செய்தியை கேள்வியுற்று கவலையடைந்தோம்.

மட்டக்களப்புக்கு பொதுநலவாய மாநாட்டுத் தலைவர்கள் வராமல் விட்டதனையிட்டு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் அனைவரும் வேதனைப்படுகின்றனர்.

மட்டக்களப்பு என்பது போர் மற்றும் சுனாமி உட்பட இயற்கை இடர்களால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டமாகும்.

இங்கு வந்து மக்களின் குறை நிறைகளைக் கேட்டு அவர்களுக்கு உதவுவார்கள் என நாங்கள் எண்ணியிருந்தோம். ஆனால் அது ஏமாற்றத்தில் முடிவடைந்தது.

இது எமக்கு பெரும் வேதனையைத் தருவதுடன் கவலையளிக்கின்றது.-என்றார். (ச)

# கிழக்கின் அபிவிருத்திக்கு வியட்நாம் உதவ வேண்டும்

## மாகாண விவசாய அமைச்சர் வேண்டுகோள்

மட்டக்களப்பு,நவ.16

கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு வியட்நாம் தொழில்நுட்ப உதவிகளை வழங்க வேண் டும் என்று கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஹபீஸ் நஸீர் அஹமட் வியட்நாம் தூதரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



கிழக்கு மாகாண அமைச்சருக்கும் இலங்கையிலுள்ள வியட்நாம் தூதர் டொன்சிக் தங்கிற்கும் இடையிலான சந்திப்பு வியாழக்கிழமை கொழும்பிலுள்ள வியட்நாம் தூதரகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாண சபையால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் மக்களின் வாழ்வாதார உதவிகள், வறுமை ஒழிப்பு, சிறு கைத்தொழில் , விவசாயம், கால்நடை, மீன்பிடி, சுற்றுலாத்துறை ஆகிய வேலைத் திட்டங்கள் குறித்து அமைச்சர் எடுத்துக் கூறினார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர் கிழக்கு மாகாணத்தில் நடை முறைப்படுத்தப்படவுள்ள முதலீட்டுத் திட்டங்களின் முன்மொழிவுகளை வியட்நாம் தூதரிடம் கையளித்தார். (ச)



# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

அம்பாறை.நவ.16

அம்பாறை, சம்மாந்துறையைச் சேர்ந்த ஒருவர் துப்பாக்கியுடன் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட குறிப்பிட்ட நபர் கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து கல்முனை பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# கெலும் மக்ரேக்கு எதிராக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், நவ.16
சனல்-4 ஊடகவியலாளர் கெலும் மக்ரேக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிவில் உடையினரும் குறிப்பிட்ட எண்ணிக்கையான பெரும்பான்மை பொதுமக்களும் சேர்ந்து வவுனியா மாவட்டச் செயலகம் முன்பாக நேற்று முன்தினம் மதியம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆங்கில, சிங்கள மொழியில் மட்டுமன்றி தமிழில் எழுத்துக் கொலைகளுடன் வாசகங்கள் பொறிக் கப்பட்ட பதாகைகளை ஏந்திய வண்ணம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கெலும் மக்ரே வட பகுதிக்கு பயணம் செய்யக்கூடாது என்றும் அவர் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றும் கோரியே

இந்த ஆர்ப்பாட்டத்தை சிவில் உடையினர் நடத்தியுள்ளனர்.

வன்னிப் போர் அவலங்களை வெளிப்படுத்தியமை உட்பட பல்வேறு விடயங் களுக்கு எதிர்ப்புத் தெரிவித் தும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தி ஒற்றுமையை சீர்குலைக்கும் நடவடிக்கையில் சனல் -4 ஊடகம் ஈடுபடுவதாகவும் அதனைநிறுத்தவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷம் எழுப்பியுள்ளனர்.

அவர்கள் தமிழில் எழுத்துக் கொலைகளுடன் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

வவுனியா மாவட்டச் செயலகத்திலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் செயலகம் வரை ஊர்வலமாகச் சென்று செயலகத்தில் அரச அதிபரிடம் மனு ஒன்றையும் கையளித்தனர்.

ஒரு மணி நேரம் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தால் சிறிது நேரம் ஏ-9 வீதியூடான போக்குவரத்துத் தடைப்பட்டது.

கெலும் மக்ரே புதன்கிழமை வடக்குக்கு ரயிலில் பயணம் மேற்கோண்டிருந்தபோது அதனை முன்கூட்டியே அறிந்து கொண்டவர்கள் அநுராதபுரத்தில் ரயில் நிலையத்தில் அன்றைய தினம் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அதனால் அவர் திரும்பிச் சென்றிருந்தார். வடக்குக்கு நேற்று முன்தினமும் செல்ல முற்பட்டார் என்று கூறியே வவுனியாவில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (ச-4-402)

**உடன் வேலை வாய்ப்பு**

கொழும்பு தொடர்மாடி கட்டடங்களில் உடனடி வேலை வாய்ப்பு.
**மேசன் 1400/= தொடக்கம்**
**கூலி ஆள்கள் 1000/=** (40063)(12.3.6)
தொடக்கம் சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 199 9129

**வாடகை**

Attached bathroom
உடன் கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு.
(ஒரு நாள் 500/=)
Hotel Villa City,
422 Galle Rd, Colo 6
இராமகிருஷ்ண வீதிக்கு அருகில்
0722 552 222

# சர்ச்சை ஏற்படாமல் அஞ்சலி செய்யுங்கள்

## பொதுநலவாயப் பிரதிநிதிகளிடம் கேட்கிறார் கோத்தபாய

சர்ச்சையை ஏற்படுத்தாத இடமொன்றில் மலர் வளையம் வைத்துப் போரில் உயிர் நீத்தவர்களுக்கு பொதுநலவாயப் பிரதிநிதிகள் அஞ்சலி செலுத்தமுடியும் பிரிவினைவாத உணர்வுகளை வசப்படுத்தும் விதத்தில் அவர்கள் ஏற்படக்கூடாது. இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்பும் போது கனேடிய நாடளுமன்றச் செயலர் தீபக் ஒப்ராய் போரில் உயிர் நீத்த மக்களுக்காக ஆனையிறவில் வைத்து அஞ்சலி செலுத்தியிருந்தார். இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே கோத்தபாய மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் இன்னமும் கனடாவிலும், ஏனைய பொது நலவாய நாடுகள் பலவற்றிலும் செயற்பட்டு வருகின்றனர். பொது நலவாய மாநாட்டுக்குக் கனடா வும் ஏனைய சில நாடுகளும், தமது கீழ் மட்டப் பிரதிநிதிகளை அனுப்பியதற்கான சூழ்நிலைகளை நாம் அறிவோம். விடுதலைப்புலிகளை தூய்மைப் படுத்தும் முயற்சிகள் குறித்து நாம் கவலை கொள்கின் றோம். சர்ச்சையை ஏற்படுத்தாத இடமொன்றில் கனேடியப் பிரதிநிதி மலர் வளையம் வைத்திருக்க முடியும். பல்வேறு நாடுகளின் தலைநகரங்களில் இருந்து மேற்கொள்ளப்படும் செலவு மிக்க பரப்புரைத் திட்டங் களை இலங்கையால் புறக்கணிக்க முடியவில்லை.

விடுதலைப்புலிகள் நந்திக்கடலில் அழிக்கப்படும் வரையில் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட மரணங்கள், .அழிவுகளை மேற்குலகம் மனதில் கொள்ள வேண்டும்- என் றார். (த-5)

world diabetes day

**உலக நீரிழிவு தினம்**
**நீரிழிவை வெற்றி கொள்வோம்**

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு நாளை (17.11.2013) ஞாயிற்றுக்கிழமை இல. 342 பலாலி வீதியில் (பரமேஸ்வராச்சந்தி) அமைந்துள்ள நொதேன் சென்றல் வைத்திய சாலையில் காலை 7.00 மணி முதல் 11.00 மணி வரை இலவசமாக

★குருதி குளுக்கோஸ் பரிசோதனை
★வைத்தியநிபுணர் Dr.சிறிந்ரன்(vp) அவர்களின் நீரிழிவு தொடர்பான விசேட பேச்சு (காலை 8 மணியளவில்)

நீரிழிவு தொடர்பான
★ நரம்பியல் மதிப்பீடு ★ இருதய மதிப்பீடு
★ சிறுநீரக மதிப்பீடு ★ கண் மதிப்பீடு
★ உணவுக்கட்டுப்பாடு ★ நீரிழிவு கைநூல் வழங்குதல்
★ நீரிழிவும் பாதப் பராமரிப்பும்

என்பன இடம்பெறவுள்ளன

அனுசரணை:
**நெஸ்லே நிறுவனம்**
Nestle Good Food, Good Life
இந்நிகழ்வில் அனைவரையும் பங்கு பற்றிப் பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (40089)(4.6.3)

**WANTED**

A leading Colombo Based Educational Institution Providing Engineering and Other Degree Courses requires a Student recruitment Agent in Jaffna with Experience in Educational Sector for immediate Engagement on Commission Basis.
**Please Conect: 077 413 7763**
(40090)(4.6.3)

# போர் பாதித்த பகுதிகளுக்கு உதவி வழங்கல் போதாது

## பொதுநலவாயப் பிரதிநிதிகள் யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.16
போரின் பின்னரான உதவிகள் இந்தப் பகுதிகளுக்கு போதாதென்றும், போரினால் பாதிப்புற்ற பகுதிகளுக்கான உதவிகள் பன்மடங்கு வழங்கப்பட வேண்டும் என்றும் யாழ்.வந்திருந்த பொதுநலவாய சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் மேலும் கூறுகையில்; போரினால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கு பன்மடங்கு நிதி வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கினால்தான் அந்தப் பகுதிகளால் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியும். ஆனால் இங்கு நிலைமைகளைப் பார்க்கும் போது சாதரணமான உதவிகளே வழங்கப்பட்டிருக்கின்றன.

போரால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்புவதற்குரிய வகையில் இந்த நிதியுதவிகள் வழங்கப்படவில்லை - என்றனர்.

இந்தப் பகுதிகள் விசேட கவனிப்புக்கு உட்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டை, இந்தியா சார்பில் பங்கேற்ற பொதுநலவாயத்தின் பிரதிநிதி ஒருவர் முன்வைத்தார். (த-5)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பத்மாவதி செல்வராஜா



நல்லூர் வடக்கு, புதிய செம்மணி வீதி, கல்வியங் காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி செல்வராஜா 13.11.2013 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான நிலாவெளி கதிரவேற்பிள்ளை - மாணிக்கம் தம்பதியினரின் மருமகளும், உள்நாட்டு இறைவரித்திணைக்கள முன்னாள் உத்தியோகத்தர் செல்வராஜாவின் அன்பு மனைவியும், சிவபாலரெத்தினம், சிவபாலசுந்தரலிங்கம், மகேஸ்வரன், யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அமுதன் மற்றும் ஆதவன் (கனடா), ஆஷா (கனடா), அனுஷா (SIOS சிறுவர் கிராமம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வாசுகி, லோகநாதன் ஆகியோரின் மாமியாரும், காத்யா, தான்யா நிலா, பானு, பூமி, பிருந்தாவன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.11.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் (பதுமம்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பதுமம்',
புதிய செம்மணி வீதி,
நல்லூர். (40086)(12.6.3)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## திருமதி கமலாவதி தர்மலிங்கம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற Post Master கந்தையா-இரத்தினம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற பொன்னம்பலம்-செல்லம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்ற பொன்னம்பலம் தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் ஆகிய கமலாவதி-தர்மலிங்கம் 13.11.2013 அன்று காலை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் கனகலிங்கம், காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் புஸ்பராணி, விஜெயரட்ணம், தனபாலசிங்கம்-தவமணி, Dr. தியாகராசா ஆகியோரின் அருமைச் சகோதரியும், நாகேந்திரா, சர்வேந்திரா, கோமளா-வேதநாயகம், லோகா-பிரதீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மாயோன், கோகுலன், வேணுகா, கனிகா, கார்த்திகன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.11.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

85/3, ஆனந்தன்வடலி வீதி,
அரியாலை. (40141)(7.6.3)

தகவல்:
லோகா - பிரதீபன்
(மகள்)

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
15.11.1927

மறைவு
17.10.2013

அமரர்
## வைத்திலிங்கம் சின்னராசா

கடந்த (17.10.2013) வியாழக்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (16.11.2013) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு, எமக்கு நேரிலும், தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மீசாலை மேற்கு,
மீசாலை. (33001)(2.3.6)

குடும்பத்தினர்.

# விரும்பிய உணவை உண்ண முடியாத மன்னார் பயணிகள்

## கொழும்பு செல்லும் போது

பேசாலை, நவ. 16

மன்னாருக்கும் கொழும்புக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் அரச, தனியார் பஸ் சாரதிகள் தாம் விரும்பிய உணவகங்களுக்கு முன்னால் பஸ்ஸை நிறுத்துவதால் பயணிகள் தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு உணவுகளை உண்ண முடியாத நிலையில் இடர்களை எதிர்கொண்டுவருவதாகத் தெரியவருகின்றது.

அந்த உணவகங்களில் உணவுப் பொருள்கள் அதிக விலையில் விற்கப்படுகின்றன. மேலும் சாரதிக்கும் நடத்துநருக்கும் வழங்கப்படும் உணவுகளின் பணமும் பயணிகளிடம் இருந்தே வசூலிக்கப்படுகின்றது. பல கடைத் தொகுதிகள் உள்ள இடத்தில் பஸ்ஸை நிறுத்தினால் பயணிகள் தமது வசதிக்கேற்ப உணவுகளைத் தெரிவுசெய்து உண்ண முடியும். ஆனால் குறித்த கடைகளில் மட்டுமே நிறுத்தப்படுவதால் அங்கு கூறப்படும் விலைக்கே பொருள்களை வாங்க வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். இது ஒரு மனித உரிமை மீறலாகும்.

மேலும், கடையில் நிற்கும் ஊழியர்கள், காசாளர் ஆகியோர் பயணிகளிடம் அலட்சியமாகப் பேசுகின்ற விதமும் பயணிகளை வேதனைப்படுத்துகின்றது.

மேலும், ஏனைய கடைகளை விட இந்தக் கடையில் அதிக விலையில் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

மலசலகூடங்களும் துப்புரவற்ற நிலையிலும் துர்நாற்றம் வீசிய நிலையில் காணப்படுகின்றன. இதனால் பயணிகள் உணவு அருந்தக்கூடக் கஷ்டப்படுகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பில் அதிக கவனமெடுத்து பயணிகளுக்கு இடர் ஏற்படாதவாறு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்டு வருபவர்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க)

# மன்னார் மாவட்டத்தில் அதிகூடிய நெல் உற்பத்தி

யாழ்ப்பாணம், நவ.16

வடமாகாணத்தில் மன்னார் மாவட்டத்திலேயே அதிகூடிய நெல் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. தற்போது 27 ஆயிரம் ஏக்கர் காணியில் ஒரு குளத்தில் இருந்து பெறப் படும் நீர் மூலம் நெல் உற்பத்தி மேற்கொள்ளப்படுவதாக வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஹால்டின் தெரிவித்தார்.



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களில் அதிகளவு நெல் உற்பத்தி மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகிறது. மன்னார் மாவட்டத்தில் உள்ள கட்டுக்கரைக்குளத்தில் போதியளவு நீர் வயற்காணிகளுக்கு கிடைக்கப் பெறுவதால் தண்ணீர் பற்றாக்குறை நிலவுவது இல்லை. இந்தக் குளத்தில் இருந்தே 27 ஆயிரம் ஏக்கர் காணிக்குரிய நீர் கிடைக்கப் பெறுகிறது.

ஏனைய மாவட்டங்களில் போகத்துக்கு ஏற்ப கால நிலை மாற்றங்களால் வயல்களுக்கு தண்ணீர் கிடைப்பதில்லை. எனினும் மன்னார் மாவட்டத்தில் அவ்வாறானதொரு நிலை பெரியளவில் ஏற்படுவதில்லை.

அதனைவிட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் கூடுதலான நெல் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது- என்றார். (வ-14)

**"-"**

**ஏனைய மாவட்டங்களில் போகத்துக்கு ஏற்ப கால நிலை மாற்றங்களால் வயல்களுக்கு தண்ணீர் கிடைப்பதில்லை. மன்னாரில் அவ்வாறானதொரு நிலை ஏற்படுவதில்லை.**

# எருக்கலம்பிட்டி வீதிகளைப் புனரமைக்கும் பணி ஆரம்பம்

மன்னார், நவ.16

மன்னார் எருக்கலம்பிட்டிக் கிராமத்தின் உள்ளக வீதிகளைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த உள்ளக வீதிகளைப் புனரமைப்புச் செய்யும் வேலைத்திட்டங்களை வட மாகாண சபையின் உறுப்பினரான றிவ் கான் பதியுதீன் ஆரம்பித்துவைத்தார்.

எருக்கலம்பிட்டிக் கிராமத்தின் தர்சின் நகர் மற்றும் 7ஆம் வட்டாரம் பகுதிகளின் உள்ளக வீதிகளின் புனரமைப்புப் பணிகளே ஆரம்பித்து வைக்கப்பட்டன. குறித்த பகுதிகளில் முதற்கட்டமாக கிரவல் மண்



பரவும் வேலைத்திட்டத்தை வடமாகாண சபை உறுப்பினரான றிவ்கான் பதியுதீன் நேற்றுமுன்தினம் ஆரம் பித்து வைத்தார்.

இதன் போது பிரபல தொழிலதிபர் அலாவுடீன், மன்னார் பிரதேச சபை உறுப்பினர் அரபாத், பொறியியலாளர்கள் மற்றும் ஊர்ப் பிரமுகர்கள் உள்ளடங்கலாகப் பலர் கலந்து கொண்டனர். (க-ரி)

## இவ்வாண்டுக்கான வர்த்தக உரிமத்தை எடுக்காதோருக்கு அவகாசம்

வலிதென்மேற்கு நவ16

வலி. தென்மேற்கு பிரதேசத்தில் இவ்வாண்டுக்கான வர்த்தக உரிமம் எடுக்காதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ள அதிகாரிகள் இந்த மாதம் முடிவடைவதற்குள் உரிமத்தைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை அவர்களுக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள அனைத்து வியாபார நிலையங்களும் இந்த வருடம் மார்ச் 31ஆம் திகதிக்கு முன் உரிமம் எடுக்க வேண்டும். எனினும் பல வியாபாரிகள் இன்று வரை உரிமம் எடுக்காமல் காலம் கடத்தி வருகின்றனர். (வ-115)


**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



தோற்றம் 11.11.1938
மறைவு 17.10.2013

அமரர் வாமதேவன் ஞானேஸ்வரி

எங்கள் அன்புத் தெய்வம்
எங்களை விட்டு மறைந்து
மாதம் ஒன்றானாலும் அவர் நினைவு
எங்களை விட்டு நீங்காது

இன்று (16.11.2013) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

34/7, வளாக வீதி,
திருநெல்வேலி.

உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

(40091)(2.6)





**4ஆம் ஆண்டு நினைவலைகள்**

திருமதி
மங்கையர்க்கரசி சோதிலிங்கம்
(மண்டைதீவு)

அன்போடு எமை அரவணைத்து
அறுசுவை உணவளித்து உளம் நிறைத்து
பண்பூட்டி எமை ஆளாக்கிய
அன்புத் தெய்வமே! அன்னையே!
ஆண்டுகள் நான்கு கடந்தும்
ஆறாத ரணமாய் வலிக்கிறது உம் பிரிவு

*அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

27/1, கருவேலடி லேன்,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

(40155)(10.14)



**கூறுவிலை கோரல்**

எமது சம்மேளனத்திற்குச் சொந்தமான பின்வரும் விவரப்படியான ஆதனங்களை ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான கூறுவிலைகள் கோரப்படு கின்றன்

**பனிக்கட்டி ஆலை**

1. குளிரூட்டி கொள்கலன் (20'X 8'X 10') கொள்வனவு கொண்டது)
2. குளிரூட்டி வாகனங்கள்

இவற்றிற்கான கூறுவிலைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் சம்மேளனக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு 27.11.2013 அன்று முற்பகல் 10.00மணிக்கு முன்னதாக உரிய விண்ணப்பத்தினைப் பெற்று கிடைக்கதக்கதாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் ஆழ்கடல் மீன்பிடி பல நாள்படகில் தலைமை ஓட்டுனராகவும் (Skipper) இப்படகில் தொழில் செய்வதிலும் இயக்குவதிலும் ஆர்வமுள்ளவர்களையும் எதிர்வரும் 27.11.2013 இற்கு முன்னதாக சம்மேளனக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர், யாழ் மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனம்(வ.து) இல.100 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல. 021 222 2347, 9797 (C/12291) (4.6.3)



**விற்பனைக்கு / வாடகைக்கு**

K.K.S. வீதி சம்பியன் லேன் எதிரில் உள்ள மேல் மாடி வீடு சகல வசதிகளு டன் 5 பரப்பு விற்பனைக்கு அல்லது வாட கைக்கு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு - 0779-798181 (சி/13795) (2.8)

**கோழிக்குஞ்சு விற்பனைக்கு**

தரமான நல்லின ஒருநாள், கிழமை, மாத ஊர்க் கோழிக்குஞ்சுகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
(33007)(2.8) தொடர்பு - 021 7200616

**வீடு விற்பனைக்கு**

யாழ் கந்தர்மடம் அரசடி வீதியில் பலாலி வீதிக்கு மேற்காக, நல்ல சூழலில் 1,3/4 பரப்பில் அமைந்துள்ள 7 அறைகளைக் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. (சி/13796)
தொடர்புக்கு:- 0776-948555, 0773-431772 (2.6)

**தேவை**

வவுனியாவில் இயங்கும் அரிசி ஆலைக்குப் பொறுப்பாக நின்று செயற்படுத்தக் கூடியவர் தேவை.
வயது - 30 - 55 வரை (ஆண்)
கணக்கு எழுதக்கூடியவர் விரும்பத்தக்கது.
தொடர்பு: 075 543 4994 (40164)(2.6)

**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலியில் மேல்மாடி வீடு மட்டும் நான்கு அறைகள், மாபிள் பதிக்கப்பட்ட கோல், சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு (குடும்பத்தினருக்கு மட்டும்)
(40156)(10,14) தொடர்பு: 0711 779 790



திரு.திருமதி விக்கினேஸ்வரன் தாரணி தம்பதியரின்
சிரேஷ்ட புதல்வனும், யாழ்.இந்துவின் மைந்தனும்,
மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல்பீட புகுமுக
மாணவனும் **குரு நல்லை க.கண்ணதாஸ்**
அவர்களின் மிருதங்க மாணவனுமாகிய
செல்வன் **விக்கினேஸ்வரன் மகிழன்** அவர்களின்

**மிருதங்க அரங்கேற்றம்**



இடம் :- நல்லூர் இளங்கலைஞர் மன்றம்
காலம் :- இன்று (2013.11.16) சனிக்கிழமை. பிற்பகல் 3 மணி
தலைவர் :- செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன்
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
பிரதம விருந்தினர் :-
பேராசிரியர் வி.பி.சிவநாதன்
(கலைப்பீடாதிபதி,யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர் :-
கலாநிதி ஸ்ரீ.தர்ஷனன்
(தலைவர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

திரு.திருமதி விக்கினேஸ்வரன் தம்பதியினர்.

(40092)(2-6-3)


## பெருந்தெருக்கள் அமைச்சின் பெயர் மாற்றம்

கொழும்பு, நவ.16

துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் வழக்கில் உள்ள பெயர் "பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் கடற்படை அமைச்சு" என்றவாறு மாற்றப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 44 ஆவது அரசமைப்புக்கு அமைய இந்த மாற்றத்துக்கு ஜனாதிபதியின் செயலரால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பி.ரோஹித அபேகுணவர்தன பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் கடற்படைத் திட்ட அமைச்சர் என அழைக்கப்படுவார். (ச-22)



பொதுநலவாய மாநாட்டுக்குத் தயார் நிலையிலுள்ள கொழும்பு மஹிந்த ராஜபக்ஷ தாமரைத் தடாக கலையரங்கின் அழகிய தோற்றம்.

## ரூ.35,000 அபராதம்

அம்பாறை,நவ.16

அம்பாறை மாவட்டத்தில் பாவனையாளர் சட்டத்தை மீறும் வகையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த 25 வர்த்தகர்களுக்கு எதிராக அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிவான் 35,000 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஆலையடிவேம்பு, இறக்காமம், வரிப் பத்தான்சேனை ஆகிய பிரதேச சங்களைச் சேர்ந்த வர்த்தகர் களிடமே இவ்வாறு அபராதம் அறவிடப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட பாவனையாளர் அலுவகை அதிகாரசபை அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போதே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இதன்போது பாவனையாளர் சட்டங்களை மீறும் வகையில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்த தவறியமை, குறித்த விலைக்கு அதிகமான விலையில் பொருள்கள் விற்பனை செய்தமை, காலாவதியான பொருள்களை அகற்றாமல் வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## போதைப் பொருளை விற்றால் இனி கைது

கொழும்பு, நவ.16

பாடசாலை மாணவர்களுக்கு பாபுல், பீடா போன்ற போதைப்பொருள் அடங்கிய வெற்றிலையை விற்பனை செய்பவர்களை கைதுசெய்ய, பொலிஸாருடன் இணைந்து சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைக்கு அரசியல் தலைவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு அவசியமானது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது பாடசாலை மாணவர்களில் பலர் போதைப் பொருள்கள் அடங்கிய வெற்றிலைப் பாவனைக்கு பழக்கப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களை போதைப்பொருள் பாவனையிலிருந்து பாதுகாக்கும் பொறுப்பு பெற்றோருக்கு உள்ளது என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ச)

# ஒரு சேவை நிலையத்தில் 6 ஆண்டுகள்தான் சேவை

### பிரதேச செயலருக்கு வரையறை

கொழும்பு,நவ.16

பிரதேச செயலர் சேவை நிலையமொன்றில் பணியாற்றக்கூடிய அதிகபட்ச காலம் 6 ஆண்டுகளாக வரையறுக்கப்பட்டுள்ளது என்று நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. டீ.ஜே.செனவிரத்ன தெரிவித்தார்.

அரச அதிகாரிகள் நீண்ட காலத்துக்கு ஒரே சேவை நிலையத்தில் கடமையாற்றுவதால் அதிகளவு பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று அவர் கூறினார்.



சில பிரதேச செயலர்கள் அரசியல் நெருக்கங்கள் மூலமாக சுமார் 14 வருடங்களாக ஒரே சேவை நிலையத்தில் இருந்து கொண்டே பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன என்று அமைச்சர் தெரிவித்தார்.

எனினும் அரச அதிகாரிகள் நீண்ட காலத்துக்கு ஒரே சேவை நிலையத்தில் தங்கியிருப்பதால் உருவாகியுள்ள சிக்கல்களைக் குறைத்துவிடுவதற்கு ஒட்டுமொத்த அரச சேவைகளுக்கும் முறையான இடமாற்ற விதிமுறையொன்று அவசியமாகியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினைகள் குறித்து விரைவில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

## பாடசாலை தகவலை பெறச் செயற்றிட்டம்

### கல்வி ஆணைக்குழு நடவடிக்கை

கொழும்பு, நவ.16

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் தனது பிரதிநிதிகளை அனுப்பி தகவல்கள் மற்றும் விவரங்களைப் பெற்றுக் கொள்ளும் செயற்றிட்டத்தைதேசிய கல்வி ஆணைக்குழு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்துக்காக ஆசிரிய ஆலோசகர்கள் அமர்த்திக் கொள்ளப்படவுள்ளனர் என்று ஆணைக்குழுவின் தகவல் மார்க்கங்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் திட்டத்தின் மூலம் சிறிய பாடசாலைகளின் தற்போதைய நிலைப்பாடு மற்றும் அவற்றை அபிவிருத்தி செய்வது தொடர்பாக யோசனைகளைப் பெறுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின் மூலம் பெறப்படும் தரவுகளைப் பகுப்பாய்வு செய்து முழுமையான அறிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிப்பதற்கும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (ச-22)

## சமுர்த்தி பயனாளி குடும்பங்களுக்கு ரூ.138 கோடி செலுத்தப்படவில்லை

### கணக்காய்வுப் பரிசீலனையில் அம்பலம்

கொழும்பு, நவ.16

கடந்த ஐந்தாண்டு காலத்தில் 16 லட்சம் வரையிலான சமுர்த்திப் பயனாளி குடும்பங்களுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ள 138 கோடி 77 லட்சத்து 38 ஆயிரம் ரூபா செலுத்தப்படவில்லை. இந்த விடயம் கணக்காய்வுப் பரிசீலனையில் தெரியவந்துள்ளது.

2012ஆம் ஆண்டில் வங்கிக் கட்டடங்களை நிர்மாணிக்க 24 கோடி 10 லட்சம் ரூபாவில் ஊழியர்களுக்கான சம்பளங்களை வழங்க 5 கோடி ரூபா சமுர்த்தி நிதியத்திலிருந்து செலவழிக்கப்பட்டுள்ளது என்று கணக் காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதிப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவினங்களும் பிரதேச செயலகங்கள் மூலமாக சமுர்த்தி அதிகார சபைக்கு அனுப்பி வைக்கப்படும் சமுர்த்திப் பயனாளிகளின் சேமிப்பு நிதியத்தில் இருந்து செலவழிக்கப்படுகிறது என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ச-22)

## திருட்டில் ஈடுபட்ட சந்தேகத்தில் ஒருவர் கைது



அம்பாறை,நவ.16

அம்பாறை, ஒலுவில் பிரதேசத்தில் பலசரக்குக் கடை உடைத்து திருடப்பட்ட சம்பவம் தொடர்பான சந்தேகத்தில் ஒருவரை செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.


ஒலுவில், உப தபால் கந்தோர் வீதியில் உள்ள குறித்த கடையைத் திங்கட்கிழமை இரவு பூட்டிவிட்டு அதன் உரிமையாளர் வீட்டுக்குச் சென்று செவ்வாய்க்கிழமை காலையில் வந்து பார்த்தபோது, கடையின் கதவை உடைத்துப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

அதனையடுத்து கடை உரிமையாளர் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# அதிவேக நெடுஞ்சாலை ஜனவரியில் திறப்பு

கொழும்பு,நவ.16

கொழும்பு- மாத்தறை அதிவேக நெடுஞ்சாலையில் காலிக்கும் மாத்தறைக்குமிடையிலான பகுதி எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்படும் என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.



அன்றையதினம் மாத்தறையில் இருந்து அம்பாந்தோட்டை வரையான அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிப்பதற்காக ஜனாதிபதியினால் அடிக்கல் நட்டு வைக்கப்படும் என்று துறைமுகங்கள் நெடுஞ்சாலை திட்ட அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்தார்.

காலி- மாத்தறை இடையிலான 35 கிலோ மீற்றர் தூர அதிவேக நெடுஞ்சாலைப் பாதை 25 பில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. நிர்மாணப் பணிகள் 90 வீதத்துக்குமேல் நிறைவடைந்துள்ளன.

மூன்று பிரதான நுழைவு வழிகளுடன் கூடியதாக நிர்மாணிக்கப்படும் காலி- மாத்தறைக்கிடையிலான நெடுஞ்சாலைப் பணிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்தவாரம் பார்வையிட்டார். (ச)

## வடமராட்சியில் கடல் கொந்தளிப்பு

வடமராட்சி வடக்கு கிழக்கு கரையோரப் பகுதியில் நேற்றைய தினம் கடும் காற்று வீசியதுடன் கடல்பெரும் கொந்தளிப்பாகவும் காணப்பட்டது.

புயல் காற்று வீசக்கூடும் என பொதுகமக்கள் மத்தியில் அச்சம் காணப்பட்டது. கரையோரப் பாடசாலைகள் நேரகாலத்துடன் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மூடப்பட்டன. இது தவிர தரைப் பகுதியில் பலத்த காற்று வீசியது.

கடும் காற்று கடல் கொந்தளிப்பினால் நேற்றைய தினம் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை.

## பாராட்டி கௌரவிப்பு

குருநகரைச் சேர்ந்த எழுத் தாளர் குருசுமுத்து இராஜப்பு (கலையார்வன்) எழுதிய 'உப்புக்காற்று' என்னும் நாவலுக்கு இந்த ஆண்டு 4 இலக்கிய விருதுகள் கிடைக்கப் பெற்ற மையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் அவரால் எழுதப்பட்ட 'வேப்ப மரம்' என்னும் நாவல் வெளியீட்டு நிகழ்வும் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். பிரதான வீதியில் அமைந் துள்ள திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலை யகத்தில் நடைபெறவுள்ளது. யாழ். சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.சி.எம்.மகேந்திரன் தலைமையில் நிகழ்வு இடம்பெறும். (வ-11)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வலி.வடக்கு

கடந்த செவ்வாய்க் கிழமையிலிருந்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

நேற்றைய இறுதிநாளில் கடும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் மக்கள் பேரெழுச்சியுடன் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சி.சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோருடன் மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

அத்துடன் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் மீனவ சங்கங்களும் கலந்துகொண்டிருந்தன.

தம்மைச் சந்திக்க பிரிட்டன் பிரதமர் வருவார் என்ற எதிர்பார்ப்பில் மாலை 5 மணி வரையில் மக்கள் காத்திருந்தபோதும் அவர் அங்கு வருகை தரவில்லை. (ங-5)

### படை

உறுதியாகவுள்ளது என்று அந்நாட்டு பிரதமர் டேவிட் கமரூன் நேற்று யாழில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று பயணம் செய்த பிரிட்டன் பிரதமர், யாழ். பொதுநூலகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போதே இராணுவ மயமாக்கலே வடக்கில் பெரும் பிரச்சினையாக உள்ளது. இதனால் தமிழ் மக்களின் சொந்த நிலங்கள் படைகளினால் அபகரிக்கப்படுகின்றன; வீடுகள் இடித்தழிக்கப்படுகின்றன; இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேறாமல் உள்ளனர். தமிழரின் பொருளாதாரம் பாதிப்படைந்துள்ளது.

மனித உரிமை மீறல்களில் படையினர் ஈடுபடுகின்றனர். பெரும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தமிழ் மக்கள் இங்கு வாழ்கின்றனர். அதேவேளை, இராணுவத்தினரின் குடும்பங்கள் மற்றும் சிங்களக் குடும்பங்களைக் குடியமர்த்தி வடக்கில் இனப்பரம்பலை மாற்றியமைக்க அரசு திரைமறைவில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது - என்று பிரிட்டன் பிரதமரிடம் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

அத்தோடு வடமாகாண சபையில் முன்னாள் இராணுவ அதிகாரி ஆளுநராக இருப்பதால் அவர் தன்னிச்சையாக முடிவெடுக்கின்றார். மக்கள் எமக்கு வழங்கிய ஆணைக்கு அவர் மதிப்பளிப்பதில்லை. இவரின் இத்தகைய செயற்பாடுகள் மாகாண சபையின் அதிகாரங்களை மத்திய அரசு பறிப்பதற்கு ஏதுவாகிவிடும். எனவே, இவரை உடனடியாகப் பதவி நீக்கம் செய்து சிவில் சமூகத்தினரின் பிரச்சினையை உணர்ந்து பணியாற்றக்கூடிய ஒருவரை ஆளுநராக உடனடியாக நியமிக்குமாறு நாம் மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

சர்வதேச சமூகத்தின் மத்தியஸ் தத்துடன் நிலையான - நிரந்தர அரசியல் தீர்வையே தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர். இந்தத் தீர்வு அனைவரும் ஏற்றுக்கொள்ளகூடிய சமஷ்டி அடிப்படையில் அமைந்திருக்கவேண்டும் - என்று கூட்டமைப்பினர் தெவித்தனர். இதனைக் கேட்டறிந்தபின் கருத்துத் தெரிவித்த பிரிட்டன் பிரதமர்,

வடக்கு மாகாணத்தில் இராணுவ ஆக்கிரமிப்புக்கள் உடன் நிறுத்தப்படவேண்டும் என்பதிலும், படைகளின் பிரசன்னம் குறைக்கப்படவேண்டும் என்பதிலும் பிரிட்டன் உறுதியாகவுள்ளது. இதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமேயில்லை. சர்வதேச சமூகமும் இதனையே விரும்புகின்றது.

அதேவேளை, வடக்கில் தமிழ் மக்கள் எந்தவித அச்சுறுத்தல்களுமின்றி சுதந்திரமாக வாழவேண்டும்.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை இந்நாட்டு அரசு உடன் நிறுத்தவேண்டும்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மஹிந்த ராஜபக்ஷ அரசால் வலுக்கட்டாயமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டதிலிருந்து இலங்கையின் நீதித்துறை செயலிழந்து விட்டது. எனவே, சர்வதேச அழுத்தங்கள் ஊடாகத்தான் இலங்கையில் எந்தப் பிரச்சினைக்கும் ஒரு தீர்வைக் காணலாம்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் காணாமல்போனோர் தொடர்பில் நீதியான - பக்கச்சார்பற்ற - சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய விசாரணைகள் உடன் நடத்தப்படவேண்டும். இல்லையெனில் சர்வதேச விசாரணையை பிரிட்டன் வலியுறுத்தும்.

இலங்கை தொடர்பான எனது நிலைப்பாடுகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நான் நேரடியாகத் தெரிவிக்கவுள்ளேன் - என்றார். (த-சி)

### வடக்குக்கு

கமரூன். பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க வந்திருக்கும் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்று மாலை சந்தித் துப் பேச்சு நடத்தினார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலையத்தில் இந்தச் சந்திப்பின் போது, பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு ஒழுங்கு செய் யப்பட்டிருந்த விதம் குறித்து பிரிட்டன் பிரதமர் திருப்தி வெளியிட்டுள்ளார்.

பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்கும் எண்ணம் தனக்கு இருக்க வில்லை என்றும் அவர் கூறினார் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், தனது வடக்குப் பயணம் தொடர்பில் இதன் போது ஜனாதிபதி யிடம் கருத்து தெரிவித்த பிரிட்டன் பிரதமர்,

" போர் முடிவடைந்தப்பின்னர் வடக்கில் பெருமளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வட மாகாண சபைக்கு தேர்தல்களை நடத்தியமை நல்லிணக் கத்தை நோக்கிய ஒரு மிகச் சாதகமான நடவடிக்கையாகும்.

எனினும், மீள்குடியேற்றம், காணிப் பிரச்சினைகள், வட மாகாணத்தில் இராணுவத்தினரின் பிரசன்னம் மற்றும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட வட மாகாண சபைக்கு அதிகாரங்களை பகிர்ந்தளித் தல் ஆகிய விடயங்களுடன் தொடர்புபட்ட பல்வேறு பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப் பட வேண்டியுள்ளது" என்று கூறியுள்ளார்.

இவற்றுக்குப் பதிலளித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ,

" மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் மோதலின் போது சேதத்திற் குள்ளான உட்கட்டமைப்பு புனர்நிர்மாணம் போன்ற விடயங்களில் பெருமளவு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அரசியல் விவகாரங்களில் இணக் கப்பாட்டை எட்டும் வகையில், தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கும், தீர்வொன்றை எட்டுவதற்கும், சம்பந்தப்பட்ட எல்லா கட்சிகளையும் உள்ளடக்கிய ஒரு நாடாளுமன்ற தெரிவுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தெரிவுக் குழுவே இந்த நோக்கத்திற்கான சிறந்த தளமாகும்.

மோதல் நிறைவுக்கு வந்து நான்கு வருடங்களே கடந்துள்ளன. எனவே, அனைத்து பாரிய சவால்களையும் வெற்றி கொள்வதற்கு இன்னும் காலம் தேவை "- என்றார்.

பிரிட்டிஷ், வெளிவிவகார செயலாளர் வில்லியம் ஹேக், இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் ரங்கிங் மற்றும் இலங்கை வெளி விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுணுகம ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர். (ங)

### ஊடகவியலாளர்

சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் கலந்து கொண்டார்.

அதன் பின்னர் 'உதயன்' அலுவலகத்துக்கு அவர் வருகை தந்தார். பிரிட்டன் பிரதமர் கமரூனுடன் பிரிட்டன் ஊடகவியலாளர்கள் 25 பேரும் உதயனுக்கு வருகை தந்தனர்.

பிரிட்டன் பிரதமரை 'உதயன்' நிர்வாக இயக்குநரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், கைலாகு கொடுத்து வரவேற்றார். அதன் பின்னர் கமரூன் 'உதயன்' நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன், உதயன் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் ஆகி யோருடன் சுமார் 15 நிமி டங்கள் வரை கலந்துரையாடினார்.

கலந்துரையாடலைத் தொடர்ந்து, கடந்த ஏப்ரல் மாதம் இனந் தெரியாதோரால் எரிக்கப்பட்ட உதயனின் அச்சகப் பகு தியையும் பிரிட்டன் பிரதமர் பார்வையிட்டார்.

இதனையடுத்து 'உதயன்' ஊடகவியலாளர்களை சந்தித்து அவர்களுடன் சிறிது நேரம் கலந்துரையாடினார். இதன்போது கருத்து வெளியிட்ட கமரூன், 'உதயன்' தாக்குதல்கள் தொடர்பில் நான் முன்னரே கேள்விப்பட்டிருந்தேன். இங்கு வரவேண்டும் என்று எண்ணியிருந்தேன். இங்கு வந்ததன் மூலம் உண்மையான கள நிலைமையை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. 'உதயன்' மீது இவ்வளவு தாக்குதல்கள் நடத்தப்பட்டபோதும் நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசுவேன். அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நீங்கள் தொடர்ந்தும் இந்தப் பணியை முன்னெடுப்பது குறித்து ஆச்சரியமடைகிறேன்.

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத் துவதற்கு என்னால் இயன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வேன் - என்றார்.

இதன்பின்பு கே.கே.எஸ். வீதி வழியாக சுன்னாகத்தில் உள்ள சபாபதிப்பிள்ளை இடம்பெயர்ந்தோர் முகாமுக்குச் சென்றார் கமரூன். அங்கு மக்களைச் சந்தித்த பின்னர் நேற்று மாலையே அவர் மீண்டும் விமானம் மூலம் கொழும்புக்கு திரும்பினார். (த-5)

### மீளக்குடிய

ரூன் வலி.வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்துக்குச் சென்றார். அங்கு இடம்பெயர்ந்த மக்களை அவர் சந்தித்தார். அந்த மக்கள் கண்ணீர் மல்க, தமது வாழிடங்கள் இராணுவப் பிடிக்குள் சிக்குண்டு இருப்பதையும் தாங்கள் 23 வருடங்களாக இடம் பெயர்ந்து இன்னமும் நலன்புரி நிலையத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் எனவும் தெரிவித்தனர்.

இதன்பின்னர் பிரிட்டன் பிரதமர் நலன்புரி நிலையத்திலுள்ள சில வீடுகளுக்குச் சென்று பார்வையிட்டார்.

போர் முடிந்து நான்கு ஆண்டுகளாகியும் இந்த மக்கள் அவர்களது சொந்த இடங்களில் ஏன் மீளக்குடியமர்த்தப்படவில்லை என்று கேள்வி அவர் எழுப்பினார்.

இதன்போது யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், அவர்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். அதற்குப் பிரதமர் கமரூன் எப்போது மீள்குடியமர்த்தப் போகின்றீர்கள்என்று பதில் கேள்வி எழுப்பினார்.

அதற்கிடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், குறித்த காணிகளை இராணுவம் சுவீகரிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுவரும் விடயத்தை வெளிப்படுத்தினார். இந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷடன் தான் கலந்துரையாடுவேன் என கமரூன் தெரிவித்தார்.

பிசுபிசுத்த போராட்டம்

கமரூன் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக சீருடையினரால் ஏற்றிவரப்பட்ட சிலர் போராட்டம் ஒன்றை நடத்த முயன்றனர்.

இவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய பதாகைகள் தாங்கிப் பிடித்திருந்தனர். எனினும் இவை எதையுமே பொருட்படுத்தாமல் கமரூன் பயணித்தார். (ங-5)

### காணாமற்

மானது. பிரிட்டன் பிரதமரது கவனத்தை ஈர்ப்பதற்காக காணாமற்போனோரின் உறவுகளால் நடத்தப்பட்ட போராட்டத்தை பொலிஸார் அடக்க முயன்றதால் பெரும் களேபர நிலைமை தோன்றியது.

காணாமற்போனோரைக் கண்டு பிடித்துத் தருமாறு கோரி நல்லூர் ஆலயச் சூழலில் நேற்று வெள்ளிக் கிழமை காலை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. வடக்கின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்த ஆயிரக்கணக்கான, காணாமற்போனோரின் உறவுகள் இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்திருந்னர்.

இந்தப் போராட்டம் மதியம் வரை நல்லூர் கோயில் பகுதியில் இடம்பெற்றது. இதன் பின்னர் காணாமற்போனோரின் உறவுகள் தந்தை செல்வா நினைவுத் தூபிக்கு முன்பாகப் போராட்டம் நடத்தினர்.

பிரிட்டன் பிரதமர் கமரூன் பொது நூலகத்துக்கு வருகை தரும் போது போராட்டக்காரர்கள் யாழ். பொது நூலக முன்பக்கத்தை நோக்கி முன்னேறத் தொடங்கினர். இதன் போது பொலிஸார் தமது வாகனத்தை குறுக்கே நிறுத்தி மறித்ததுடன் கலகமடக்கும் பொலிஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டு மக்கள் தடுக்கப்பட்டனர்.

இதன்போது பொலிஸாருக்கும் காணாமற்போனோரின் உறவுகளுக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் மூண்டது. முறுகல் நிலை வரையில் சென்றது.

இதன்பின்னர் மக்கள் கோஷமெழுப்பினர். காணாமற்போன தமது உறவுகளைக் கண்டுபிடித்துத் தருமாறு அவர்கள் அழுதுபுலம்பினர். கமரூன் பொது நூலகத்தை விட்டு வெளியேறிய பின்னரும் போராட்டம் நடத்திய மக்கள் சிறிது நேரத்தில் அங்கிருந்து கலைந்து சென்றனர். (த-5)

## அல்கிஜ்ரா அணி வெற்றி

யாழ்ப்பாணம்,நவ.16

வவுனியா உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே பண்டாரவன்னியன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று வெள்ளிக்கிழமை வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் அல்கிஜ்ரா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

அல்கிஜ்ரா விளையாட்டுக் கழக அணிக்கும் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அல்கிஜ்ரா விளையாட்டுக்கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



முரளி நல்லிணக்கக் கிண்ணத்துக்கான 20/20 கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணியைப் படத்தில் காணலாம். (த-23)

## வவுனியாவில் உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், நவ.16

வவுனியா உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே பண்டாரவன்னியன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மருதநிலா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## வடக்கு- கிழக்கு லீக்குகள் பங்கு கொள்ளும் மாபெரும் உதைபந்தாட்டம் மன்னாரில்

மன்னார்,நவ.16

மன்னார் பனங்கட்டிக் கொட்டுக் கிராமத்தைச் சேர்ந்த அமரர்கள் மரிசலீன் தம்பதியர் ஞாபகார்த்தமாக அவர்களின் குடும்பத்தாரின் நிதியுதவியுடன் மன்னார் சென்.ஜோசப் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் மன்னார் உதைபந்தாட்ட லீக் வடக்கு- கிழக்கு மாகாண உதைபந்தாட்ட லீக்குகளுக்கிடையில் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுத்தொடர்போட்டிகள் எதிர்வரும் 22ஆம், 23 ஆம், 24 ஆம் திகதிகளில் மன்னார் நகர சபை மைதானத்திலும் தாழ்வுப்பாடு உதைபந்தாட்டச் சம்மேளன மைதானத்திலும் நடைபெறவுள்ளன.



பருத்தித்துறை,யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி,வவுனியா,மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய லீக்குகளிலிருந்து சிறந்த 2 அணிகள் வீதம் 16 அணிகளும் மன்னார் லீக்கிலிருந்து சிறந்த 16 அணிகளுமாக 32 அணிகள் இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாண லீக்குகளின் சிறந்த அணிகள் ஒன்றாகப் போட்டியில் பங்கு பற்றுவது இதுவே வரலாற்றில் முதல் தடவையாகும்.

முதலாம் இடத்துக்கு 50 ஆயிரம் ரூபா பணப்பரிசுடன் வெற்றிக்கிண்ணமும் தங்கப்பதக்கமும் 2ஆம் இடத்திற்கு 30 ஆயிரம் ரூபா பணப்பரிசுடன் வெற்றிக்கிண்ணமும் பதக்கமும் அரையிறுதியில் தோல்வியடையும் இரு அணிகளுக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. (த-23)

" - "

வடக்கு-கிழக்கு மாகாண லீக்குகளின் சிறந்த அணிகள் ஒன்றாகப் போட்டியில் பங்குபற்றுவது இதுவே வரலாற்றில் முதல் தடவையாகும்.

## அரையிறுதி ஆட்டம்



யாழ்ப்பாணம்,நவ.16

வவுனியா உதைபந் தாட்ட லீக்கினால் அங்கத் துவக் கழகங்களுக்கு இடையே பண்டாரவன் னியன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்படும் உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை ஞாயிற் றுக்கிழமை மாலை 4 மணிக்கு வவுனியா வைரவர் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள முதாவது அரையிறுதி ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்கிஜ்ரா விளையாட் டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## பயிற்சியாளர் ஞானராஜ் மலேசியாவுக்குப் பயணம்

மன்னார்,நவ.16

மன்னார் உதைபந்தாட்ட லீக் செயலாளர் ப.ஞானராஜ் உதைபந்தாட்ட முகாமைத்துவ நிர்வாகக் கற்கை நெறிக்காக இம் மாதம் 30ஆம் திகதி மலேசியா செல்கிறார்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் குறிப்பிட்ட கற்கைநெறியில் பங்குபற்ற தெரிவுசெய்யப்பட்டு மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள ஆசிய உதைபந்தாட்ட சம்மேள னத்தின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும் பயிற்சி நெறியில் கலந்துகொள்ளவுள்ளார்.

இவர் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின்



உறுப்பினராகவும் மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் பொதுச் செயலாளராகவும் மன்னார் மாவட்ட இணைப்பாளராகவும் உதைபந்தாட்ட முதல் தரப் பயிற்றுவிப்பாளராகவும் இவர் கடமையாற்றிவருகிறார்.

அத்துடன் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியராகவும் கடமையாற்றி வருகிறார். (த-23)

" - "

ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும் பயிற்சி நெறியில் இவர் கலந்து கொள்ளவுள்ளார்.

## தபால் திணைக்களம் சம்பியன்

யாழ்ப்பாணம்,நவ.16

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் நடத்தும் அரச திணைக்களங்களுக்கு இடையிலான அரச அதிபர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் தபால் திணைக்கள அணி சம்பியனானது.

நேற்று வெள்ளிக்கிழமை உடுப்புக்குளம் அலை



ஓசை விளையாட்டுக்கழக மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது.

இறுதி ஆட்டத்தில் தபால் திணைக்கள அணியை எதிர்த்து உள்ளூராட்சித் திணைக்கள அணி மோதிக் கொண்டது.

இதில் தபால் திணைக்கள அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (த-23)

## எவ்.ஏ. கிண்ணத்துக்கான ஆட்டம் திருமலையில்

யாழ்ப்பாணம், நவ.16

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினரால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்றும், நாளையும் திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-


**இன்று சனிக்கிழமை பி.ப. 3மணி**

திருகோணமலை ஈஸ்டன் ஈகிள் விளையாட்டுக் கழகம் எதிர் பருத்தித்துறை நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம்.

**நாளை பி.ப. 3மணி**

திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் பருத்தித்துறை பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம். (த-23)






## கூடைப்பந்தாட்டத்தில் உலக சாதனை

மிகவும் தூரத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட கூடைப்பந்தாட்ட இலக்கு என்ற உலக சாதனையை தண்டர் லோ எனும் வீரர் நிகழ்த்தியுள்ளார்.
இவரது சாதனையானது 109 அடிகள் 9 அங்குல தூரத்திலிருந்து நிகழ்த்தப்பட்டுள்ள அதேவேளை முன்னைய சாதனையானது 104 அடிகள் 7 அங்குலங்கள்ாக இருந்துள்ளது.
அத்துடன் முன்னைய சாதனையானது 3 வருடங்களின் பின்னர் தற்போது தகர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# மூன்றாவது போட்டிக்கான இலங்கை அணி அறிவிப்பு

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் மூன்றாவதும், இறுதியுமான போட்டிக்கான இலங்கைக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.
முதலிரண்டு போட்டிகளுக்குமாக அறிவிக்கப்பட்ட 16 பேர் கொண்ட குழாமே மூன்றாவது போட்டிக்காகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்தத் தொடரின் முதலாவது போட்டியில் மழை காரணமாக முடிவு பெறப்படாது போக, இரண்டாவது போட்டி மழையால் பாதிக்கப்பட்டு 23 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட போட்டியாக இடம்பெற்ற போது நியூசிலாந்து அணி இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 20 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றிருந்தது.
முதலிரண்டு போட்டிகளையும் வெற்றி கொண்டு இத்தொடரைக் கைப்பற்றினால் மூன்றாவது போட்டியில் இளைய வீரர்களுக்கான வாய்ப்புக்கள் வழங்கப்படுமென இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் இத்தொடர் ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது இத்தொடரை சமநிலைப்படுத்திக் கொள்ள அடுத்த போட்டியில் வெற்றிபெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால், மூன்றாவது போட்டிக்குப் பலமான குழாமே அறிவிக்கப்பட்டுள்ளது.
மூன்றாவது போட்டி இன்று தம்புள்ளையில் இடம்பெறவுள்ளது.
அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:
அஞ்சலோ மத்தியூஸ், டினேஷ் சந்திமால், லஹிரு திரிமன்ன, திலகரட்ண டில்ஷான், குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, சச்சித்திர சேன நாயக்க, அஜந்த மென்டிஸ், திஸர பெரேரா, நுவான் குலசேகர, சுரங்க லக்மால், குசால் ஜனித் பெரேரா, திமுத் கருணாரத்ன, விமுக்தி பெரேரா, ரங்கன ஹேரத், அஷன் பிரியஞ்சன. (த)

## இந்திய கிரிக்கெட் அணி ஒப்பந்தங்கள் அறிவிப்பு

இந்திய தேசிய கிரிக்கெட் அணிக்கான வருடாந்த ஒப்பந்தங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. 2013-14 பருவகாலத்துக்காக ஒப்பந்தங்களே அறிவிக்கப்பட்டுள்ளன.
25 வீராகளுக்கு வருடாந்த ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.
குழு ஏ, குழு பி, குழு சி என மூன்று வகையான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. குழு ஏ இனைச்சேர்ந்த வீராகளுக்கு வருடாந்தம் ஒரு கோடி இந்திய ரூபாக்களும், குழு பி இனைச் சேர்ந்த வீராகளுக்கு வருடாந்தம் 50 இலட்சம் இந்திய ரூபாக்களும், குழு சி இனைச் சேர்ந்த வீரர்களுக்கு வருடாந்தம் 25 இலட்சம் இந்திய ரூபாக்களும் ஊதியமாகக் கிடைக்கப்பெறும்.
கடந்த முறை ஒப்பந்தப் பட்டியலில் இடம்பெற்றிருக்காத வீரர்களான புவனேஷ்வர் குமார், மொஹமட் ஷமி, அம்பத்தி ராயுடு, ஜெய்தேவ் உனத்கட், மோகித் சர்மா ஆகியோருக்கு இம்முறை ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.
கடந்த முறை ஒப்பந்தம் வழங்கப்பட்ட சிரேஷ்ட வீரர்களான சகீர்கான், விரேந்தர் செவாக், ஹர்பஜன் சிங் ஆகியோருக்கு ஒப்பந்தம் வழங்கப்படவில்லை.
ஒப்பந்த விவரங்கள்:
குழு ஏ: சச்சின் டெண்டுல்கர், மகேந்திரசிங் டோனி, விராட் கோலி, இரவிச்சந்திரன் அஷ்வின், சுரேஷ் ரெய்னா
குழு பி: கௌதம் கம்பீர், யுவ்ராஜ் சிங், பிரக்ஜான் ஓஜா, இஷாந்த் சர்மா, முரளி விஜய், ஷீகர் தவான், உமேஷ் யாதவ், செற்றேஸ்வர் புஜாரா, இரவீந்திர ஜடேஜா, புவனேஷ்வர் குமார், றோகித் சர்மா

# இங்கிலாந்து அணி சிறப்பான ஆட்டம்

தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 302 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் அழைப்பு பதினொருவர் அணிக்குமிடையிலான பயிற்சிப் போட்டியின் இரண்டாம் நாள் முடிவில் ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை அழைப்பு பதினொருவர் அணி முன்னிலை பெற்றுள்ளது.
5 இலக்குகளை இழந்து 271 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தைத் தொடர்ந்த ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அழைப்புப் பதினொருவர் அணி சகல இலக்குகளையும் இழந்து 304 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.
துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை அழைப்புப் பதினொருவர் அணி சார்பாக றயன் கார்டர்ஸ் 94 ஓட்டங்களையும், பீற்றர் நெவில் 83 ஓட்டங்களையும், எட் கொவான் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ரீவன் பின் 5 இலக்குகளையும், ஸ்ருவேர்ட் ப்ரோட் 4 இலக்குகளையும், போய்ட் ராங்கின் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 302 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. முதலாவது இலக்கை 19 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, இரண்டாவது இலக்குக்காக 143 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறப்பான நிலையை அடைந்தது.
துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜொனதன் ட்றொட் 83 ஓட்டங்களையும், அலஸ்ரெயர் குக் 81 ஓட்டங்களையும், கெவின் பீற்றர்சன் 57 ஓட்டங்களையும், இயன் பெல் 35 ஓட்டங்களையும், ஜோ றூட் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அழைப்புப் பதினொருவர் அணி சார்பாக ஜொஸ் லேலொர், ஜேம்ஸ் முர்றிஹெட் இருவரும் தலா 2 இலக்குகளையும், நிக்கொலஸ் பில்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (த)



# கொழும்பில் ஆரம்பமானது பொதுநலவாய உச்சி மாநாடு

## தொடக்கி வைத்தார் சார்ள்ஸ்

கொழும்பு, நவ.16
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறும் பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் பங்கேற்கும் 23 ஆவது உச்சி மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு நேற்றுக்காலை 10.15 மணிக்கு தாமரைத் தடாக மஹிந்த ராஜபக்ஷ கலையரங்கில் பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் தலைமையில் மிகவும் கோலாகலமாக ஆரம்பமாகியது.

மாநாட்டில் பங்கேற்பதற்காக இலங்கை வந்த 54 நாடுகளின் சர்வதேசப் பிரதிநிதிகளுக்கு தாமரைத் தடாகக் கலையரங்கில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. அத்துடன், சர்வதேசப் பிரதிநிதிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவரது பாரியார், பொதுநல வாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ்சர்மா அவரது மனைவியார், ஆஸ்திரேலியப் பிரதமர் டொனி அபோட் ஆகியோர் சம்பிரதாய பூர்வமாக வரவேற்றனர்.

பிரிட்டன் மகாராணி எலிசபத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இளவரசர் சார்ள்ஸ் பங்கேற்றார். அவருடன் அவரது மனைவி கமிலாவும் மாநாட்டில் பங்கேற்றார். காலை 9.30 மணிமுதல் சர்வதேசப் பிரதிநிதிகளுக்கென ஒழுங்குசெய்யப்பட்ட பிரத்தியேகமான காரில் மாநாடு இடம்பெறும் தாமரைத் தடாக கலையரங்குக்கு அவர்கள் அழைத்துவரப்பட்டனர்.

### அலங்கரிக்கப்பட்ட மாநாட்டு மண்டபம்

பொதுநலவாய மாநாடு நடைபெறும் தாமரைத் தடாக மண்டபமும்அதன்வளாகமும்நேற்று விழாக் கோலம் பூண்டிருந்தது. பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் 54 நாடுகளின் தேசிய கொடிகளும் மாநாட்டு முன்றலில் ஏற்றிவிடப்பட்டிருந்தன. மாநாட்டுச் சின்னமும் ஆங்காங்கே காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. மாநாட்டு மண்டப வளாகத்தில் கடும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

### மாநாடு ஆரம்பம்

மு.ப. 10.15 மணிக்கு சர்வதேசப் பிரதிநிதிகள் அனைவரும் மாநாட்டு மண்டபத்துக்கு வந்ததையடுத்து, அங்கு வந்த பிரிட்டிஜ் இளவரசர் சார்ள்ஸ் மண்டபத்துக்கு வந்தார். சர்வதேசப் பிரதிநிதிகள், மாநாட்டு மேடையில் அமைக்கப்பட்டிருந்த ஆசனங்களில் அமர்ந்ததன் பின்னர், இளவரசர் சார்ள்ஸால் மாநாடு உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாநாட்டினை ஆரம்பித்து வைக்கும் முகமாக இலங்கையின் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இதையடுத்து வர வேற்பு நடன நிகழ்வும் இடம்பெற்றதுடன், இலங்கையின் முன்னணி இசைக் கலைஞர்களினால் பாடலும் பாடப்பட்டது.

### விசேட உரை

பொதுநலவாய அமைப்புக்கு இன்னும் இரண்டு வருடங்கள் தலைமைப் பதவியை ஏற்கவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மாநாட்டில் முதலாவதாக உரையாற்றினார். இதையடுத்து, பொதுநலவாய அமைப்பின் செய்லாளர் நர்யகம் கமலேஷ் சர்மா உரையாற்றினார். பின்னர் இளவரசர் சார்ள்ஸ் உரையாற்றினார். இறுதியாக பெதுநலவாயஅமைப்பின் தற்போதைய தலைவர்ஆஸ்திரேலிய பிரதமர் டொனி அபோர்ட் உரையாற்றினார்.இதையடுத்து, பொது நலவாய அரச தலைவர்களின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மேற்படி நான்கு தலைவர்கள் உள்ளிட்ட சர்வதேசத் தலைவர்களும் மண்டபத்தை விட்டு வெளியேறினர். இதையடுத்து ஆரம்ப நிகழ்வுகள் யாவும் நேற்றுக்காலை 11.30 மணிக்கு முடிவடைந்தது.

### எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று ஆரம்பமான பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் 23 ஆவது உச்சி மாநாட்டை எதிர்க்கட்சிகள் முழுமையாகப் புறக்கணித்தன.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. முதலான கட்சிகளின் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் கொழும்பு தாமரைத் தாடாக கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை ஆரம்பமான பொதுநலவாய மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்கவில்லை.

அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே தாம் மாநாட்டைப் புறக்கணிக்கிறார்கள் என எதிர்க்கட்சிகள் அறிவிப்பு விடுத்துள்ளன.

### 24 ஆவது மாநாடு மொரிஸியஸில்

1989 ஆம் ஆண்டு மலேஷியாவின் தலைநகர் கோலாலம்பூரில் இடம்பெற்றதையடுத்து, 24 வருடங்களின் பின்னர் தற்போது ஆசிய நாடொன்றில் பொதுநலவாய மாநாடு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதேவேளை, 2015 ஆம் ஆண்டு நடைபெற விருக்கும் 24 ஆவது பொதுநலவாய மாநாடு ஆபிரிக்க நாடான மொரிஸியஸ் தீவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங-சி)

# சனல் 4 ஊடகரிடம் கதறிய உறவுகள்



யாழ்ப்பாணம், நவ. 16
யாழ்மாவட்டத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்த சனல் -4 ஊடகவியலாளர்கள், காணாமற்போனோரின் உறவுகளைக் கட்டிப்பிடித்து அழுத காட்சி எல்லோரையும் மனம் நெகிழ வைத்தது.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனுடன் சனல் - 4 ஊடகவியலாளரான ஜோன் ஷோ யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்திருந்தார்.

யாழ். பொது நூலகத்துக்கு முன்பாக காணாமற்போனோரின் உறவுகள் பெரும் எடுப்பில் போராட்டம் நடத்தினர். இதனைக் கண்ணுற்ற சனல் - 4 ஊடகவியலாளர் காணாமற்போனோரின் உறவுகளுடன் கலந்துரையாடினார்.

காணாமற்போனோரின் உறவுகள் கண்ணீர்விட்டுக் கதறியழுதபோது சனல் - 4 ஊடகவியலாளரது கண்களும் கலங்கின. அவரும் கூட வந்த ஏனைய சர்வதேச ஊடகவியலாளர்களும் மக்களிடமிருந்து சகல ஆவணங்களையும் பெற்றுக் கொண்டார். (ங-5)

# சம்பூரில் இன்று போராட்டம்

சம்பூர் உயர் பாதுகாப்பு வலயத்தில் தமிழ் மக்களின் நிலங்கள் ஆக்கிர மிக்கப்படுவதைக் கண்டித்தும், மீளக் குடியேற்றத்தை வலியுறுத்தியும் இன்று காலை 9 மணியிலிருந்து முற்பகல் 11 மணிவரை கிளிவெட்டி நலன்புரி நிலையத்துக்கு முன்னால் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர்கள், கிழக்கு மாகாணசபை உறுப் பினர்கள், இடம்பெயர்ந்த சம்பூர் மக்கள் எனப் பலர் கலந்துகொள்வர்.

## பிற்போடப்பட்டுள்ளது

சங்கானை மக்கள் வங்கியில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட இருந்த சிறுவர் தின நிகழ்வுகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 7ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ங-400-29)

காணி விற்பனைக்கு
விதான்ஸ் லேன் (விதானையார் ஒழுங்கை) சுண்டிக்குளியில் நான்கு துண்டு காணிகள் விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தேவை இல்லை.
தொடர்பு : 077 7755175

கனடா படிக்க உழைக்க
ஆலோசனைக்கட்டணம் பகுதிகளாகச் செலுத்தப்படலாம்.
உணவு இருப்பிடம் இலவசம் மிகமலிவானது சொற்பவாய்ப்புக்களே இன்னும் கைவசம் சட்ட ஆலோசனைக்கு
திசைகாட்டி (பிறை) லிமிட்
175, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்.
021 2219016, 021 5689090

வேலைவாய்ப்பு
யாழ். நகரில் முன்னணியாக திகழும் எமது சுற்றுலாத்துறை நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.
* Chief Engineer
* Engineer
* General Machanic
* Electrician
* Plumbar
*Ac. Technician
ஆர்வமுடையயோர் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.
கிறீன் கிறாஸ் ஹோட்டல்,
இல.33 ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

French Classes பிரெஞ் வகுப்புகள்
French மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் Alliance Française de Jaffna (AF) மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகின்றன. முற்கூட்டியே (தொ.பேசி மூலமும்) அனுமதிகளைப் பெறுவது சிறந்தது.
மேலதிக விபரங்களுக்கு T.P.021.222.8093 / நேரில்
61, Kachcheri-Nallur Road, Jaffna
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

ஆஸ்திரேலியாவில் படிக்க, உழைக்க IELTS தேவையில்லை
HOTEL முகாமைத்துவம்
விசா வகை 457
குடும்பமாகவும் சென்று PR பெறலாம்
திசைகாட்டி (பிறை) லிமிட்
175 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090

மலேசியா நாட்டில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலை வாய்ப்பு
* T.Shirt Pakking வேலை
* Airport Cleaning
* Security Card
* Road Work மற்றும் மலேசியா தமிழ் வீடுகளில் வீட்டுப் பணிப்பெண்ணாக தொழில் புரிய பெண்கள் தொடர்பு கொள்ளவும். (Work permit)
(29548) (12.3.6)
தொடர்பு: LANKA VOICE 075 065 0084

வியாபார / அலுவலக இடம் வாடகைக்கு
7 Rooms, 3 Reception Halls,
3 Bathrooms, 3 Phase Electricity
மற்றும் தண்ணீர் வசதியுடன் கூடிய வியாபார/அலுவலக பாவனைக்கு உகந்த இடம் யாழ். பொது நூலகத்துக்கு முன்னால் வாடகைக்கு உள்ளது.
தொடர்பு:- 0777 696443
077 8433238

டுபாய் நாட்டில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு
Restaurant, Super market, Hospital போன்றவற்றில் Cleaning ஆக பணிபுரிய அரியதோர் சந்தர்ப்பம். அதிஉயர் சம்பளம், உணவு, தங்குமிடம், மருத்துவம் இலவசம், ஒப்பந்த காலம் 2 வருடம், வயது எல்லை 20-35 வரை. ஆண்/பெண் வீசா கைவசம் உள்ளதால் மூன்று வாரத்துக்குள் பயணமாகலாம். Passport சகிதம் விரையுங்கள்
★டுபாய் நாட்டில் செல்வந்த வீடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாகப் பணிபுரிய உடன் தொடர்பு கொள்ளவும். நாளை (17.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். யாழ்ப்பாணம் Hospital வீதி, ஆசிர்வாதம் ஒழுங்கையில் அமைந்துள்ள Green grass Hotel இல்
(C/7505) (4.6.3)
தொடர்பு: LANKA VOICE 077 792 9475

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.